# கற்க கசடற..



வள்ளியம்மை சுப்பிரமணியம்

சத்தியமனை வெளியீடு

# கற்க கசடற...

வள்ளியம்மை சுப்பிரமணியம்

சத்தியமனை வெளியீடு

நூல் பெயர்:– கற்க கசடற... (குறுநாவல்)
ஆசிரியர்:– வள்ளியம்மை சுப்பிரமணியம்
மெய்ப்புப் பார்த்துத் தமிழ் தட்டச்சு மூலம் எழுத்துத் திருத்தியது:– செல்வி மல்லிகா செல்வரத்தினம்
முதற்பதிப்பு:– ஜனவரி 2022
(தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் & வள்ளியம்மை அவர்களின் 60வது திருமண ஆண்டு நிறைவு நினைவாக...)

பதிப்புரிமை:– இந்த மின்னூல் உரிமை: கிரியேட்டிவ் காமன்ஸ் பண்புக்கூறு– ஷேர்அலைக் 3.0 இறக்குமதி செய்யப்படாத மற்றும் GNU இலவச ஆவண உரிமம் (மாற்றப்படாதது, மாறாத பிரிவுகள், முன் அட்டை நூல்கள் அல்லது பின் அட்டை நூல்கள் இல்லாமல்) அனைத்துப் பக்கங்களும் படைப்பாக்கப் பொதுமங்கள் அனுமதியுடன் பகிரப்பட்டுள்ளன.

முகவரி:– சத்தியமனை, சுழிபுரம். இலங்கை
வெளியீடு:– சத்தியமனை வெளியீடு
அச்சாக்கம்:– ஜே.எஸ்.பிறின்ரேர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு. இலங்கை
விலை:– ரூ 300

Book Name:– Katka Kasadara... (Short Novel in Tamil)
Author:– Valliammai Subramaniam
Edited and typed in Tamil: Ms. Mallika Selvarathnam
First Published:– January 2021
Copyright:– This ebook License: Creative Commons Attribution–ShareAlike 3.0 Unported and GNU Free Documentation License (unversioned, with no invariant sections, front–cover texts, or back–cover texts)
Address:– Sathiamanai, Chulipuram. Sri Lanka
E.mail / Face book:– valli1398@gmail.com, sathiamanai@gmail.com
WhatsApp:– +94 750 555 333
TP:– +94 212 251 798
Printed by:– J.S.Printers, Sillalai Road, Pandetherippu. Sri Lanka
Price– Rs 300/=

# பதிப்புரை

எண்பது அகவை கடந்து வாழ்ந்து வரும் வள்ளியம்மை சுப்பிரமணியம் தனது வாழ்வின் அனுபவங்களிலிருந்தும் தேறி 21ம் நூற்றாண்டின் இளைய தலை முறையினர் எப்படி பண்பட்டு வாழவேண்டும் என்ற தனது எதிர்பார்ப்புக்களை எழுத்துகளாக வடித்து 'கற்க கசடற' எனும் இந்த குறுநாவலைத் தந்திருக்கின்றார்.

இளமையில் பாலபண்டிதர் தேர்வில் தேறி வீரகேசரி, கலைமதி போன்ற பத்திரிகைகளில் சிறுகதைகள் எழுதி வந்த இவர் இல்லறவாழ்வில் அடியெடுத்ததன் பின் நெசவு ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்தவில்லை எனிலும் முதுமையில் சிங்கப்பூரில் தனது மகனுடன் வசித்துவந்த காலத்தில் கவிதைகள் பல யாத்து அந்நாட்டில் விருதுகளைப் பெற்றுச் சிறந்திருக்கின்றார். நவீன தொழில்நுட்ப கருவிகளையும் பயன்படுத்தி நேரடியாக கணனி எழுத்துருவில் ஆக்கங்களை பதியும் ஆற்றல் பெற்றவர்.

நோயுற்ற போதும் தனது எழுத்து எனும் இயக்கத்தை விடாது அபரிமிதமான ஞாபக சக்தியினால் எம்மை வியப்பிலாழ்த்தும் தோழர் வள்ளியம்மை சுப்பிரமணியம் மேலும் நூற்றாண்டு கண்டு வாழ்ந்திட வாழ்த்துகளை உதிர்க்கும் இத்தருணம் அவரது இந்த அனுபவங்களை இளைய தலைமுறை கற்றுணர்ந்து தெளிவு பெற வேண்டும் என்பது எமது ஆவல்.

தனது இணையர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் அடியொற்றி அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், தோழர்கள், உறவினரின் ஒத்துழைப்புடன் சத்தியமனையில் நினைவு நூலகம் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம், வள்ளியம்மை தம்பதிகளின் திருமண நாளின் 60வது ஆண்டு நினைவுநாளான ஜனவரி 19ந்திகதியில் அமையும்

இத்தருணத்தில் இந்நூல் வெளிவரவேண்டும் என்ற உந்துதலில் இந்த நூலைக் குறுகிய கால அவகாசத்தில் தயாரித்து வழங்குகின்றோம்.

ஏலவே இருவருடங்களுக்கு முன் தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாக இவரது கவிதைகளும் சிறுகதைகளும் 'வெற்றிக்கு வலிகள் தேவை' என்ற தொகுதியும் வெளிவந்து வரவேற்பு பெற்றது. தான் கற்ற பாடசாலை பற்றிய 'பசுமையான நினைவுகளில் பண்ணாகம் மெய்கண்டான்' எனும் நூலும் காலங்கருதி வெளிவந்த பொக்கிசமாகத் திகழ்கிறது.

தொடர்ந்து தாயகம், ஜீவநதி, எங்கள் முற்றம் இதழ்களிலும் முகநூலிலும் எழுதி வரும் சிறுகதைகள், கவிதைகள், வாழ்வின் சந்திப்புகள் நூலுருப் பெற வேண்டும் என்பது எமது விருப்பாக இருக்கின்றது.

வெளியீட்டில் ஒத்துழைத்த மல்லிகா செல்வரத்தினம், அட்டை வடிவமைத்த இ. சத்தியமலர் (பபி) ஆகியோருக்கும் குறுகிய கால அவகாசத்தில் நூலை அச்சிட்ட ஜே. எஸ். பிறின்டேஸ் நிறுவனத்திற்கும் தேசியகலை இலக்கியப் பேரவை, சவுத் விஷன் புக்ஸ், சென்னை தோழர்களுக்கும் நன்றிகள்.

'சத்தியமனை வெளியீடு' சார்பாக

அழ. பகீரதன்

*19.01.2022*

# என்னுரை

*அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய வாசகர்களே! இப்பொழுது உங்கள் கைகளில் "கற்க கசடற..." என்ற இந்தக் குறுநாவல் தவழ்கிறது. அதனை விரித்து வாசிக்க முன், இந்த முன்னுரையாகிய என்னுரையை வாசியுங்கள்!*

*இந்த ஈழமணித் திருநாட்டில் பிறந்து, வளர்ந்து, படித்து, காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் பொறியியற் பயிலுநராகக் கடமையாற்றி, இடதுசாரிக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, இந்நாட்டில் வாழும் அடக்கி ஒடுக்கப்பட்ட ஏழை மக்களுக்காகத் தன் குரலை மட்டுமல்ல; உடல், பொருள், ஆவி அத்தனையும் துறந்து பாதி வயதில் உயிர்நீத்த (பொலிஸாரின் தடியடிகளினால் நொருங்கிய உடலுடன்) ஒரு சமூகப் போராளியின் வாழ்க்கைத் துணைவியாகிய எனது இந்தக் குறுநாவலில்- எனது கணவனின் ஆயிரத்தில் ஒரு பங்கையாவது நீங்கள் எதிர்பார்த்திருப்பீர்கள். ஆனால், அது இங்கே கிடையாது.*

*அன்னாரது அடியொற்றி வாழ்ந்த நான், அவரது புனிதமான கொள்கைக்கோ போராட்ட நடவடிக்கைகளுக்கோ ஒருபொழுதும் மறுப்புத் தெரிவித்தவளல்ல; அவரது அடியொற்றிப் புரட்சிகர மேதின ஊர்வலங்களில் பங்கேற்று வாழ்ந்திருக்கிறேன். முற்போக்குப் பத்திரிகைகளான தேசாபிமானி, தொழிலாளி, செம்பதாகை, புதிய பூமி முதலானவற்றின் தீவிர வாசிப்பாளராகவும், இலக்கியப் பத்திரிகையான 'தாயக'த்திற்கு சில விடயதானங்கள் எழுதுபவராகவும் செயலாற்றியிருக்கிறேன். பொதுவுடைமைவாதிகள் பிறப்பதில்லை, மக்களால் உருவாக்கப் படுகிறார்கள். எனது துணைவன்- குழந்தை இல்லாத தனது மூத்த சகோதரியின் செல்லப் பிள்ளையாகக் கொழும்பில் வளர்ந்து, சென்.ஜோஸேப் கல்லூரியிலும் பின்னர் இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி விடுதியிலும் தங்கிப் படித்தவர். தூங்கும் நேரம் தவிர, மற்றைய நேரங்களில் காலை விட்டு சப்பாத்து,*

சொக்ஸ் கழற்றாத செல்லப் பிள்ளையாக வளர்ந்தவர். அப்படியான ஒருவர் காலில் செருப்பும் இல்லாது தார் உருகும் கொதி வெயிலில் வெறும் காலுடன் நடந்து பத்திரிகைகள், புத்தகங்கள் விற்கவும் ஆர்வமுள்ள தோழர்களை அணி சேர்க்கவும் தனது பசி, தாகம் பாராது வாழ்ந்தாரென்றால், அவரது எளிமையான வாழ்க்கை முறையைச் சொல்லவும் வேண்டுமா?

அவரது தமக்கையார் இவரின் சிறுவயதில் இந்திய சுதந்திரப் போராட்டக் கதைகளையும் 'தியாகபூமி' என்ற சினிமாவைக் காண்பித்தும் ஒரு புத்தாக்க- புரட்சிகரச் சிந்தையுள்ள சிறுவனாக அவரை வளர்த்தார். அந்த அக்காவின் திடீர் மறைவின் பின்னர் அவர் காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் பொறியியல் பயிலுநராகச் சேர்ந்து கடமையாற்றினார். அங்கு தொழில் புரிந்த சில முற்போக்குக் கொள்கையுள்ள நண்பர்கள் கொடுக்கும் 'ஜனசக்தி', பகவத்சிங்கின் 'தூக்கு மேடைக் குறிப்பு' இப்படியான பத்திரிகைகள், சஞ்சிகைகளை வாசிப்பார். மேற்படி தொழிற்சாலையில் இயங்கும் சிற்றுண்டிச்சாலைகள் இரண்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் தேநீர் அருந்தும் கடைக்குள் சென்று தேநீர் அருந்துவார். இந்தச் செயலானது அவருடைய நெருங்கிய உறவினர்களுக்குப் பிடிக்கவில்லை. அவரைக் கண்டித்துப் பார்த்தார்கள். அவர் திருந்துவதாகத் தெரியவில்லை.

இந்த நேரத்தில் சீமெந்துக் கூட்டுத்தாபன அமைப்பு அவரை ஜேர்மனி நாட்டிற்கு புலைமைப்பரிசில் மூலம் சென்று தொழில் நுட்பக் கல்வி கற்கப் பரிந்துரைத்தது. அக்கற்கை நெறிக்கு இரண்டு வருடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு அங்கு புறப்படத் தயாராக இருந்த வேளையில், "எப்படியாவது இவனை (அவர்களது மொழியில்) எளிய சாதிகளின் கன்றினில் தேத்தண்ணி குடிக்கிற இந்த நாயை ஜேர்மனிக்கு அதுவும், 'ஸ்கொலர்ஷிப் படிப்புக்கு'...சேச்சே...! ஒருநாளும் நடக்கவிடக்கூடாது" என்று கங்கணங்கட்டி ஒரு பொய்க் குற்றச்சாட்டைச் சிருஷ்டித்து- அது போர்மன் தேவராசாவுக்கு மாடியிலிருந்து இறங்கி வரும்பொழுது யாரோ லைட்டை நிறுத்திப்போட்டு அடித்துவிட்டார்களாம். சம்பவம் என்னவோ உண்மைதான். ஆனால், அடித்தது மணியம் அல்ல. பல சூது வாதுகள் செய்து மணியத்தை வேலையிலிருந்து தூக்கியது மட்டுமல்ல, கிடைத்த 'ஸ்கொலர்ஷிப்' படிப்பையும் வேறு ஒருவருக்கு மாற்றிக் கொடுத்துவிட்டார்கள்.

மணியம் அன்றிலிருந்து வேறு எந்த வேலையும் தேடாது இலங்கைக்

கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராகச் சேவை செய்யத் தொடங்கினார். அதனைத் தொடர்ந்து அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் எங்கு நடைபெறுகிறதோ அங்கெல்லாம் தானும் ஒருவராகக் கலந்துகொண்டு பங்களிப்பு வழங்கி வந்தார்.

1966 ஒக்டோபர் 21 எழுச்சியை முன்னிட்டு சுன்னாகத்தில் நடந்த சாதி எதிர்ப்புக் கோஷங்களான 'சாதி அடக்குமுறை தகரட்டும்; சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற பதாகைகளைக் கையில் ஏந்தி ஊர்வலம் புறப்பட்ட தோழர்களைப் பொலிஸார் தமது கையிலுள்ள லத்திகளினால் தாக்கியதுடன், ஓர் அறையுள் பூட்டியும் வைத்தனர். கைது செய்யப்பட்ட வீ.ஏ.கந்தசாமி, கே. ஏ. சுப்பிரமணியம், ஆர். கே.சூடாமணி ஆகிய மூவரும் மருத்துவ சிகிச்சைக்காக நள்ளிரவில் ஜாமீனில் விடுதலையானார்கள். ஆனால் நீதிமன்ற வழக்கு சில ஆண்டுகள் தொடர்ந்தது. குற்றவாளிகள் சார்பாக, அனைத்துலக அரசியல் சட்ட நுணுக்கங்களில் அசாத்தியமான நுண்ணறிவும் திறனும் கொண்ட சட்ட நிபுணர் நடேசன் சத்தியேந்திரா ஆஜராகி விடுதலை பெற்றுக் கொடுத்தார்.

பின்னர் 1969ம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியன்று அனுமதி மறுக்கப்பட்ட மேதின ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கிச் சென்றதால், பொலிஸாரின் தடியடிகளாலும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளாலும் தாக்கப்பட்டார். நையப்புடைக்கப்பட்ட மணியத்துடன் இன்னும் இரண்டு தோழர்களை (மட்டுவில் நடராசா, விரு. மரைக்காயர்) யாழ். வைத்தியசாலையில் வைத்து வைத்தியம் செய்தனர். வலது பக்கத் தோள்மூட்டு நன்கு சிதைவுற்றதனால், அந்தக் கையைக் கழற்ற வேண்டிய நிலையை- எடுத்த கதிர்ப்படம் (X-ray) காட்டியது. நல்ல காலம்; அந்நாட்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் முறிவு தறிவுப் பகுதியில் கடமையாற்றிய டாக்டர்களின் திறமையினால், கழன்ற கையை ஒரு தாங்கு துணி போட்டுத் தூக்கிக் கழுத்துடன் சேர்த்துக் கட்டி மாதக்கணக்காக வைத்தியம் செய்யப் பட்டது. பின்னர் கொழும்பு கொள்ளுப்பிட்டிக்கு கட்சியின் பொதுச் செயலாளர் நா. சண்முகதாசன் அவர்களின் மேற்பார்வையின் கீழ் சிங்கள பாரம்பரிய எண்ணெய், புக்கை கட்டுதல் போன்ற ஹோமியோபதி வைத்தியத்தால் ஓரளவு சுகப்படுத்தினாலும், 'ஒரு சிறு பாரத்தையும் தூக்கவே கூடாது' என்ற வைத்திய ஆலோசனைகளுடன் மிகுதி (1969-1989) 20 ஆண்டுகள் நோயாளியாகவே வாழ்ந்து தனது இறுதி மூச்சை நிறுத்தினார்.

எவ்வளவுதான் உடல்நிலை தாக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு கணமாவது தன் இயலாமையை மற்றத் தோழர்களுக்குக் காட்டிக்கொள்ள மாட்டார். அவர்கள் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து அணிதிரண்டு இருக்கும் நேரத்தில், அவர்களின் மனதில் ஒரு பின்னடைவு வருவதற்கு வழிகாட்டியாகச் செயற்படமாட்டார்.

அப்படியான ஒருவருடன் 27 ஆண்டுகள் வாழ்ந்த நான், வட்டுக்கோட்டை- இறாத்தலடி, நீலிப்பந்தனை- காரைநகர், பணிப்புலம்- பண்டத்தரிப்பு, வடலியடைப்பு- பண்டத்தரிப்பு, மூட்டடி- தொல்புரம், அம்மன் கோவிலடி- வழக்கம்பரை, பிள்ளையார் கோவிலடி- மூளாய் ஆகிய இடங்களில் அமைந்த அரசினர் நெசவு நிலையங்களில் பொறுப்பதிகாரியாகவும் போதனாசிரியராகவும் கடமையாற்றியவள். அங்கு தொழில் செய்ய வருகைதந்த அத்தனை பிள்ளைகளும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்களே! அந்தக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்த மாதர் சங்க நிர்வாகிகளோ அன்றி, கிராம முன்னேற்றச் சங்க நிர்வாகிகளோ உள்நிலைய நிர்வாகத்தில் தலையிட முடியாது. இருந்தும், அவர்கள் தங்கள் வேண்டாத தலையீட்டினைச் செலுத்தி இறுதியில் அவமானத்தைச் சந்திக்க நேர்ந்ததோடல்லாமல், வெற்றி கண்டதில்லை.

உதாரணமாக:- ஒரு நிலையத்தைச் சொந்த நிலத்துள் கட்ட உதவி அரசாங்கத்துக்கு அனுமதியளித்த ஒருவர், அங்கு நடைபெறும் நிர்வாகத்திலும் தனது அதிகாரத்தைச் செலுத்த ஆவல் கொண்டார். "எவ்வளவோ கட்டுக்கோப்பான எங்கள் கிராமத்தில் 'சகல சாதிக்கும் வேலை செய்து உழைக்கட்டும்' என்று ஒரு கட்டிடத்தைக் கட்டிக்கொடுத்தால், அங்கு கடமையாற்ற நீங்கள் அனுப்பிவைத்த ஆசிரியை 'ஒரு மண் குடத்துத் தண்ணீரைச் சகல சாதியினரும் குடிக்கலாம்' என்ற நடைமுறையைக் கையாள்வது எவ்வளவு கீழ்த்தரமான செயலாகும்" என்று எழுதி எமது இலாகா அத்தியட்சகருக்கு அனுப்பியது மட்டுமல்லாது, " தாங்கள் நேரில் வந்து இந்த அநியாயத்தைப் பார்த்து ஏற்ற நடவடிக்கை எடுங்கள்" என்ற அந்தக் கடிதத்தை எங்கள் இலாகா அதிபர் அவர்கள் எனக்குக் காட்டி, "எங்கடை ரீச்சர்மார் தங்கடை கடமைகளைச் செய்யவிடாமல் அதிகாரம் காட்டுகிற சில சங்கங்கள் எதற்குத்தான் 'பொதுச் சேவை' என்ற பசுத்தோலைப் போர்த்துகிற புலிபோல இருக்கின்றனவோ தெரியவில்லை" என்று கூறிச் சிரித்தார். அவர் ஒரு கிறிஸ்தவர். இந்தச் சாதி பேதமெல்லாம் கடந்த சமதர்மவாதி!

அப்படித்தான் நான் கடமையாற்றிய ஏழு 7 நிலையங்களிலும் கட்டிடத்தைக் கட்டிக்கொடுத்த மாதர் சங்கத் தலைவியோ, கிராமச் சங்கத் தலைவனோ தங்களுடைய அதிகாரத்துக்கு அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட ஆசிரியையும் அங்கு வேலை செய்ய வரும் பிள்ளைகளும் தங்களின் கட்டுப்பாட்டின்படிதான் நடக்க வேண்டுமென எதிர்பார்த்து, இறுதியில் தோல்வியைத்தான் தழுவினர்.

எனக்கும் எனது துணைவருக்கும் கொள்கை ஒன்றாக இருந்தாலும், அதனை நடைமுறைப்படுத்தும் அணுகுமுறை வேறு வேறாக இருந்தது. அதன் அத்திவாரத்தில் எழுந்ததுதான் இந்த "கற்க கசடற..." என்ற குறுநாவலாகும். சேவை மனப்பான்மையும் ஜீவகாருண்யமும் நிறைந்த ஒரு மனிதன், மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டாதவனாகவும் தன்னால் இயன்றவரை வறியோர்க்கு உதவுபவனாகவும் தன் இறுதி மூச்சுவரை வாழ்ந்தவனாகவும் இருக்க வேண்டும். அதனை ஒரு குடும்ப அங்கத்தவர்களே தமது வாழ்நாளில் கடைப்பிடித்து வாழும்போது சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் எவ்வாறு சுலபமாகக் கையாள்கிறார்கள் என்பதை உள்ளடக்கியதே இக்கதை!

ஒருவருமே எதிர்ப்புக் காட்டவில்லையா? எப்படிக் கலப்புத் திருமணங்களை ஏற்றுக்கொண்டதுமல்லாமல் தொடர்ந்து உறவு முறைகளைப் பேணி நடந்தார்கள்? சகோதர சகோதரிகளுக் கிடையில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் சண்டை, பூசல் ஏற்படவில்லையா? 'எனது பணம்' என்ற அதிகாரக் குரல்கள் எழவில்லையா? என்று வாசகர்களாகிய உங்களிடமிருந்து கேள்விகள் வரத்தான் செய்யும். ஏன், எப்போதும் எழுதுவதை விட ஒரு வித்தியாசமான கண்ணோட்டத்தில் நான் எழுதக்கூடாதா? காலகாலமாக இருந்துவரும் குரோத மனப்பான்மை, புரிந்துணர்வு இல்லாத பொறாமை இவற்றைத்தான் திரும்பத் திரும்ப நானும் எழுத வேண்டுமா? எனது எழுத்து ஒரு வித்தியாசமான பாதையில்- அதாவது, புதிய சந்ததிக்கு நல்லெண்ணங்கள் அடங்கிய சேவை உணர்வை வளர்க்கும் பாணியில் அமையக்கூடாதா?

இந்த நூல் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் வயோதிபர்கள், இளம் வயதினர், குழந்தைகள் இதனை வாசிக்கும்போது அவர்களுக்குப் புரியக்கூடிய இலகு தமிழில்தான் எழுதியுள்ளேன். அத்துடன், உங்கள் மனதில் இன்னுமொரு கேள்வி பிறக்கிறது. கோவில், தெய்வ வழிபாடு, ஆலய தரிசனம் காட்டப்படுகிறது என்பதே அது!

*நாம் வாழும் இந்தப் பரந்த பூமியிலே 2 சதவீதமான மக்களே கடவுள் கொள்கை மறுப்பாளர்களாக- அதாவது, நாத்திகர்களாக வாழ்கிறார்கள். மற்றையோர் கோவில், விரத அனுட்டானம், கும்பிடுதண்டம், அங்கப்பிரதட்சணம், கற்பூரச்சட்டி, காவடி எடுத்தல், தீயில் இறங்குதல், மொட்டை போடுதல் என்ற காலகாலமாக இருந்துவரும் நடைமுறைச் சாத்தியங்களிலிருந்து வெளியேற முடியாதவர்களாகவே வாழ்கின்றனர். மார்க்ஸிஸ- லெனினிஸ- மா ஓ சேதுங் சிந்தனைகள் திடீரென்று ஒருவரின் உள்ளத்துள் உடனே புகுந்துவிட முடியாது. புகுந்தாலும் அதனை நடைமுறைப்படுத்தி வாழ்வதில் அவரது குடும்ப அங்கத்தினர் அத்தனை பேரும் ஒத்துழைப்புக் கொடுப்பர் என்பது சாத்தியப்படுமா? ஆகவே, காலகாலமாக மனித வாழ்வில் புரையோடிப்போன புண்போல இருக்கும் மூடப்பழக்கங்களையும் வேண்டாத- அதாவது, மானிட வாழ்வுக்குத் தேவையற்ற போட்டி, பொறாமை, எரிச்சல், வஞ்சனை, சூது, குழிபறித்தல், பழிக்குப்பழி, கொலை, களவு ஆகியவைகள் கிட்டவும் அணுகாது மானிட வாழ்வு ஒன்று அமைந்து- அது மற்றவர்களுக்கும் வழிகாட்டும் பாதையாக அமையக்கூடாதா? ஏன், எல்லோரையும் போல விழுந்த பக்கத்துக்குக் குறிசுடும் மாடாகத்தான் இருக்க வேண்டுமா? வாசகர்களே! நீங்களே பதில் கூறுங்கள்!!*

*உழைப்பு இருக்க வேண்டும்; அதில் ஊதாரித்தனம் இருக்கக்கூடாது. காதல் இருக்க வேண்டும்; அதில் காமவிரசம் இருக்கக்கூடாது. வீடு, வாசல், வாகனம் ஒவ்வொருவருக்கும் தேவை. அதில் அளவுக்கு அதிகமான படாடோபம் இருக்கக்கூடாது. கடமைப்பட்டவர்களின் நினைவைக் காலமெல்லாம் மறக்காமல் நன்றியுணர்வுடன் வாழ வேண்டும். நொந்து போனவர்களுக்கு உதவுகையில், வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியாத வண்ணம் அந்தக் கொடுப்பனவு இருக்க வேண்டும். "தானுண்டது மண் உண்டது, பிறர் உண்டது சிவன் உண்டது" என்ற தர்ம சிந்தையை வளர்க்க வேண்டும். இந்த உணர்வுகள் ஒவ்வொருவரது மன ஆழத்திலும் இருக்குமானால், போட்டி, பொறாமை, கொலை, களவு என்பன ஏற்பட வாய்ப்பில்லையே!*

வள்ளியம்மை சுப்பிரமணியம்,
'சத்தியமனை', சுழிபுரம், இலங்கை.
*19, ஜனவரி, 2022*

# நூல் பற்றிய குறிப்பு...

இலங்கையின் வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்திலே, வட்டுக்கோட்டைத் தொகுதியிலே உள்ள சுழிபுரம் கிராமத்தில் வாழ்ந்த ஒரு விவசாயத் தொழிலாளியின் பிள்ளைகள் வளர்ந்து, தமது கல்வியினால் செல்வத்தைப் பெற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாது, "நாம் பெற்ற இன்பம், பெறுக இவ்வையகம்" என்ற பரந்த நோக்கில் வாழ்ந்த குடும்பத்தின் கதையை உள்ளடக்கியதாகும்- 'கற்க கசடற...' என்ற இந்தக் குறுநாவல்!

இந்தக் கதையில் அநேக கதாபாத்திரங்கள் பங்கெடுத்துக் கொள்கின்றனர். அவர்களின் மூன்று சந்ததிகளின் வரலாற்றை உள்ளடக்கியதே இக்கதை. நாம் கண்ணால் காணாத இராசா- இராணிக் கதைகளை மேடையில் பார்த்த எமக்கு, எம்மோடு வாழ்ந்து மறைந்த, நாம் வாழும் காலத்தில் வாழ்ந்த ஒரு சாதாரண உழைப்பாளிக் குடும்பத்தின் கதையே இது!

1. தகப்பன்:- நாகலிங்கம்
2. தாய்:- பொன்னம்மா
3. அம்மாச்சி:- தங்கமுத்து
4. மூத்த மகன்:- தேவகுமார் (மேசன் தொழிலாளி)
5. இரண்டாவது மகன்:- நந்தகுமார் (பட்டம் பெற்ற கண்டி விரிவுரையாளர்)
6. மூன்றாவது மகன்:- அசோக்குமார் (பட்டம் பெற்ற கொழும்பு பட வரைஞர்)

7. நான்காவது மகன்:- விநோத்குமார் (தொழில்- ரியூட்டறி, தோட்டம், LLB)

8. ஐந்தாவது மகன்:- ஆனந்தகுமார்- (தொழில்- ரியூட்டறி, தோட்டம், LLB)

9. ஆறாவது மகன்:- ஞானகுமார் (தனது பெரு முயற்சியால், விஞ்ஞான அறிவால் அமெரிக்க NASA வரை சென்றவர்.)

10. ஏழாவது மகள்:- பிரேமா- நன்கு கற்ற இசை ஆசிரியை

பெற்றோரை இழந்த தனது பேரப்பிள்ளைகளைச் சிறந்த முறையில் வளர்த்து ஆளாக்கும் அம்மாச்சி தங்கமுத்துதான் இக்கதையின் ஆணிவேராகத் திகள்கிறார்! அந்த வேரைப் பற்றிப் படர்ந்து கிளை பரப்பி, வீட்டுக்கும் நாட்டுக்கும் நிழல் கொடுக்கும் பிள்ளைகளின் வாழ்வியலைப் பேசுவதாகவே இக்கதை அமைந்துள்ளது. வாசகர்களாகிய நீங்களும் அதனைத் தரிசித்துப் பாருங்கள்!

# கற்க கசடற...

## 01

வலி. மேற்கிலுள்ள சுழிபுரம் கிராமத்தில் வாழ்ந்த நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதிகள், ஒரு குடும்பத் தலைவனும் தலைவியும் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்கள். மனித குலம் போற்றும் சிறந்த பண்புகள் அனைத்தையும் இவர்களிடத்தில் காணமுடியும். இவர்களுக்கு ஏழு ஸ்வரங்கள் போன்று ஏழு பிள்ளைகள். அனைவருமே பெற்றோரைப் போலக் குணக்குன்றுகள். நாகலிங்கம் விவசாயம் செய்தே குடும்ப சீவியத்தை செவ்வனே நடத்தி வந்தவர். மாரி பொய்க்கும் காலங்களில் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடினாலும், அங்கே அன்புக்கும் மகிழ்வுக்கும் எந்நாளும் குறை இருந்ததில்லை.

சந்தோஷ சாகரத்தில் மூழ்கிக்கொண்டிருந்த அந்தக் குடும்பத்தின் மீது யாருடைய கண் பட்டதோ தெரியவில்லை, ஒருநாள் நாகலிங்கம் வயலில் வேலை செய்துகொண்டிருந்த வேளையில் இடி மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகி உயிரிழந்துவிட்டார். பிள்ளைகள் சிறுவயதில் இருக்கும் போதே அவர் உயிரிழந்தமையால், குடும்பம் ஆட்டம் கண்டது. தந்தையற்ற பிள்ளைகளுக்குத் தந்தையுமாக இருந்து அவர்களைப் பராமரித்த தாயார் பொன்னம்மா, கணவனைப் பிரிந்த துயரினால் ஆட்கொள்ளப்பட்டு நாளும் பொழுதும் தேயும் நிலவானாள்.

நாளாக நாளாக பொன்னம்மா எழுந்து நடமாட முடியாத அளவுக்கு உடல் சோர்ந்து தளர்வுற்றாள். தனது பிள்ளைகளை நினைத்துத் தீராத துயருற்றாள். அவள் மரணப்படுக்கையில் இருக்கும்போது மூத்த மகனாகிய தேவகுமாரை அழைத்து,

“தம்பீ! அப்பா இல்லாத குடும்பம். நானும் எத்தனை நாளுக்குத்தான் உயிரோடு இருப்பேனெண்டு தெரியாதய்யா. உங்களுக்கு இளையதுகள் ஆறு சின்னச் சீவன்கள். அதுகள் வளரும் வரை அம்மாச்சியின்ர சொல்லுத் தட்டாத பிள்ளைகளாக வளர வேணுமய்யா. தம்பீ! நான்

இல்லாக்காலம்... நீ... ஒருநாளும் உன்ரை சகோதரங்களை விட்டு நீங்கிவிடக்கூடாதய்யா, இரக்கப்பட்ட சொந்தக்காரர் ஒரு பணக்கார வீட்டுப் பெண்ணை உனக்குக் கட்டி வைக்க முன்வந்தாலும், நீ அதுக்கு இடங்கொடுக்கக் கூடாதய்யா. பணக்கார வீட்டுப் பெண், தான் பிறந்த வீட்டுப் பெருமைகளைப் பேசிக்கொண்டு இருப்பாளே தவிர, உன்ரை தம்பிமாரை, தங்கையைக் கவனிக்கமாட்டாள். நீ எப்படியும்... கொஞ்சம் படித்த ஏழைக் குடும்பத்துப் பெண்ணைத்தான் கலியாணம் செய்ய வேணும். நான், தம்பி சிவலிங்கத்திடமும் இதைச் சொல்லி வைத்திருக்கிறேன்..." என்று மூச்சிரைக்கக் கூறினாள்.

தேவகுமார் கண் கலங்கியவாறு, "ஓம் அம்மா... நீங்க சொல்லுறதை நான் ஒரு காலமும் மறக்கமாட்டேன். எனக்கு என்ரை சகோதரங்கள் தான் எந்தநாளும் கண்ணுக்கு முன்னாலை நிற்கும் தெய்வங்கள். அதுகளைப் பிரிஞ்சு ஒருநாளும் வாழமாட்டன். உங்கடை சொல்லையும் தட்டமாட்டன். இது சத்தியம் அம்மா..." என்றான்.

பொன்னம்மா:- என்ரை ராசா... எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கு. நீ... நான் பெற்ற மூத்த செல்வம். உன்னை நம்பித்தானய்யா இந்தக் குஞ்சுகள் இருக்குதுகள்...

தேவகுமார்:- "அம்மா, நீங்க ஒன்றுக்கும் கவலைப்படாதையுங்க. எனக்கு என்ரை சகோதரங்களைத் தவிர வேறு ஒரு கவனமும் இருக்காது! நான் என் உயிர் உள்ளவரை அவர்களை எவ்வளவு முடியுமோ - அவ்வளவு அக்கறையுடன் பாதுகாத்துக்கொள்ளுவேன். அவர்களை நன்றாகப் படிக்க வைப்பேன். உணவு, உடை இவற்றிற்கு எந்தக் குறையும் வராமல் பார்த்துக்கொள்ளுவேனம்மா. நீங்க ஒன்றுக்கும் பயப்பிடாதீங்க. என்னை ஒரு தன்னம்பிக்கை உள்ள பிள்ளையாகப் பெற்று வளர்த்திருக்கிறீர்கள் அம்மா!

அம்மா! நீங்க ஒன்றுக்கும் கவலைப்படாதீங்க. நான் மாமாவின் சொற்படி நடப்பேன். அவரது வழிகாட்டலின் படி சகல வேலைகளையும் செய்வேன். நீங்க என்னை நம்புங்க" என்றார்.

பொன்னம்மா:- சரி ராசா. எனக்கு இப்ப மனம் நிம்மதிப்பட்டுவிட்டது. நித்திரை வருகுது போலை கிடக்கு... ஆ.. ஆ.. ஆ..

மூத்த மகனின் பொறுப்பான பதில்களைச் செவிமடுத்த பொன்னம்மாவின் உயிர் நிம்மதியடைந்தது. மரண வாசலை நோக்கி அவளது உயிர் பறக்கத் தொடங்கியது. சிறிது நேரத்தில் அந்தப்

பிஞ்சுகளின் அன்னை தனது இறுதி மூச்சை நிறுத்திக்கொண்டாள்- இளம் வயதில்!

## 02

தாயார் பொன்னம்மாவின் வார்த்தைகள் எந்நேரமும் தேவ குமாரின் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. மாலை நேரமானதும் ஆறு சகோதரர்களும் கால், முகம் கழுவி- அம்மாவின் படத்துக்குத் தீபமேற்றி வைத்து வணங்குவார்கள். பின்னர் வீட்டுப் பாடங்களைச் செய்து முடிப்பார்கள். அம்மாச்சி கொடுக்கும் உணவை உண்டபின் கழிவறை சென்று வந்து உறங்கச் செல்வார்கள்.

அதிகாலை பக்கத்திலுள்ள ஆலயமணியின் ஓசையைக் கேட்டு எழுந்து தமது காலைக்கடன்களை முடித்துவிட்டு, சமையலறையில் அம்மாச்சிக்கு ஏதாவது சரீர உதவிகள் செய்துவிட்டு, குளித்துப் பாடசாலைக்குச் செல்கிற வேலைகளில் ஈடுபடுவார்கள். தேநீரோ, காலையுணவோ முடிந்த பின்னர் தமது மதிய உணவுப் பெட்டியையும் புத்தகங்களையும் சரிபார்த்து எடுத்து வைத்துக்கொண்டு பள்ளிக்கூடம் நோக்கிப் புறப்பட்டுப் போவார்கள். பேரமக்கள் பள்ளி சென்ற பின்னர் தங்கமுத்து அம்மாச்சி சந்தைக்குப் போய், நாளைக்குத் தேவையான மரக்கறிகளை வாங்கி வருவார். சங்கக் கடைக்குச் சென்று அரிசி, சீனி, மா, பருப்பு, மண்ணெண்ணெய், தீப்பெட்டி போன்ற பொருட்களை வாங்கி வருவார். வெயிலிற் போய் வந்த களைப்புத் தீரக் குளித்துவிட்டு, காலை உணவை உண்டுவிட்டுச் சற்றுக் கண் அயர்வார்.

பேரமக்கள் பள்ளியால் திரும்பும் வேளை அவர்களுக்குத் தேநீர் தயாரிக்க அடுப்பு மூட்டி ஆயத்தங்கள் செய்து வைத்துவிட்டு, காலையில் ஊறவிட்ட உளுந்து, வெந்தயம், அரிசி இவற்றை ஆட்டுக்கல்லில் போட்டு நன்றாக அரைத்து, நாளைக் காலை தோசை சுடுவதற்கு ஆயத்தம் செய்து வைப்பார். தேங்காய் உரித்துக் கொடுப்பதும், விறகு சேகரித்து மழை படாமல் அசைவு கட்டி அவற்றை எடுத்து வைப்பதும் தேவகுமாரின் கடமையாக இருந்து வருகிறது. விழுகிற தென்னோலைகளை ஒன்றாகச் சேர்த்து மட்டையை வெட்டி அகற்றிவிட்டு இரண்டாகப் பிளந்து பின்னுவதற்கு ஆயத்தப்படுத்தி வைப்பதும் தேவகுமாரின் வேலைகளுள் அடங்கும்.

விளக்கேற்றும் நேரத்திற்கிடையில் இரவு உணவாகச் சோறும் குழம்பும் பருப்புக்கறியும் அம்மாச்சி தயார்ப்படுத்தி வைத்து விடுவார். அவர் பெரிதாகச் சோறு சாப்பிட விரும்பமாட்டார். வடித்த கஞ்சியுடன் கொஞ்சச் சோறும் போட்டுத் தேங்காய்ச் சொட்டையும் தோண்டி எடுத்துக் கடித்துக் குடிப்பார். அந்தக் கஞ்சிதான் அம்மாச்சியின் இரவு உணவு.

மூத்த மகன் தேவகுமார் குடும்ப வறுமையைக் கருத்திற் கொண்டு சிறுவயதிலேயே படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குச் செல்லத் தொடங்கிவிட்டார். ஆரம்பத்தில் அவர் கட்டிடத் தொழில் உதவியாளராகத்தான் (சித்தாள்) வேலை செய்தார். வளர்ந்த பின் கட்டிடத் தொழில்நுட்பங்கள் நன்கு தெரிந்த சிறந்த மேசன் ஆகிவிட்டார். மேசன் தொழில் செய்து கைநிறையச் சம்பாதித்துத் தன் சகோதரர்கள் அனைவரையும் நன்றாகப் படிப்பித்தார்.

சிறுவயதில் வறுமை. அம்மாச்சி தங்கமுத்துவின் பராமரிப்பில் சிக்கனச் சீவியம். சகோதரர்களை நன்கு படிக்க வைக்க வேண்டுமெனவும், அவர்கள் ஒவ்வொருவரும் தமது உழைப்பில் வாழ வேண்டுமெனவும் புத்திமதி கூறிய தாயார் பொன்னம்மாவின் இறுதி வார்த்தைகளைத் தினமும் நினைந்துகொள்கிறார் தேவகுமார். அன்றாடம் வேலைக்குப் போய்க் கையில் கிடைக்கும் சம்பளக் காசை அம்மாச்சி கையில் கொடுக்கிறார்.

அன்றன்று இரவு வேளைகளில் அவர்கள் ஆறு பேரும் பாடசாலையில் படித்த பாடங்களைத் திரும்பப் படிக்கவும், வீட்டு வேலைகள் கொடுக்கப்பட்டிருந்தால் அவற்றைச் செய்து முடித்த பின்னர்தான் நித்திரைக்குப் போகவேண்டுமென்பதும் தினசரிக் கடமையாகிறது.

தாய் மாமன் சிவலிங்கம் பள்ளி ஆசிரியராகவும் இந்தப் பெற்றாரற்ற பிள்ளைகளுக்குப் பாதுகாவலராகவும் விளங்குகிறார். அவருக்கு ஒரேயொரு மகன். சிறுவயதில் சிறுபிள்ளைவாதம் வந்தமையால் இடது கையும் வலது காலும் சூம்பிப்போய்- நடப்பதற்குச் சிரமப்படுகிற ஆளாக இருந்தாலும், தனது படிப்பில் முன்னிலை வகிக்கிறார். பெயர்- சமரன். அவரும் A/L படித்து முடித்து விட்டார்.

தேவகுமாரின் முதல் தம்பி நந்தகுமார் யாழ். பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர். அவர் தனது பட்டப் படிப்பு முடித்துக் கண்டிக்கு விரிவுரையாளராக நியமனம் பெற்றுச் செல்கிறார். அம்மாச்சி சகிதம் அவரை அனைவரும் வழியனுப்புகின்றனர்.

அவர்களிடமிருந்து நந்தகுமார் விடைபெறும் போது, "அம்மாச்சி! அண்ணா! நான் போய் வருகிறேன். போய்ச் சேர்ந்தவுடன் போன் பண்ணுவேன். நீங்கள் ஒன்றுக்கும் பயப்படாமல் இருங்க!" என்றார். அப்போது தேவகுமார், தங்கை பிரேமா, தம்பிமார் இவர்கள் பக்கம் பார்த்து- "என்ன கஷ்டம் வந்தாலும் படிப்பைக் கைவிட்டு விடாதையுங்க. அம்மாச்சியை, அண்ணாவைக் கவனமாகப் பாருங்க. நான் பள்ளி விடுமுறைக்கு ஊருக்கு வருவேன் தானே! தினமும் இரவில் போனில் தொடர்பு கொள்ளுவேன்" என்று கூறிவிட்டு வண்டியேறுகிறார்.

## 03

நந்தகுமார் கண்டியிலுள்ள கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய வேளையில்; தனது M.A பட்டத்தையும் முடித்து, பீடாதிபதி பதவியில் அமர்த்தப்பட்டார். கண்டியில் வசித்த முஸ்லீம் குடும்பத்துடன் தங்கியிருந்த நந்தகுமாரை அந்தக் குடும்பத்துப் பெற்றார், தங்களில் ஒருவராக அன்பு பாராட்டினர். அவர்களுக்கு ஒரேயொரு மகன். அவரும் ஆசிரியரே! வாப்பா முகமது, உம்மா ஆயிஷா, மகன் கன்சூர் மாஸ்டர், மகள் நூர்ஷஹான்.

அவர்களது வீடு பேராதனை வீதியில் முல்கம்பொல சந்திக்கு அயலில் அமைந்துள்ளது. அதைவிட ஒரு புடைவைக் கடையும் விருந்தினர் தங்கும் விடுதியும் அதே உடபார வீதியில் இருந்தன. அந்த இரண்டையும் இரண்டு வருடங்கள் கழிந்த பின் ஒரு வைத்தியசாலையாகவும் வயோதிபரைப் பராமரிக்கும் நிலையமாகவும் மாற்றினர். அந்த இரண்டு நிலையங்களின் பெயர்ப் பலகைகளும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன.

தனது தாதியப் பட்டத்தைப் பெற்றவுடன் பெற்றாரின் விருப்பப்படி இரண்டு நிலையங்களையும் நூர்ஷஹான்தான் பொறுப்பேற்று நடத்துகிறார். அவர் கற்ற கல்வியறிவு அவற்றை வழிநடத்த உதவுகிறது. தமையனார் கன்சூர் விரிவுரையாளராகக் கடமையாற்றினாலும், தனது லீவுக் காலங்களிலும் ஓய்வு கிடைக்கும் நேரங்களிலெல்லாம் மேற்படி இரண்டு இடங்களுக்கும் வந்து ஒத்துழைப்பு, மேற்பார்வை செய்யத்

தவறுவதேயில்லை. இரண்டு இடங்களும் "காசுக்கு வைத்தியம்", "காசுக்கு பராமரிப்பு" என்ற ரீதியில்தான் இயங்குகின்றன. ஒன்றுமே இலவசம் கிடையாது! இலவசமாக நடத்திய இரண்டொரு இடங்கள் இருந்த இடமே தெரியாமல் அழிந்துபோனதை அவர்கள் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள்.

காசுக்குச் செயற்படும் இடங்கள் தகுந்த கட்டுப்பாடுகளுடன் இயங்கு கின்றன. வருகையாளர்களும் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிக்கத் தவறுவதில்லை.

வைத்தியர்கள் தொடக்கம் சிற்றூழியர்கள் வரை சம்பளம் பெற்றே தமது கடமைகளைச் செய்கின்றனர். ஆகவே, அவர்களுக்கு வழங்கப்படும் வேதனம், கொள்வனவு செய்யும் மருந்துகள் இவற்றிற்கெல்லாம் பணம் வேண்டுமல்லவா? மாதா மாதம் சம்பளம் பெறும் ஒவ்வொரு ஊழியரும் நன்றி விசுவாசத்துடனே செயற்பட்டு நிர்வாகத்தின் நற்பெயரைக் காக்கின்றனர். அத்துடன், ஒவ்வொரு ஊழியர் பெயரிலும் 'சிக்கனச் சேமிப்புத் திட்டம்' என்ற பெயரில் மாதாந்தச் சம்பளத்தில் ரூபா 200 வீதம் கழித்துச் சேமிப்பில் இட்டு வைத்தனர். விசேட தினங்களுக்கு முற்பணமாக ரூபா 1,500 கொடுத்தால், அப்பணத்தைப் பத்து மாதத்தில் கழித்து மீளப் பெற்றுக்கொள்ளும் வசதியும் இருந்தது.

அரச நிறுவனங்களில் கடமையாற்றுவோருக்கு 'பென்ஷன்' என்றொரு செல்வம் ஆயுள் பரியந்தம் வந்துகொண்டேயிருக்கும். அதுபோல தனியார் நிறுவனத்தில் கடமையாற்றுவோருக்கு அவர்களது 60 வயது பூர்த்தியானவுடன் மாதா மாதம் தங்கள் வாழ்க்கைச் செலவுக்கு மாதம் ரூபா 30,000 பெறக்கூடிய ஒரு சிக்கனச் சேமிப்புக் கணக்கு நிதியை அவர்களது பெயரில் வங்கியில் போட்டு வைத்து- அவர்கள் தாங்கள் தனியார் நிறுவனத்தில் வேலை செய்தோம் என்ற தாழ்வு மனப்பான்மை கொள்ளாமல் ஓய்வூதியம் போல மாதா மாதம் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தனர். இதனை குமார்தான் நடைமுறைப்படுத்தினார்.

ஒரு டாக்டர் மாதாந்தம் ரூபா 30000 பெறுவாராயின், தாதிமார் ரூபா 20000, சிற்றூழியர்கள் ரூபா 10000 பெறக்கூடியதாகத் தமது வைத்தியசாலை வருமானத்திலும் வயோதிபர்கள் பராமரிப்பு இல்ல வருமானத்திலும் நடுநிலை தவறாது- அவர்களது பெயரில் வங்கியில் வைப்புச் செய்து வைத்தனர். அதனால் இந்த நிறுவனத்தின்

ஊழியர்களாகச் சேர்வதில் ஒருவரும் தயக்கம் காட்டுவதே இல்லை. அதைவிட ஆயுள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 'இன்ஸ்சூரன்ஸ்' நிதியும் ஒவ்வொருவர் பெயரிலும் மாதாந்தம் ரூபா 200 வீதம் செலுத்தி வந்தனர். இடைக்காலத்தில் அவர்கள் ஏதும் விபத்துக்களைச் சந்திக்க நேர்ந்தால், அவர்களுக்குத் திரட்டாக ரூபா ஒரு இலட்சம் கிடைக்கும். உயிரை இழந்தவரின் குடும்பத்துக்குத்தான் இந்த முழுத்தொகை. கால், கை பாதித்து, தொடர்ந்து தொழிலுக்கு வர முடியாதவர்களுக்கு இதில் பாதிப் பணம். அதாவது, ரூபா 50,000 கிடைக்கும். அதனால் 'நூர்ஷஹான் வைத்தியசாலை' யிலும் கன்சூர் வயோதிபர் பராமரிப்பு நிலையத்திலும் சேவைக்குச் சேர்வதில் யாரும் தயக்கம் காட்டுவதேயில்லை.

ஒரு பெரிய நகைக்கடைக்காரரும் மனைவியும் தங்கள் நீரிழிவு நோய்க்காக மேற்படி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின் கன்சூர் வயோதிபர் பராமரிப்பு நிலையத்தில் சேர்ந்து கொண்டனர். அவர்களுக்குச் சந்ததிப் பெயர் சொல்ல வாரிசே கிடையாது. தமது 'லேக் சைட்' பங்களாவும் வங்கியிலுள்ள 10 கோடி ரூபாவும் தங்களுக்குப் பிறகு இந்த இரண்டு நிலையகளுக்கும் சேரும் என்று உயில் எழுதி அவர்களது கையில் கொடுத்தனர். இந்த நற்செயலால் சகல நோயாளிகளும் விழிப்படைந்தனர். நல்ல வைத்திய சேவையும் சிறந்த பராமரிப்பும் கொண்ட நற்செய்கை மூலம் சுற்றுவட்டாரத்தில் அண்ணன் கன்சூரின் பெயரும் தங்கை நூர்ஷஹானின் பெயரும் புகழடையத் தொடங்கின.

'செய்யும் தொழிலே தெய்வம், அந்தத் திறமைதான் நமது செல்வம்... கையும் காலும்தான் உதவி, கொண்ட கடமைதான் நமக்குப் பதவி" என்ற திரையிசைப் பாடல் இந்த இடத்தில் ஞாபகத்திற்கு வருகிறது. தெருவில் நடந்து செல்லும் வழிப்போக்கர்கள், "முகம்மது வாப்பாவும் உம்மா ஆயிஷாவும் இரண்டு பிள்ளைகளையும் தவம் செய்துதான் பெற்றிருப்பார்கள் போலும்" என்று கதைத்துக்கொண்டே செல்வார்கள்.

பெற்றார் தேடி வைத்த செல்வத்தை அழித்துத் தொலைத்து- தமது இறுதிக்காலத்தில் நேரக்கஞ்சிக்கே வழியற்று நடுத்தெருவுக்குப் போன நிலையில் பலரைக் கண்ட இந்த நாடு, மேற்படி இரண்டு சகோதரர்களும் பெற்றாரின் பெயரை மாத்திரமல்ல, அவர்களது பூர்வீகச் சொத்தையும் அழியாது பாதுகாத்து, மனுக்குலத்துக்குச் சிறந்த

*சேவையை வழங்கி- மனிதருள் மாணிக்கமாக மிளிர்வது மிக மிக வரவேற்கத் தகுந்தது, பாராட்டுதலுக்கு உரியது!*

*பொருளாதாரத்தை முதன்மைப் பாடமாக எடுத்துப் படித்த நந்தகுமார் தான் இவர்களுக்கெல்லாம் மறைபொருளாக- உந்துசக்தியாக இருந்து புத்திமதிகளையும் ஆலோசனைகளையும் வழங்குகிறார் என்பது இந்தக் குடும்பத்து நான்கு அங்கத்தவரையும் தவிர மற்றையோருக்குத் தெரியாது. இத்தனையும் அவர் சிறுவயதில் பெற்றாரை இழந்து, அண்ணாவின் சிறிய உழைப்பில்- அம்மாச்சியின் பராமரிப்பில் வாழ்ந்ததை அடிக்கடி நினைத்துக்கொள்வார். நன்றி மறவாத பிள்ளை நந்தகுமார்!*

## 04

*தேவகுமாரின் இரண்டாவது தம்பி அசோக்குமார். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் பட வரைஞர், பெருந்தெருக்கள் திணைக்கள வேலை சம்பந்தமான படிப்பில் விசேட சித்தி பெற்று, அரச திணைக்களம் அமைந்துள்ள 'பத்தரமுல்ல' என்ற இடத்தில் பட வரைஞராக நியமனம் கிடைத்து வேலை பார்க்கிறார்.*

*அசோக்குமார் ஒரு சிங்களக் குடும்பத்துடன் தங்கியிருந்து தன் னுடைய தொழிலுக்குச் சென்று வருகிறார். அக்குடும்பத் தலைவர் பிரேமலால் குமாரசிறி. அவரது துணைவியார் தாரக்கா. அவர்களது மகள் திலினி, மகன் சரத்முத்தட்டுவேகம. அவருக்கு அந்த வீட்டு தந்தை, தாய், மகன், மகள் அனைவரையும் நன்கு பிடித்திருக்கிறது. முத்தட்டுவேகம அசோக் வேலை பார்க்கும் அதே காரியாலயத்தில் கடமையாற்றுகின்றார். பெற்றார் இருவரும் ஓய்வுபெற்றுவிட்டனர். திலினி பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருக்கிறார். அசோக்குமார் நண்பன் சரத்துடன் கதைக்கிறார்.*

*அசோக்:- "I want this room. This is very clean and ventilation"*

*சரத்:- "We are very happy about your good life and your daily duties"*

*அவர்களுக்குச் சொந்தமான அழகிய மாடி வீடு ஒன்று இருக்கிறது.*

ஒரு சிறு மலைப்பாங்கான இடத்தில் அந்த வீடு அமைந்திருக்கிறது. தெருவில் நின்று பார்த்தாலே அந்த வீடு நன்கு தெரியும். பச்சை நிறத்தில் வர்ணம் பூசப்பட்டிருக்கும். அதுவும் துளிர்ப் பச்சை நிறம். அதாவது, கிளிப் பச்சை நிறம்.

கொழும்பு- பத்தரமுல்ல பிரேமலால் குமாரசிறி- தாரக்கா ஆசிரியத் தம்பதிகள் யாழ்ப்பாணம் சென்று நயினாதீவு புத்தவிகாரையையும் மாதகல் ஜம்புநாதேஸ்வரர் ஆலய வளாகத்தையும் சங்கமித்தை கொண்டு வந்த வெள்ளரசு புனித மரத்தையும் ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள நாகவிகாரை, அத்துடன் கண்டி வீதியில் அமைந்துள்ள சிங்கள மகா வித்தியாலயத்தையும் கண்டு களிக்க ஆவலாக இருப்பதை அசோக்குமாரின் காதில் போட்டு வைத்தனர்.

அவர்களது உள்ளக் கிடக்கையை அறிந்த அசோக், தனது அண்ணாவிடம் இச்செய்தியைக் கூறினார். தேவகுமாரும் தென்னிலங்கையில் இருந்து வரும் விருந்தாளிகளைத் தங்கவைப்பதற்கு வசதியான வீடு ஒன்றினை விரைந்து கட்டி முடிக்க வேண்டிய துரித நடவடிக்கையில் ஈடுபட்டார். தகப்பன் நாகலிங்கத்தார் வாங்கிச் சுற்றிவரத் தென்னை மரங்கள் நாட்டி வைத்த அந்தப் பெரிய வளவினுள் ஒரு அழகான பங்களா வீட்டை நிர்மாணிக்கும் வேலையில் கவனத்தைச் செலுத்தினார்.

சீமெந்து, மணல், சறளைக் கற்கள், கம்பிகள், அத்திவாரத்துக்குப் பெருங்கற்கள் என லொறிகள் வந்து இறக்கிய வண்ணம் இருந்தன. அத்திவாரத்துள் போடுவதற்கு நீதிமன்ற மண், ஐந்து சந்தி மண், நாற்சந்தி மண், முச்சந்தி மண், கோவில் வளாக மண் இவற்றுடன் தங்கமும் இட்டு 4 அடி ஆழத்தில் அத்திவாரம் வெட்டப்பட்டது. துரிதகதியில் அத்திவாரத்துக்குக் கற்கள் இடப்பட்டன. அரிகற்கள் அரிந்து வைரம் ஏறத் தண்ணீர் ஊற்றிக் காயவிடப்பட்டன.

ஆசிரியராக இருக்கும் நவரத்தினம் மாமாவுக்கு தச்சுவேலை செய்கிற ஒரு குடும்பம் நட்புறவோடு இருந்தது. அந்தக் குடும்பத்து நவரத்தினம் மாமாதான் நிலை, யன்னல், கதவு, மேற்கூரை கோப்பிச வேலைகள், தீராந்தி, வளை, சிலாகை முதலிய வேலைகளைச் செய்து கொடுத்தார். அவரது கணக்குகள் யாவும் நீதியான முறையில்தான் எழுதப்பட்டிருந்தன. நவரத்தினம் மாமாதான் சுபநாட்கள் பார்த்து நிலை வைத்தல் போன்ற சுபகாரியங்களை முன்னின்று நடத்தினார். மேற்கூரைக்கு ஓடுதான் போடுவதெனவும் முன்பக்க விறாந்தைக்கு

பிளாற் போட்டு, பக்கத்தால் ஏறி மேலே போய்த் துணிகள் காயவிடப் படிக்கட்டும் அமைக்கப்பட்டது. 5 அறைகள், 2 சமையலறைகள், 2 பெரிய ஹோல், ஒரு சாப்பாட்டறை, 3 குளியலறைகள்-கழிவறைகளுடன், வெளியில் தனியாக ஒரு கழிவறை என யாவும் சிறப்பாகக் கட்டி முடிக்கப்பட்டன.

ஏற்கனவே கிணறு இருந்ததால் தண்ணீர்த் தாங்கி சிறந்த முறையில் அமைக்கப்பட்டு வீட்டின் சமையற்கட்டு, குளியலறைகள், சாப்பாட்டறை ஆகியவற்றுக்கு 'பைப்' சகிதம் தண்ணீர் பெறக்கூடிய வசதிகள், நிலத்திற்கு மாபிள்கள் பதித்து யாவும் பரிபூரணமாக முடிவுற்றன. ஒரு நல்ல நாளில் - அதுவும் வளர்பிறையில் வீடு குடிபூரல் நிகழ்ச்சி நடந்தது. அவர்களது குலதெய்வம் அம்பாள் ஆலயத்தில் விநாயகர், அம்மன், முருகன், இலக்குமி, சரஸ்வதி ஆகிய பெரிய படங்களை ஐந்து பெண்கள் எடுத்துவர, மங்கலமான மேளங்கள், நாதஸ்வரங்கள் இசை எழுப்ப, உள் அறையுள் பொங்கிப் படைத்து, தொழிலாளர்களுக்கு வேட்டி, சால்வை, மகளிர் சேலை, பிரதான மேஸ்திரி, ஆசாரி இவர்களுக்குத் தங்க மோதிரம் ஆகியன அளிக்கப்பட்டன. சிவலிங்கம் மாமாவும் மாமியும்தான் வீடு ஒப்புக்கொண்டனர். ஒப்புக்கொண்டு திறப்பை வாங்கியவர்கள் அன்றிரவு அந்த வீட்டிலேயே தங்க வேண்டும். அந்தச் சம்பிரதாயங்கள் யாவும் சிறப்பாக நிறைவேறின.

குடிபூரலுக்கு வருகை தந்தவர்களுக்குக் கற்கண்டு, பால், பொங்கிய பொங்கல் இவற்றுடன் மதிய போசனம் யாவும் திருப்தியாகப் பரிமாறப்பட்டன.

அம்மாச்சி உயிர்வாழும் காலத்தில் தென்னிலங்கை பிரேமலால் குமாரசிறி அங்கிள் குடும்பம் வருகை தருகிற இந்த நல்ல நேரத்தில் தேவகுமாருக்கு ஒரு வாழ்க்கைத் துணையை அமைத்துக் கொடுக்க வேண்டுமெனக் குடும்பத்தினர் அனைவரும் ஆசைப்பட்டனர். அம்மாச்சி, சிவலிங்கம் மாமா இவர்களின் ஆலோசனைப்படி ஒரு A/L படித்த, நல்ல கீழ்ப்படிவான, நல்ல குடும்பத்துப் பெண்ணான வள்ளிநாயகியை மணம் பேசி- விவாகப் பதிவும் செய்து வைத்திருந்தனர்.

## 05

தென்னிலங்கை விருந்தினர்களுடன் கண்டி நந்தகுமார் தங்கியிருந்த குடும்பத்தினரும்; அவர்களைச் சந்திக்க விரும்புவதாகக் கூறி அனைவரும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். விருந்தினர்கள் கலந்துகொண்ட திருமணம் ஆடம்பரமின்றி எளிமையாக மாமா சிவலிங்கத்தின் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மோதிரம் மாற்றுதல், மாலை மாற்றுதல், அறிஞர்களின் வாழ்த்துரைகள் இவற்றுடனும் விருந்துபசாரத்துடனும் இந்தத் திருமணம் சிறப்புற நிறைவேறியது.

மாமா சிவலிங்கத்தின் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தனது வாழ்த்துரையில், "திரு. தேவகுமார் - திருமதி வள்ளிநாயகி ஆகியோரின் திருமண வைபவம் இங்கு நடைபெறுகிறது. இவர்களுடைய வாழ்க்கையில், இவர்கள் இரண்டாம் கட்டத்தை ஆரம்பிக்கிறார்கள் என்பது அர்த்தம். வாழ்க்கை ஒரு போராட்டம். இவர்களுடைய வாழ்க்கையில் முதலாவது கட்டம் தமது பாடசாலைக் கல்வி- சமூக ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம், வறுமைக்கு எதிரான போராட்டம் என இவர்கள் இருவரும் தனித் தனியாக கடந்து வந்திருக்கிறார்கள். இன்று அவர்கள் வாழ்க்கைத் துணை என்ற ஒரு நிலைப்பாட்டில் இன்று தமது வாழ்க்கையை ஒருமுகப்படுத்தி முன்னெடுக்க முன்வருகிறார்கள். ஒருவருக்கு ஒருவர் துணையாக, ஒருவரை ஒருவர் சார்ந்து, தமது வாழ்க்கைப் போராட்டத்தை முன்னெடுக்கும் இவ்வேளை, இவ்வுலகம் முழுமையிலுமுள்ள நிலைமைகளைப் பார்த்தால், உலகத்திலுள்ள நாடுகள், தேசங்கள் சுதந்திரத்தை காப்பாற்றுவதற்கும், நாடுகள் விடுதலையை அடைவதற்கும் மக்கள் புரட்சியை வேண்டியும் போராடுகிறார்கள். அவர்களது போராட்டத்துடன் உங்கள் போராட்டம் இணையட்டும். உலக சமாதானத்திற்க்கும், மனித குல நல்வாழ்விற்குமான பெரும் போராட்டத்தில் உங்கள் பங்கும் இணையட்டும்! என வாழ்த்தி மங்களகரமான இந்நாளில், மணமக்கள் சகல வாழ்வையும் பெற்று, பெரு வாழ்வு வாழ வாழ்த்துகிறேன்!!!" என்று கூறினார். அனைவரையும் புதிய வீட்டில் தங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கண்டியின் குடும்பத்தினர் ஒரு அறையிலும் கொழும்புக் குடும்பத்தினர் ஒரு அறையிலும் தங்கினர். வந்தவர்களுக்கு இந்தத் தங்குமிடம் சிறந்த வசதிகளுடன் இருப்பது மனதுக்குப் பெரிய நிம்மதியாக இருந்தது. சிறிய நுளம்பு கூட உட்புகாதவாறு நெற் அடிக்கப்பட்டு-பிறகுதான் மரக்கதவுகள் போடப்பட்டிருந்தன. மின் விளக்குகளும் மின் விசிறிகளும் கட்டில், மெத்தை, தலையணைகள், கதவு, யன்னல், கேட்டின் சீலைகள் கண்களுக்குக் குளிர்மையாகப் பச்சை நிறத்தில் அமைந்திருந்தன.

ஹோலில் ஒரு பெரிய தொலைக்காட்சிப் பெட்டி இருந்தது. குடும்ப அங்கத்தினரது புகைப்படங்கள் கண்ணாடிச் சட்டத்துள் பிறேம் போடப்பட்டு உட்சுவர்களை அலங்கரித்திருந்தன. நாகலிங்கத்தாரின் புகைப்படமும் மாலை போடப்பட்டு இருந்தது.

வீட்டிலே எங்கேயிருந்து வருகிறதென்று தெரியாத வகையில் ஒரு புல்லாங்குழல் இசை மிக மிகத் தாழ்ந்த ஒலியில் காற்றோடு காற்றாகத் தவழ்ந்து வந்துகொண்டிருந்தது. தாகத்திற்கு இளநீர் கொண்டு வந்த பிரேமாவிடம் அவர்கள் "இந்த வீட்டிற்கு யார் பிளான் போட்டது?" என்று கேட்டார்கள். "எல்லாம் அண்ணாக்கள் சேர்ந்துதான் தீர்மானிப்பார்கள்" என்று அவள் கூறினாள். அவர்களின் அடிமனதில், 'இந்த அண்ணன்- தம்பி பாசம், செயற்பாடுகளில் இருந்து மற்றவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் அநேகம் இருக்கின்றன' என்று நினைத்தார்கள்.

படுக்கையறையோடு சேர்ந்த குளியலறை அவர்களுக்கு மிகவும் வசதியாக இருந்தது. துணிகள் அயன் செய்ய ஸ்திரிக்கையும் ஸ்டாண்டும் ஹோலின் இன்னொரு புறத்தில் இருந்தன. சாப்பாட்டு மேசையும் நடுவே பூக்கள் நிறைந்த சாடியும் வைக்கப்பட்டு அலங்காரமாக இருந்தது.

வீட்டிற்கு வந்த அடுத்த நாளே அனைவரும் நயினாதீவு நாகபூஷணியையும் அருகே அமைந்துள்ள புத்த விகாரையையும் தரிசிக்கப் புறப்பட்டனர். அங்கு சென்று வழிபட முன்பு ஊர்காவற்றுறை கடற்கோட்டை, கடற்படையினர் (நேவி) தங்கு மிடம் ஆகியவற்றைப் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். அந்த இரு குடும்பங்களும் இதுவரை காலமும் கடற் பிரயாணம் செய்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை. அதனால் இந்தக் கடற் பிரயாணத்தை நன்கு இரசித்து அனுபவித்தனர். அம்பாளின்

தரிசனம் நிறைவுற்ற பின்னர் அங்கேயே மதிய அன்னதானத்திலும் பங்கேற்றுக்கொண்டனர்.

எம்மதமும் சம்மதம் என்று வழிபடுபவர்களே முகம்மது குடும்பத்தினர். அவர்களும் புத்தபகவான் வழிபாட்டில் பக்தி சிரத்தையுடன் ஈடுபட்டனர். பிரேமலால் குமாரசிறி குடும்பத்தினர், அங்குள்ள தலைமைப் பிக்குவின் கையில் ரூபா 25,000 ஐ அன்பளிப்பாகக் கொடுத்தனர். நந்தகுமாரும் அசோக்குமாரும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மணிமேகலா தெய்வம் அமுதசுரபியுடன் வந்தமர்ந்த வரலாற்றினை அவர்களுக்கு விளங்கப்படுத்தினர். அவர்களும் தங்கள் சந்தேகங்களைத் தமிழ் மொழியில் கேள்வியாகக் கேட்டுத் தெரிந்துகொண்டனர்.

ஆலயத்தின் வடகரையில் தேர் (ஆனி உத்தரத்துக்கு) இழுக்கப்படும் வேளைகளில் கடலுள் ஆழ்ந்து போயிருக்கும் தேர்முடி மேலெழுந்து காட்சி கொடுக்கும் அற்புதத்தையும் அவர்கள் விளங்கப்படுத்தினர். அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திர கர்ணபரம்பரைக் கதை போல நயினை அம்பிகை ஆலயத்தில் தினமும் நடைபெறும் அன்னதான நிகழ்ச்சியானது மிக மிக அற்புதமானது. தென்னிலங்கையில் பிரபல வர்த்தகர்களாக மிளிரும் சீமான்கள் அம்பிகையின் அன்னதானச்சபை உறுப்பினர்களாக இருந்தனர். றுவான்வெல நாகமுத்து, நாவலப்பிட்டி நாகராசா, பண்டாரவளை நாகலிங்கம் என நயினாதீவைப் பிறப் பிடமாகக் கொண்டவர்களும் அவர்களது சந்ததியினரும் இந்த அன்னதானத் தர்மகாரியத்தில் வருடம் 365 நாட்களும் தங்கள் பங்களிப்பைச் சிறப்புற அளித்து வருகின்றனர்.

அதைவிட உற்சவ காலமாகிய கொடியேற்றம் தொடக்கம் தேர், தீர்த்தத் திருவிழாக் காலங்களில் செலவு செய்யப் புலம்பெயர்ந்து வாழும் ஐரோப்பிய ஒன்றியம், கனடா மொன்றியல் ஒன்றியம், கனடா ஸ்காபரோ, றொரொண்டோ ஒன்றியம் பெருமளவில் பணத்தை வாரி வழங்கிக்கொண்டிருந்தன. ஆலய நிர்வாகசபை உறுப்பினர்கள் நிர்வாகம், வரவு- செலவு, திருப்பணித் திருத்த வேலைகள் இவற்றில் கண்ணுங்கருத்துமாகச் செயற்பட்டு நிர்வாகத்தைத் திறம்பட நடத்தி வருடா வருடம் வரவு- செலவுக் கணக்குச் சமர்ப்பிப்பர்.

நயினாதீவிலிருந்து திரும்பிய விருந்தினர்கள் வீட்டிற்கு வர முன்னர் யாழ். ஜின்னா மைதான பள்ளிவாசலையும் ஆரியகுளம் நாகவிகாரையையும் வணங்கித் திரும்பினர். சென்ற இடமெல்லாம் தமது வீடியோ கமராவில் பதிவு செய்துகொண்டனர்.

மறுநாள் மாதகல் சம்புகேஸ்வரர் ஆலயத்தையும் அங்கிருந்து அருள்வாக்குச் சொல்லும் ஐயனாரையும் வணங்கிய பின் பீடத்தில் அமர்ந்திருக்கும் புத்தபகவானையும் வலம் வந்து வணங்கினர். மாதகல் ஜம்புகோளம் போகும் வழியில் திருவடிநிலை தீர்த்தக் கரையையும் ஸ்ரீராமபிரான் தனது காலடித் தடத்தைப் பதித்தபடியினால்தான் (திரு அடி நிலை) திருவடிநிலை என்ற காரணப் பெயர் ஆயிற்று என்ற வரலாற்றை குமார் சகோதரர்கள் சிங்கள மொழியில் வந்த விருந்தினருக்கு விளங்கப்படுத்தினர்.

ஸ்ரீராமபிரான் இராவணனுடன் யுத்தம் செய்வதற்காக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தார். அவர் தனது திருப்பாதங்களை இவ்விடத்தே பதித்தபடியினால்தான் இந்த இடம் திருவடிநிலை என்ற பெயர் பெற்றதுடன், இந்தக் கடற்கரை திருவடிநிலைத் தீர்த்தக்கரை என்ற புனிதப் பெயரால் அழைக்கப்படுகிறது. அதேபோல அசோகச் சக்கரவர்த்தியின் மகளான சங்கமித்தை வெள்ளரச மரக்கிளையுடன் வந்திறங்கிய இடம் சம்பில்துறை (ஜம்புகோளப் பட்டினம்) என அழைக்கப்படுகிறது. இந்த நினைவாக உருவாக்கப்பட்டுள்ள பௌத்த வழிபாட்டு வளாகத்தின் அருகே ஜம்புகேஸ்வரர் ஆலயம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. சங்கமித்திரை வழிபாட்டுக்கு வருகின்ற பௌத்த சமயப் பக்தர்களுங்கூட ஜம்புகேஸ்வரர் ஆலயத்துக்கும் வந்து வணங்கிச் செல்கிறார்கள். அங்கு ஒரு தமிழ்ச் சாமியார் ஐயனார் என்ற பெயருடன் வாழ்கிறார். அவரிடமும் அருளாசி பெற்றுச் சென்றனர்.

இவர்கள் மாத்திரமல்ல, தென்னிலங்கையிலுள்ள மற்றைய இனங் களும் வந்து வணங்கிச் செல்கிற காட்சி தினமும் நடைபெறுகிறது. வடக்கே கிடைக்கும் பனாட்டு, புழுக்கொடியல், பனங்கட்டி முதலிய பொருட்களையும் பனை ஓலையினாற் செய்யப்பட்ட வர்ண ஓலைப் பெட்டிகளையும் வாங்கிச் செல்கிறார்கள்.

அதேபோல முஸ்லீம் வட்டாரத்தில் அமைந்த ஜின்னா மைதானம், அதனருகே உள்ள முஸ்லீம் பள்ளி, யாழ். பஸ் நிலையத்திற்கருகே உள்ள பள்ளிவாசல் யாவற்றையும் பார்த்து வணங்கிச் செல்லும் இஸ்லாமியர்களும் அதிகம்தான். நம்நாட்டில் பிறந்த மூவின மக்களும் நாட்டின் சகல பாகங்களுக்கும் சென்று பார்வையிடவும் வணங் கவும் அங்கு விற்கப்படும் பொருட்களை விலைக்கு வாங்கிச் செல் லவும் விரும்புவார்கள். முற்காலத்தில் பண்டமாற்றாக நடைபெற்ற வியாபாரம் காலப்போக்கில் காசுக்குப் பொருள் என்ற நிலைக்கு மாற்றமடைந்திருக்கிறது.

காரைநகர் திண்ணைக்களி கஜோரினா பீச் ஆகிய இடங்களுக்குச் சென்று வணங்கியும் வீடியோ கமராவில் பதிவு செய்து கொண்டும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் விருந்தோம்பும் பண்பில் திளைத்து மகிழ்ந்தார்கள். சுற்றுலா சென்ற விருந்தினர்கள் வீடு திரும்ப பிற்பகல் இரண்டு மணியாகிவிட்டது. உணவு உண்டதும் பிரயாணக் களைப்பு, வெயில் இவற்றால் அசதியுற்று உறங்கிவிட்டனர். மறுநாள் புகைவண்டியைப் பிடித்துப் பயணம் போக வேண்டும்.

அவர்களது வியர்வை தோய்ந்த உடுப்புகளை 'வோஷிங் மெசினில்' போட்டுக் கழுவி பிரேமா காயவிட்டிருந்தாள். ஈரமான துவாயையும் காயவிட்டிருந்தாள். அந்திப் பொழுதில் தூக்கம் கலைந்த விருந் தினருக்குப் பெரிய வியப்பாக இருந்தது. 'சொல்லாமற் செய்வர் பெரியர்' என்ற முதுமொழியை அவர்கள் நினைவுகூர்ந்தனர். அவர்கள் வாங்கி வைத்திருந்த பனை ஓலையால் செய்த மூடு பெட்டியுள் பனாட்டு, புழுக்கொடியல், கறுத்தக் கொழும்பான் மாம்பழங்கள், பனங்கட்டி யாவும் பத்திரப்படுத்தி வைத்தாள் பிரேமா. வாழை மரத்தாள் வெட்டி வந்து உலாந்தா முருங்கைக் காய்கள் வைத்து, வெளியே வாழைத்தாள் போட்டுக் கட்டி வைத்தாள். திலினியின் பெற்றாருக்கு பாரைக் கருவாடு வாங்கிப் பக்குவப்படுத்திப் புறம்பான கடதாசிப் பைக்குள் வைத்து வெளியே மணம் பரவாமல் பொலித்தீன் பையினால் இறுக்கமாகச் சுற்றி வைத்து விட்டாள்.

அதிகாலைப் பயணம் என்பதால், உலரவிட்ட உடுப்புக்களை அயர்ன் செய்து மேசையின் மேல் வைத்து விட்டாள். பிரேமாவும் வள்ளிநாயகியும் ஓடியோடி வேலை செய்வதைப் பார்த்த இரண்டு விருந்தினர் குடும்பங்களுக்கும் பெரிய ஆனந்தம்.

தாங்கள் கலந்துகொண்ட திருமணப் புகைப்பட அல்பங்களுடன், அதிகாலை அம்மாச்சி செய்து கொடுத்த இடியப்பம்- சம்பல் பார்சல்களுடன் வாழைப்பழங்கள், சுடுதண்ணீர்ப் போத்தல், குடிநீர் இவற்றுடன் பயணிகளை இரயில் நிலையத்தில் வழியனுப்பி வைத்தனர்.

# 06

கண்டிப் பயணகாரர் பொல்காவலை ஸ்டேசனில் இறங்கி மறு புகையிரதம் ஏறித் தங்கள் இடத்திற்குப் போக, கொழும்புப் பயணகாரர் கோட்டையில் இறங்கி தங்கள் இடத்திற்கு பஸ் வண்டி பிடித்துச் சென்றார்கள். தாங்கள் யாழ்ப்பாணம் போய் ஒரு பெரிய திருமணத்தையும் நடத்தி, ஆலய தரிசனங்களும் மேற்கொண்டமை பற்றி அவர்களுக்கு அளவிட முடியாத சந்தோஷமும் மனத் திருப்தியும். பிரயாணப் பொதிகளை அவர்களைத் தூக்கவிடாது நந்தகுமார் கண்டியிலும், அசோக்குமார் 'பத்தரமுல்ல'விலும் தாமே தூக்கிச் சென்றனர்.

அந்தப் பெற்றார் இல்லாத பிள்ளைகளை அம்மாச்சி வளர்த்த வளர்ப்பு முறையையும் கீழ்ப்படிவையும் ஒவ்வொருவர் வீட்டுப் பிள்ளைகளும் பார்த்துப் பழக வேண்டும் என்று இரண்டு குடும்பத்தினரும் தங்களுக்குள் பேசிக்கொண்டனர். பிரயாணம் புறப்பட முன் அவர்கள் அம்மாச்சி கால்களில் விழுந்து வணங்கியதையும், விருந்தினர் கால்களில் பிரேமாவும் வள்ளிநாயகியும் வீழ்ந்து வணங்கியதையும் நினைவுகூர்ந்தார்கள்.

தத்தமது இருப்பிடம் சென்றவர்கள், தாங்கள் சுகமே வீடு வந்து சேர்ந்த செய்தியுடன், தமக்கு அன்பளிப்பாகத் தந்த பொருட்களுக்கு நன்றியையும் தொலைபேசி மூலம் தெரிவித்தனர்.

அவர்கள் தேவகுமாரின் திருமணத்தில் கலந்துகொண்ட புகைப் படத்தை பிறேம் போட்டு வீட்டுச் சுவரில் மாட்டிவிட்டனர். ஆலய தரிசனப் படங்களை அல்பத்தில் போட்டுப் பத்திரப்படுத்தினர்.

சில மாதங்கள் கழிந்தபின் வள்ளிநாயகி கர்ப்பம் தரித்திருப்பதான சுபச்செய்தி அவர்களது காதுகளுக்கு எட்டியது. கேள்விப்பட்டவுடன் மங்குஸ்தான், றம்புட்டான், அப்பிள் ஆகிய பழங்களை வாங்கிப் பயணம் புறப்படும் குமார் சகோதரர்களின் கைகளில் கொடுத்தனுப்பி விட்டனர்.

தாயற்ற பிள்ளைகளுக்குத் தாய் போல இருந்து அந்தக் குடும்பத்தைக் கண்ணை இமை காப்பது போல காத்து வந்தாள் வள்ளிநாயகி. அண்ணி

*மீது அனைவருக்குமே பாசமும் பிரியமும் இருந்தன. ஒருநாள் காலை தங்களை மறந்து வேலை செய்துகொண்டிருந்த விநோத்குமார் மற்றும் ஆனந்தகுமார் சகோதரர்களைத் தாயின் பரிவோடு அவள் சாப்பிட வருமாறு தொலைபேசியில் அழைக்கிறாள்.*

*"தம்பிமார்! நீங்கள் இன்னும் சாப்பிட வரவில்லையே? ஏன்? சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். நீங்கள் இரண்டு பேரும் இப்படிப் பட்டினி கிடந்துதான் உழைக்க வேணுமென்ற ஒரு தேவை இந்தக் குடும்பத்துக்கு இல்லை. கெதியாக வந்து சாப்பிடுங்க. நேரம் 10 மணியாகுது" என்றாள் வள்ளிநாயகி.*

*அதற்கு விநோத்குமார், "அண்ணி! நாங்கள் பின்னி வைத்த கிடுகுகளை வாங்குகிற லொறிக்காரரர் வந்திருக்கிறார். அவரிட்டை கிடுகுகளை ஒப்படைத்துவிட்டு வீட்டில் அடுப்பெரிக்க பாளை, மட்டை, பன்னாடை, பட்டுப்போன கதியால் விறகுகளைக் கட்டிக்கொண்டு வருகிறோம்.*

*அண்ணி! அண்ணி!! கிடுகு மாத்திரம் ரூபா 1,000இற்கு விற்றோம். ஒரு லான்ட்மாஸ்ரர் நிறைய ஏற்றிவிட்டோம். 10 மட்டை மேலதிகமாகக் கொடுத்தோம். பாடுபட்டது வீண் போகவில்லை. எமக்குப் பணமாக வந்திருக்கிறது" என்றார்.*

*"சரி.... சரி.... சாப்பிட்டுவிட்டு வேலையைப் பாருங்கோ. கெதியா வாங்கோ" என்றாள் வள்ளிநாயகி.*

*ஆனந்தகுமார் விநோத்குமாரை நோக்கி, "அண்ணா! எனது சேமிப்பில் மூவாயிரம் சேர்ந்து விட்டது. உங்கள் கணக்கில் எவ்வளவு உள்ளது?" என்று கேட்டார்.*

*அதற்கு விநோத்குமார், "எனது கணக்கிலும் உங்கள் கணக்குப் போலத்தான். ஒருநாள் அடுப்பெரிக்க பாளைகள், மட்டைகள் கொண்டு போய் அண்ணி கையில் கொடுத்தோமல்லவா! அவா தந்த 300 ரூபாவும் பாஸ் புத்தகத்தில்தான் இட்டேன். உங்களை விட அந்த முந்நூறு அதிகமாக இருக்கும்" என்றார்.*

*விநோத்குமார், ஆனந்தகுமார் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து கணினிப் பயிற்சி நிறுவனத்தை விரிவுபடுத்தி நடத்த வேண்டும். A/L படித்துவிட்டு வீட்டில் சும்மா இருக்கும் இளைஞர்களுக்கு ஒரு பெரிய வழிகாட்டியாக எமது நிறுவனம் சேவை செய்ய வேண்டும். இங்கு படித்த மாணவர்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று*

தாம் கற்ற கல்வியை மற்றவர்களுக்குக் கற்பிக்கும் அதேநேரத்தில், புதிது புதிதாகப் பல துறை நுட்பங்களையும் அறிந்துகொள்ள வேண்டும். அதன்மூலம் அவர்கள் வருவாயைக் கூட்ட வேண்டும் என்ற ஆவலுடன் ரியூட்டறி ஆரம்பித்தனர்.

தம் படிப்புடன் மட்டும் நின்றுவிடாது தென்னந்தோப்புகள் பராமரிக்கும் வேலையிலும், விநோத்குமாரும் ஆனந்தகுமாரும் ஈடுபட்டு வந்தனர். ஒரு கணத்தைக் கூட வீணாக்காது அத்தனை சகோதரர்களும் முழுநேர உழைப்பில் ஈடுபடுகின்றனர். அதற்குக் காரணம் அம்மாச்சிதான்!

தினந்தோறும் அவர்களுக்கு நீதிக்கதைகள், வாழ்வியல் கதைகள் என்பனவற்றைச் சொல்லிச் சொல்லிச் செதுக்கியவர் அம்மாச்சி! இனத்துவப் போர் இலங்கையில் கருக்கொண்டு பல இன்னல்களைக் கொடுத்தாலும், அனைத்தையும் எதிர்கொண்டு பிள்ளைகளைத் திறம்பட வளர்த்தவர் அம்மாச்சி! பெற்றோரற்ற பிள்ளைகளுக்கு அவர் ஆணிவேராக இருந்து அவர்களைத் தாங்கியபடியால்தான், அவர்கள் வீழ்ந்துவிடாமல் ஊர் போற்றும் வண்ணம் வாழ்கின்றனர்.

பேரப்பிள்ளைகள் மீது எப்படிப் பரிவும் பாசமும் அம்மாச்சிக்கு உண்டோ, அதுபோலவே தேவகுமாரின் மனைவி வள்ளிநாயகி மீதும் பரிவும் பாசமும் உண்டு. கருவுற்றிருந்த வள்ளிநாயகி வாந்தி எடுத்துவிட்டுச் சோர்ந்திருந்ததைப் பார்த்த அம்மாச்சி,

“மேனை வள்ளிநாயகி! நீ இப்ப வாந்தி எடுத்துப்போட்டு வெறு வயிற்றோடு இருக்காதை. வாந்தி போறது போகட்டும். நீ ஆத்துமத்துக்கு வஞ்சனையில்லாமல் அடிக்கடி நான் தரும் தண்ணி வென்னியை வேண்டாம் எண்டு சொல்லாமல் மட மடவென்று குடி பிள்ளை. இந்தக் குடிநீர், ஒடியல் கூழ் எல்லாம் சத்தியெடுத்த களைப்பைப் போக்கும். ஓடி வாணை, வந்து எடுத்துக் குடியணை!!”

வள்ளிநாயகி:- ஓம் அம்மாச்சி! கொஞ்சம் தலை சுத்துற மாதிரிக் கிடக்குது. எலுமிச்சம்பழம் மணக்கிறன். இப்ப வந்து எடுத்துக் குடிக்கிறன்.

“வள்ளிநாயகிக்கு பப்பாசிப்பழம், அன்னாசிப்பழம் இவற்றைக் கண்ணிலும் காட்டக்கூடாது. அவை கருவை அழித்துவிடும். தாகம் தீரத் தண்ணீர், மோர், இளநீர் சிறப்பாக ஒடியல் கூழ்தான் குடுக்க

வேணும். சிலருக்கு அடுப்புச் சாம்பலும் விபூதியும் சாப்பிட வேணும் போல இருக்கும். எங்கடை பிள்ளைக்கு அதுகள் ஒண்டிலும் நாட்டம் இல்லை" என்று ஒருநாள் அம்மாச்சி சொன்னார்.

அதனைக் கேட்ட வள்ளிநாயகி, 'அம்மாச்சி! எனக்குப் புளி மாங்காய், புளியங்காய்தான் சாப்பிட வேணும் போல இருக்குது. இதுகள் சாப்பிடலாமோ?" என்று கேட்டாள்.

அம்மாச்சி:- இதுகள் சாப்பிடலாம். புளியங்காய் அதிகம் சாப்பிடக் கூடாது. குடலை அரிச்சுப்போடும்.

வள்ளிநாயகி: உப்புக்கட்டியை அதிலை தேச்சுப் போட்டு, நாக்காலை நக்கிப்போட்டு விட்டு விடுவேன்!

அம்மாச்சி:- சரி பிள்ளை. கையை ஏவி உயரத்திலை கிடக்கிற சாமான்களை எடுக்க முயற்சிக்கக்கூடாது. தினமும் காலையிலேதான் குளிப்பு, முழுக்கு இருக்க வேணும். முழுகிற நாட்களிலே வயிறு முழுவதும் நல்லெண்ணெய் பூசி அது உடம்பிலை ஊறிய பிறகே முழுக வேணும். முழுகினபின் ஈரத்தை நல்லாத் துடைத்துச் சாம்பிராணிப் புகை காட்ட வேணும்.

வள்ளிநாயகி:- ஓம் அம்மாச்சி! இவ்வளவு கவனமாக ஒவ்வொன்றையும் நீங்க சொல்லும்போது நான் சொல்லுத் தட்டாமல் செய்வன் அம்மாச்சி!

அம்மாச்சி:- பிள்ளை, ஊரிலை ஒரு பழமொழி சொல்லுவினம் தெரியுமோ? நோஞ்சி, பிள்ளை உண்டாகினால் சமர்த்தி வந்து பெற்று விடுவாளோ? அழுதும் பிள்ளையை அவளே பெற வேணும்.

ஒன்பது மாதங்கள் ஓடிக் கழிந்தபின் வள்ளிநாயகிக்கு நோக்காடு என்று சொல்லப்படும் அறிகுறி தொடங்கியது. கறி முருக்கம் பூவும் வெந்தயமும் பூடும் அவித்து எடுத்து வந்த அம்மாச்சி, 'பிள்ளை வள்ளிநாயகி! இதை மட மடவென்று குடித்துவிடணை. அப்பதான் வயிற்றிலை கிடக்கிற வாய்வு வெளியேறி குழந்தை பிறக்க லேசாக இருக்கும்" என்றார்.

வள்ளிநாயகி:- ஓம் அம்மாச்சி! மூத்தோர் சொல் வார்த்தை அமுதம் என்பார்கள். நான் உங்கள் சொல்வழி கேட்டுக் குடிக்கிறன்.

வள்ளிநாயகியை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்குக் கார் வருகிறது. வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லத் தேவையான வற்றைக் கூடையில் எடுத்து வைத்தாள் பிரேமா.

சுடுதண்ணீர்ப் போத்தல், 2 டம்ளர்கள், 1 கரண்டி, 1 பெட்சீட், 1 தலையணை, 1 துவாய், மாற்றிப்போட Bed Jacket வீட்டுச் சட்டை, கோட்டக்ஸ் பெட்டி ஒன்று, பேபி செற் உள்ளடங்கியிருந்த கூடையை எடுத்துக்கொண்டு வள்ளிநாயகியுடன் அம்மாச்சியும் பிரேமாவும் வைத்திய சாலைக்குப் புறப்பட்டனர்.

2, 3 மணித்தியாலங்களின் பின்னர் ஒரு அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் வள்ளிநாயகி. முதலில் குழந்தையை ஒரு கம்பளித் துணியால் சுற்றியபடி தாதியொருவர் கொண்டு வந்து காண்பித்துவிட்டு, அந்த அறையிலிருந்த தொட்டிலில் வைத்து மேலே ஒரு நெற் விரித்துச் செல்கிறார். சற்றுப் பொறுத்து ஸ்ரெச்சரில் வள்ளிநாயகியையும் தள்ளிக்கொண்டு வந்து, மெத்தைக்கு 2 தாதிகள் மாற்றி விடுகின்றனர். அம்மாச்சிக்குப் பெரிய சந்தோஷம்- பூட்டப் பிள்ளையைக் கண்டுவிட்டதாக! பிரேமாவுக்கு அவரைவிட ஆனந்தம்- தானும் ஒரு மாமி ஆகிவிட்டேனென்று! குழந்தையைக் கண்ணுற்ற பிரேமா அதனைத் தனது கைபேசியில் படமெடுக்க முயற்சிக்கிறார். அப்போது அம்மாச்சி...

அம்மாச்சி:- பிள்ளை பிரேமா! உண்ணாப் பிள்ளையைப் படம் பிடிச்சு அலங்கத்திலை காட்டக் கூடாது. எங்கடை ஆச்சி சொல்லுறவா; பேய்க்கு இட்டுக் கழிக்காமல் மனுவுக்கு இட்டுக் கழிக்க முடியாது என்று. நீ அவசரப்பட்டு இப்போதைக்குப் படம் எடுக்காதை.

வள்ளிநாயகி:- அம்மாச்சி! வெளிநாட்டிலை குழந்தை பிறந்த உடனே பிடித்த படத்தை என்ரை சிநேகிதிமார் காட்டியிருக்கினம். அதென்ன நாவூறு... கண்ணூறு எண்டு...

அம்மாச்சி:- இல்லைப் பிள்ளை, எல்லாற்றை கண்ணும் ஒரு மாதிரி இல்லை. எங்களுக்கென்ன அம்மா, சொல்லிப் போடுவம். பிள்ளை பெற்றவள் பால் பெயராமல் முலையிலே பால் கட்டிபட்டுக் காய்ச்சல் எழும்பி, பெற்ற குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாமல் அவஸ்தைப்பட்டதை நான் என்ரை கண்ணாலை பார்த்து இருக்கிறன். முதலிலை வள்ளிநாயகிக்கு வெற்றிலையுள் இந்தக் குங்குமப் பூவை வைச்சு வாய்க்குள்ளை குடுக்கிறன். அது கிரந்தியை வெட்டக்கூடிய நல்ல மருந்து. நாக்கு வறண்டால் பனங்கட்டித் துண்டு ஒன்று கொடுக்கலாம். அது நல்லாய்த் தீட்டு வெளியேற உதவும். நாளைக்குக் காலமைக்கு வறுத்த விசுக்கோத்தை கோப்பித் தண்ணிக்குள்ளை நனைச்சுத் தின்னக் கொடுக்கப் போறன் என்றார் அம்மாச்சி. பூர

நட்சத்திரத்தில் பிறந்த குழந்தைக்கு, பூரணி என்ற பெயரிட்டு மகிழ்ந்தனர். 'பூரணி... பூரணி... என்று குழந்தையின் காதுகளுக்குள் மெதுவாகச் சொல்லிக்கொண்டிருந்தார் அம்மாச்சி. அப்பொழுது அங்கு வந்த தாதியிடம், 'பிள்ளை! குழந்தை பெற்ற தாய்க்கு உள்ளங்காலுக்கு வேர்க்கொம்புத் தூள் தடவலாமோ?" என்று கேட்டார் அம்மாச்சி.

தாதி:- சீச்சீ... அதெல்லாம் ஆஸ்பத்திரிக்குள்ளை வேண்டாம். நீங்கள் வீட்டை கொண்டுபோய்க் குளிக்க வார்த்தபின் தேவையென்றால், பூசுங்கோ. உந்த வேலையள் ஒன்றும் வேண்டாம்.

5ம் நாள் தையல் வெட்டப்பட்ட பின் குழந்தை, தாய், அம்மாச்சி, பிரேமா சகலரும் வீட்டிற்கு வந்தனர். அவர்களுக்கும் வீட்டிலிருந்த மற்றவர்களுக்கும் சிவலிங்கம் மாஸ்டரின் துணைவி ஐஸ்வரியம்தான் சாப்பாடு கொடுத்து உதவினாள். தேவகுமார் ஆஸ்பத்திரியிலுள்ள தாதிகள், சிற்றூழியர்களுக்கு கன்டோஸ் பெட்டிகளை வாங்கிக் கொடுத்து அவர்களுக்குத் தனது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொண்டார்.

## 07

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் குழந்தை பூரணி வளர்ந்துகொண்டிருந்தாள். விதம் விதமாகக் குட்டிக் குட்டிச் சட்டைகள், சிறிய தலையணைகள், சிறிய சுவெற்றர், சிறிய கால்மேஷ், சிறிய கைமேஷ், சிறிய தொப்பி யாவும் கம்போட்டர் பின்னும் கம்பளி றோல்கள் வாங்கித் தானே பின்னிக் குழந்தைக்குப் போட்டு அழகு பார்த்தாள் பிரேமா. இந்தப் பின்னல் வேலைகள் யாவும் பக்கத்தில் இயங்கும் மாதர் சங்க ஆசிரியை சரஸ்வதியிடம் கற்றுக்கொண்டாள்.

ஆறு மாதங்கள் கழிந்த பின் நயினாதீவு நாகபூசணி அம்மன் திருத்தலத்தில் குழந்தைக்கு முடியிறக்கி, காது குத்தி, அன்னப் பாலூட்டல் என்ற சுபகாரியத்தைச் செய்விப்பதற்காக அனைவரும் அதிகாலை ஒரு வாகனத்திலேறிப் புறப்பட்டனர். பின்னர் விசைப்படகு மூலம் நயினாதீவைச் சென்றடைகின்றனர். கோவிலில் வழமையான

சேவை செய்யும் நாவிதன் முடி வழித்த பின் குழந்தையை பச்சைத் தண்ணீரில் தோய வார்த்து, ஓடிக்குளோன், பவுடர் யாவும் பூசி, பம்பஸ், நிக்கர், புதுச்சட்டை போட்டனர். சிவலிங்கம மாமா தங்க ஊசியால் குழந்தைக்குக் காது குத்தி அதையே காதணியாகப் (ஒரு அரசம் இலையுடன்) பூட்டிவிட்டார். குழந்தை முதலில் அழுதாலும் தாய்ப்பால் குடித்தபின் அழுகையை நிறுத்திக்கொண்டது.

அம்மாச்சி பொங்குவதற்கு அரிசி, பயறு, சர்க்கரை, சில்வர் பானை, அகப்பை சகிதம் வந்ததால் பொங்கலும் பொங்கி அம்பாளுக்கு வாழையிலையில் படைக்கப்பட்டது. தகப்பன் தேவகுமாரின் மோதிர விரலில் இருந்த மோதிரத்தால் சிவலிங்கம மாமாவும் மாமி ஐஸ்வரியமும் ஊட்டியபின், (அம்மா மோதிரத்தை பொங்கலுள் ஆழ்த்தி) மற்றவர்களும் ஊட்டினர். பின்னர் கோவிலில் நடைபெறும் அன்னதானத்தை அனைவரும் உண்டு பசியாறினர். அங்கு அயலில் அமைந்துள்ள புத்த விகாரைக்கும் சென்று வணங்கியபின் தமது காணிக்கையை அங்குள்ள உண்டியலில் இட்டனர். அதுபோல நாகபூஷணியின் உண்டியலில் காணிக்கை செலுத்தியபின் அன்னதான சபைக்கு ரூபா 5,000 அன்பளிப்பாகப் பொறுப்பான உத்தியோகத்தரின் கைகளில் கொடுத்தார் தேவகுமார். இருட்டுவதற்கு முன்னர் வீடு சேர்வதற்காக அவசர அவசரமாகத் திரும்பினர். ஊர்காவற்றுறை தேநீர்க்கடை முன்னால் அவர்கள் நிறுத்தி வைத்திருந்த காரில் ஏறுவதற்கு முன்னர் அக்கடையில் தேநீர் பருகி, கடைக்காரக் கந்தையாவுக்கு நன்றி கூறிப் பிரசாதமும் வழங்கிப் புறப்பட்டனர்.

உறவினர்கள் சகலரும் தத்தம் பங்குக்குக் குழந்தைக்கு அவளின் பெயர் பொறித்த பூரணி பென்ரன் சகிதம் சங்கிலிகள், பூட்டுக் காப்பு கள், மோதிரங்கள் அன்பளித்தனர். அம்மாச்சியும் தனது பங்குக்கு, சறடு எனப்படும் தன்னுடைய அட்டியலை அழித்து ஒரு பெரிய சங்கிலியும் காவலுக்குக் கூடும் செய்து போட்டார். அம்மாச்சி குழந்தைக்கு நகை போட்டதும் தேவகுமார் பின்வருமாறு கூறுகிறார்:

தேவகுமார்:- அம்மாச்சி! குழந்தைக்கு ஒரு ஆபரணமும் தேவை யில்லை. நாங்களெல்லோரும் பவுண் நகை போட்டோ வளர்ந் தனாங்கள்? பவுண் எப்பவும் குழந்தையின் உயிருக்கு ஆபத்து. ஆகவே, குறை நினைக்க வேண்டாம். கழற்றிப் பத்திரமாக வையுங்கோ. அவா தன்ர பொருட்களைத் தான் பத்திரப்படுத்துகிற வயசு வரேக்கை அவாவின்ரை கையிலை குடுங்கோ.

அம்மாச்சி:- ஓம் மேனை! பொன்னின் குடத்துக்குப் பொட்டிட வேண்டுமோ? நான் என்ரை பூட்டிக்கு எனது பங்குக்கு ஒரு அடையாளம் இருக்க வேணும் எண்டதற்காகத்தான் கூடு- சங்கிலி செய்வித்துப் போட்டேன் என்று கூறிச் சிரித்தார் அம்மாச்சி!

தேவகுமார்:- அம்மாச்சி! சிறிய தகப்பன்மார், சிவலிங்கம் மாமா, நீங்க எல்லாரும் சேர்ந்து செய்த அன்பளிப்பு தங்கம் மொத்தம் நாற்பது (40) தங்கமாச்சுது! இது அவாவுக்கு கல்யாணத்துக்கு உதவும். பிறக்கில் எல்லாரும் பூரணிக்குட்டியைப் போல அதிட்டத்துடன் பிறக்க வேணும் என்று பூரித்தார் தேவகுமார்.

சிவலிங்கம் மாமா குழந்தைக்குக் காது குத்திப் போட்டுவிட்ட காதுக் கம்பியும் அரசமிலையும் காதிலேயே இருந்தன. அத்துடன் கழுத்தில் பஞ்சாயுதங்களுடன் கூடிய பென்ரன், காவலுக்கு அரையில் கூடு, வெள்ளிக் காப்புகள் என்பனவும் குழந்தைக்குப் போட்டிருந்தனர்.

இவ்வளவு சந்தோசங்களும் நிறைந்த நிலையில் ஒருநாள் இரவு திடீரெனத் தனக்கு நெஞ்சுக்குள் ஏதோ செய்கிறது என்று கூறி ஈஸிசெயரில் படுத்தார் அம்மாச்சி. உழைத்து உரமான அவரது உடல் மெதுவாக நடுங்கியது....

"பிள்ளை வள்ளிநாயகி, எனக்கு ஏதோ வயிற்றைப் புரட்டிச் சத்தி வாறது போலக் கிடக்குது. கொஞ்சம் சுடுதண்ணி கொண்டு வாணை' என்றார் அம்மாச்சி.

ஈஸிசெயரில் படுத்திருந்த அம்மாச்சி அருகே சென்ற வள்ளிநாயகி, 'அம்மாச்சி! என்னிலை சாய்ஞ்சு படுங்க. நான் சுடுதண்ணி பருக்குறன். குடிக்கிற பதந்தான். வாயைத் திறவுங்கோ" என்று பருக்கினாள்.

2, 3 மிடறுகள் சுடுநீர் குடித்ததும் அம்மாச்சிக்கு உடம்பு முழுவதும் தெப்பமாக வியர்த்தது. வியர்வையைத் துடைத்துப் படுக்கையில் மெதுவாகப் படுக்க வைத்தாள்; வள்ளிநாயகி. பின் சுடுதண்ணீர்ப் பாத்திரத்தைக் குசினிக்குள் வைத்துவிட்டுத் திரும்பி வந்து பார்த்தாள். அம்மாச்சி நித்திரையில் ஆழ்ந்திருந்தார். வயிறும் நெஞ்சும் மிதந்து பதிந்து சுவாசப்பை நன்றாகவே வேலை செய்தது.

பிரேமாவை அழைத்து அம்மாச்சிக்குப் பக்கத்தில் இருத்திவிட்டு வள்ளிநாயகி சமையலறையில் இராச் சாப்பாடு செய்கிற வேலையில் ஈடுபட்டாள். கொஞ்ச நேரம் கழித்து அம்மாச்சிக்குக் குடிக்கக் கொடுக்கக் கற்கண்டு போட்டுக் காய்ச்சிய பாலுடன் வள்ளிநாயகி

வந்தாள். அம்மாச்சி அருகில் வந்து, "அம்மாச்சி... அம்மாச்சி..." என்று குரல் கொடுத்தாள். ஒரு பதிலுமில்லை. அம்மாச்சியின் மூக்கின் துவாரத்தில் விரலை வைத்துப் பார்த்தாள்.

ஆ... அம்மாச்சி தனது இறுதி மூச்சை நிறுத்தி விட்டார் போலும்! "அம்மம்மா... அம்மம்மா..." என்ற பிரேமாவின் குரலுக்கும் பதில் கிடைக்கவில்லை. அவர்கள் எல்லோருக்கும் எதிர்பாராத பேரிடி! ஒவ்வொருவரும் துயரம் தாங்க முடியாமல் கதறி அழுதனர். விழுதுகளை மண்ணில் வேரூன்றச் செய்துவிட்டு, அந்தக் குடும்பத்தின் ஆலமரம் சாய்ந்துவிட்டது!!!

## 08

அவசர அவசரமாகத் தேவகுமார், சிவலிங்கம் மாமா குடும்பம் சகலரும் அயலவர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். பிறகென்ன? கட்டிப்புரண்டு தலையில் கை வைத்து அழுவோரின் அழுகையொலியில் ஊரே திரண்டு வந்தது.

வானொலி, பத்திரிகைகள் அம்மாச்சியின் இழப்பையும் இறுதி எரியூட்டல் திகதி, நேரத்தையும் அறிவித்தன. கண்டி, கொழும்பு உறவுகளும் ஓடோடி வந்தனர். ஊரிலுள்ள உறவுகளும் நட்புகளும் வந்தவர்களை நல்ல முறையில் வரவேற்று உபசரித்து, தங்க இடம் கொடுத்து, அவர்கள் திரும்பிப் போகும் வரை எந்தவிதமான குறையும் இன்றிப் பராமரித்தனர்.

அம்மாச்சியின் இறுதிக்கிரியை பற்றிச் சிவலிங்கம் மாமாவுடன் தேவகுமார் கதைக்கும் போது, "மாமா! எனக்கு இந்தப் பழைய சம்பிரதாயங்களில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. முள்ளிவாய்க்காலில் செத்த அத்தனை சனத்துக்கும் கிரியைகள் செய்தா எரித்தார்கள்? ஆனாலும், அம்மாச்சியின் விருப்பப்படி அவாவின் இறுதி நிகழ்ச்சி எல்லாம் நடத்துவோம். எங்கடை அம்மாச்சிக்கு- பறை மேளம் அடித்தல், சுண்ணமிடித்தல், பேரப்பிள்ளைகள் பந்தம் பிடித்தல், உறவினர்கள் அரப்பு எண்ணெய் தேய்த்தல், வாய்க்கரிசி போடுதல், சுடலையில் கொள்ளி குடம் உடைத்துத் தீ மூட்டுதல், வீடு

வரும்போது உலக்கையைக் கடந்து உள்ளே வருதல், மறுநாள் காடாத்துதல், ஐந்தாம் நாள் எட்டுச் செலவு, முப்பத்தொராம் நாள் அந்தியேட்டி, வருட முடிவில் ஆண்டுத் திவசம் ஆகிய இவைகள் எல்லாவற்றிலும் மிகமிக ஆழமான நம்பிக்கை உண்டு. அவாவின் நம்பிக்கைகள் அனைத்தையும் குறைவின்றிச் செய்வோம்'' என்றார்.

அம்மாச்சி மீதான தேவகுமாரின் அன்பையும் பாசத்தையும் எண்ணி வியந்தார் சிவலிங்கம் மாமா.

பொழுது புலர்ந்தது. தேவகுமாரும் சிவலிங்கம் மாமாவும் அம்மாச்சியின் இறுதிக்கிரியைகளுக்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். கண்டி, கொழும்பு பேரன்மாரும் வந்து துக்கத்தில் பங்கேற்று, தமையன் கையில் செலவுக்குக் காசு கொடுத்தனர். அம்மாச்சியின் துக்க நிகழ்வுக்கு வருகை தந்திருந்தவர்களில் பலர் ஆச்சியைப் பற்றி- அவரின் விருந்தோம்பும் குணத்தைப் பற்றி உரை நிகழ்த்தினர். உரையைச் செவிமடுத்த மக்கள் அனைவரும் கண்ணீர் வடித்தனர். அதிலும் சிறப்பாகப் பட்டினத்தாரின் அத்தனை பாடல்களையும் யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்ட கோவிந்தன் குழுவினர் பாடும்போது கல்லு மனமும் கரைந்துவிடும். ``நொந்து சுமந்து பெற்று, நோவாமல் ஏந்தி முலை தந்து வளர்த்தெடுத்த தாயாமே- அந்தி பகல் கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ நெய்யாலே தீ மூட்டுவேன்?''

``ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்று- பையன் என்ற போதே பரிந்தெடுத்துச்- செய்ய இரு கைப்புறத்தில் ஏந்திக் கனக முலை தந்தாளை- எப்பிறப்பில் காண்பேன் இனி?'' என்ற சகல பாடல்களையும் பாடினார்கள்.

அம்மாவுக்காக தலைமுடி வழித்துக் குளிப்பாட்டி, பூணூல் போட்டு, சுண்ணம் இடித்து, கொள்ளி வைத்தல், காடாத்துதல், பந்தம் பிடித்தல், அந்தியேட்டி ஆகிய அனைத்துக் காரியங்களையும் மகன் சிவலிங்கம் மாஸ்டர் செய்தார். பேரமக்கள் அனைவரும் பந்தம் பிடித்து, தங்களை வளர்த்தெடுத்த அம்மம்மாவுக்குரிய அனைத்துக் கடமைகளையும் சிறப்புறச் செய்தனர். அன்னாரது இடத்தை இன்னொருவர் வந்து செய்து முடிக்க முடியாதென்பதை அவர்கள் உறுதியாக நம்பினர்.

தினமும் மாலையில் தீபமேற்றி, தேவார திருவாசகம் பாடினார்கள். ஒரு சிறிய செம்பில் தண்ணீர் வைக்கப்பட்டிருக்கும். அந்தியேட்டிக்கு உறவும் நட்பும் அழைக்கப்பட்டு அரிசி, மரக்கறிகள், தேங்காய் உட்

படச் சகலதும் குருக்களுக்கு ஒப்படைத்து- அவரை மான்தோல் ஆசனத்தில் இருத்தி மரியாதை செலுத்தினர். ஒரு வருடம் கழிந்து ஆண்டுத் திவசமும் நடைபெற்று முடிந்தது. திவசம், அந்தியேட்டி நிகழ்ச்சிகளுக்குத் தென்னிலங்கைப் பேரமக்கள் வந்து பங்குபற்றிப் போனார்கள். அவர்களுடன் கண்டி இஸ்லாமியக் குடும்பமும் பத்தரமுல்ல- கொழும்பு சிங்களக் குடும்பமும் வந்து சென்றனர்.

புதுவருடம், ஆடிப்பிறப்புப் போன்ற விசேட நாட்களில் அம்மாச்சி யின் படத்துக்கு முன்னால் உணவு படைக்கப்பட்ட பின்னர் வீட்டார் அதனை உண்பர்.

“பூட்டக் குழந்தை பூரணியைக் கண்ட மகிழ்ச்சியுடன் அம்மாச்சி பரலோகம் போய்விட்டா” என்று வள்ளிநாயகி வருவோரிடம் சொல்லிச் சொல்லி மனதை ஆற்றிக்கொள்ளுவாள். பேரமக்களின்- சிறப்பாக, தேவகுமாரின் திருமணத்தை- அவரது மனைவியை, குழந்தையைக் கண்ணாரக் கண்டு, ‘இனி அவர்களின் வாழ்வுக்கு எனது துணை தேவை இல்லை’ என்ற நிம்மதி அம்மாச்சியின் உயிர்நீத்த முகத்தில் தென்பட்டது.

“அம்மாச்சி இல்லாத வீடு வெளிச்சுப் போச்சுது. அவாவின் வாய்க்குள்ளே தேவார திருவாசகமோ அல்லது பூரணிக்குத் தாலாட்டோ எந்நேரமும் பாட்டாக வெளிவரும். இனி அவற்றை எங்கே கேட்பது?” என்று பிரேமாவிடம் சொல்லி அழுதாள் வள்ளிநாயகி. அந்த நடமாடும் தெய்வத்தின் செயல்கள் ஒவ்வொன்றும் வள்ளிநாயகிக்கும் பிரேமாவுக்கும் மறக்க முடியாத செயலாக இருக்கிறது!

அம்மாச்சி, தான் உயிர் வாழ்ந்த காலத்தில் தனது மகளை நினைத்து (பொன்னம்மாவை) வருடப்பிறப்பின் முதல்நாள், ஆடிப்பிறப்பின் முதல்நாள், தீபாவளி முதல்நாள், தைப்பொங்கல் முதல்நாள் ஒப்புச் சொல்லி அழுகிற சில வரிகள் காதில் வந்து போகிறது. வள்ளிநாயகிக்கும் பிரேமாவுக்கும் கண்ணீர் நிற்கவில்லை.

‘நான் கூட்டி விட்ட முற்றத்திலே உன் குதி அடியைக் காணவில்லை’, ‘நீ நித்தம் வந்த வழி நெருஞ்சி படருதம்மா...’, ‘நீ பெத்த பிஞ்சுகள் உன்னைக் காணாது படலை வரை பார்க்கினமே’, ‘உன் கையால் தண்ணீர் குடித்தவர்கள்... தாகம் தணிந்தவர்கள்... நீ எப்ப வருவாயெண்டு வழியை வழி பார்க்கினமே’, ‘நான் பெற்ற குஞ்சே! நீ சாகும் வயதுமல்ல, உனக்குச் சாக்காட்டு வயதுமல்ல’

இப்படியான ஒப்பாரி (பிலாக்கணம்) அம்மாச்சியின் குரலுடன் காற்றோடு காற்றாகப் போய்விட்டது. ‘சே! அம்மாச்சி உயிரோடு இருக்கும்போது அவா பூரணியைத் தாலாட்டிய பாடல்களையாவது பதிந்து வைக்காமல் விட்டோமே’ என்று பேரப்பிள்ளைகள் கவலைப்பட்டனர்.

## 09

காலம் கறங்கு போல் சுழன்றது. அம்மாச்சியின் திவசத்தை வருடா வருடம் நினைவுகூர்வதில் வள்ளிநாயகியும் பிரேமாவும் மும்முரமாக ஈடுபட்டனர்.

கொழும்பு சிங்களக் குடும்பம் கண்டிக்குச் சென்று தலதா மாளிகை, பெரஹர விழா, பேராதனைப் பூங்கா, பேராதனைப் பல்கலைக்கழகம் இவற்றைப் பார்வையிட ஆவல் கொண்டது.

இதுகுறித்து அசோக்குமார் நந்தகுமாருக்கு அறிவித்தும் விட்டார். அதன்படி ஒரு குறிப்பிட்ட திகதியில் பிரேமலால் குமாரசிறி, தாரக்கா ரீச்சர், சரத் ஆகியோர் புகைவண்டி மூலம் கண்டியை வந்தடைந்தனர். நந்தகுமார் அவர்கள் தங்குவதற்கு விருந்தினர் விடுதியில் இரண்டு அறைகளை ஒதுக்கிக்கொடுத்தார். நட்பின் நிமித்தம் எந்தவிதமான கட்டணமும் அறவிடப்படவில்லை.

அவர்கள் பிரயாணக் களைப்புத் தீர குளியலறை சென்று நீராடி, மாற்றுடைகள் அணிந்து முதலில் தலதா மாளிகை சென்று வழிபட்டுத் திரும்ப விரும்பினர். அங்கு வெளியே விற்கப்படும் தாமரைப் பூக்களை அதற்குரிய பிளாஸ்ரிக் தட்டத்தில் வாங்கிக்கொண்டு உட்பிரகாரம் சென்று புத்தபகவானின் புனிதத் தந்தம் (பல்) பதிக்கப்பட்ட இடத்தை பயபக்தியுடன் வணங்கினார்கள்.

பின்னர் எண்கோண மண்டபத்துக்குப் படிக்கட்டு வழியே மேலேறிச் சென்று அயலிலுள்ள லேக் வாவியையும் பார்த்து மகிழ்ந்தனர். அநேக தாய்க்குலம் வெள்ளை ஆடை அணிந்து தியானத்தில் ஆழ்ந்திருப்பதையும் கண்ணுற்றனர்.

அடுத்தநாள் பேராதனைப் பூங்கா, பல்கலைக்கழக வளாகம் யாவும் பார்வையிட்டனர். ஒரே நாட்டிற்குள்ளே இருந்தும் இதுவரை காலமும்

இந்த அழகிய கண்டியை, பேராதனையை, தலதா மாளிகையைப் பார்க்காமல் இருந்து விட்டோமே என்று கவலைப்பட்டார்கள். சென்ற இடமெல்லாம் வீடியோ பிடித்தும் கமராவில் புகைப்படம் எடுத்தும் கொண்டனர்.

அவர்களுடன் பார்வையிட உள்ளே சென்ற வெளிநாட்டுக்காரர்களிடம் அதிகளவு பணம் பிரவேசக்கட்டணமாக அறவிடப்பட்டது. தங்கள் வீட்டுப் பிள்ளையாக இருக்கும் அசோக்குமாரின் அண்ணன் நந்தகுமாருக்கு மனமார்ந்த நன்றியைக் கூறி, தாங்கள் தங்கிட உதவிய விடுதி உரிமையாளர் திரு. கன்சூர் மாஸ்டருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு பயணம் புறப்பட்டனர்.

நேரில் பார்ப்பது போன்ற படமாகச் சகல இடங்களையும்-மகாவலி கங்கை உட்பட அனைத்தையும் பார்வையிட்டபின் தத்தம் இருப்பிடத்திற்குத் திரும்பினர். பேராதனைப் பூங்காவில் பூக்களின் விதைகள், சிறிய சாடிகளில் சிறிய பூங்கன்றுகள் வாங்கி வந்தனர். பூங்காவில் நீள்வரிசையில் நாட்டப்பட்டிருக்கும் நெடிதுயர்ந்த மரங்களும் அதனருகே மகாவலியின் நீரோட்டமும் அந்த இயற்கை அழகும் அவர்களது கமராவுள் படமாக்கிக்கொண்டனர். வீடு போய்ச் சேர்ந்ததும் தமது நன்றியை நந்தகுமாருக்கும் கன்சூர் மாஸ்டருக்கும் தெரிவித்துக்கொண்டனர்.

யாழ்ப்பாணத்துத் தமிழ்க் குடும்பத்து ஒரு பையனால் அவரது உடன்பிறப்பு ஊடாக எந்தவிதச் சோர்வுமின்றி சுத்தமான உணவு, தங்குமிடம் கிடைத்ததைத் தங்கள் உறவுகள், நண்பர்களுடன் கலந்து பேசி அல்பங்களை காட்டிப் பெருமகிழ்வெய்தினர். பிரேமலால் குமாரசிறி அடிக்கடி சொல்லுவார்: 'எந்த மூடனும் பணக்காரன் ஆகிவிட முடியும். ஆனால், அறிவாளிதான் ஆழமான கல்வியறிவைப் பெற்றுச் சமுதாயத்தின் முன்வரிசையில் மதிப்புடன் வாழ முடியும்' என்று.

அவருக்கு மகன் சரத்முத்தட்டுவேகமவிலும் பார்க்க மகள் திலினி MBBS பட்டம் பெற்று டாக்டராக களுபோவல வைத்தியசாலையில் கழுத்தில் ஸ்டெத் சகிதம் வெள்ளை கோர்ட் அணிந்து நோயாளர்களைப் பார்வையிட்டு வரும் காட்சி பெரிய்...ய ஆனந்தமாக இருக்கும்!

அசோக்குமார் தனது வேலையில் அதிதிறமை காட்டியதால், பதவி உயர்வுடன் தலைமைக் காரியாலயத்தில் பொறுப்பான பதவியில் அமர்த்தப்பட்டார். அவரது பழக்க வழக்கங்களும் உண்மை, நேர்மை,

திறமை ஆகிய குணாம்சங்களும் பிரேமலால் குமாரசிறி- தாரக்கா ஆசிரியத் தம்பதிகளுக்கு மிகவும் பிடித்துப்போனது.

அத்துடன், மகள் திலினி அவருடன் பழகும் புனிதமான- நளினமான புரிதல்கள் மூலம் அவரையே தங்கள் மருமகன் ஆக்கிக்கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணினார்கள். இதுபற்றி திலினியுடன் பேசுவோம் என்று நினைத்த வேளையில், திலினியே தானாக முன்வந்து அசோக்குமாரின் நற்செயல்கள் அதாவது, தங்கள் வீட்டுப் பூந்தோட்டத்தில் அவரால் ஒட்டுவைக்கப்பட்டுப் பல வர்ணத்தில் பூத்துக் குலுங்கும் செவ்வரத்தை, ரோஜா மலர்களின் மலர்ச்சியை- அதிலும் கருஞ்சிவப்பு (Dark Rose) ரோஜா கொத்துக் கொத்தாக மலர்ந்திருந்து மணம் வீசுவது மனதைக் கவருவதாகக் கூறி- தனது எண்ணக்கருத்தை நாசூக்காக வெளியிட்டாள். பெற்றோருக்கு நிறைந்த மகிழ்ச்சி. கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போன்ற ஒரு பேரானந்தம்!

இந்தப் பெற்றார் தங்கள் கருத்தை மூத்தவர் தேவகுமாருடன் தொலைபேசியில் கதைத்தபோது அவர், “எனக்கு உடனடியாகச் சம்மதம் என்ற ஒரு நம்பிக்கையை உங்களுக்குத் தர முடியாமல் இருக்கிறேன். ஏனெனில், நந்தகுமார் அசோக்கை விட இரண்டு வயது மூத்தவர். அவரின் திருமணம் முடிந்து ஒரு வருடம் கழிந்த பின்னர்தான் இவரின் திருமணத்தை நடத்துவது பற்றித் தீர்மானிக்கலாம்” என்று பவ்வியமாகக் கூறிவிட்டார்.

இந்த விடயம் இப்படி இருக்க- கண்டியில் நூர்ஷஹான் 20 வயதாக இருந்தபோது, ஒருவருக்கும் அவளுக்கும் விவாகப் பேச்சுக்கள் நடந்து ஒரு வாரத்தில் அவர் ஒரு விபத்தில் சிக்கி உயிரிழந்துவிட்டார். அதனைத் தொடர்ந்து நூர்ஷஹான் படிப்பைத் தொடர்ந்து தாதியப் பட்டத்தை முடித்து, பெற்றாரின் விருப்பப்படி வைத்தியசாலையின் நிர்வாகத்தை நடத்தி வருகின்றாள். புடைவைக் கடைக் கட்டிடமே வைத்தியசாலையாக உருமாறி இருக்கிறது.

முகம்மது வாப்பாவுக்கும் ஆயிஷா உம்மாவுக்கும் கன்சூர் அண்ணனுக்கும் நந்தகுமாரின் படிப்பிலும் தொழிலிலும் ஒழுக்கத் திலும் நிர்வாகத் திறமையிலும் உயரமான தோற்றத்திலும் அழகிலும் மிக மிக விருப்பம். வாய்விட்டு ஒருநாள் தங்கள் மனம் திறந்து கதைத்தார்கள். அதன்படி மூத்தவர் தேவகுமாருடன் இந்த விடயம் பற்றிக் கதைத்து முடிவெடுப்பது என்று உடனடியாகச் செயலிலும் இறங்கினர். கன்சூர் மாஸ்டர்தான் இதுபற்றிக் கதைத்தார்.

முதலில் தேவகுமார் தயக்கம் காட்டினார். பிறகு சகல விபரத்தையும் கன்சூர் மாஸ்டர் கூறியபின், ‘தம்பிக்கு விருப்பமென்றால் எங்களுக்கும் விருப்பம்தான்” என்று கூறினார்.

வாழ்க்கை என்பது ஒருமுறை தானே வாழ முடியும்? அதிலும் இருமனம் ஒத்தால் திருமணம் என்பதற்கமைய புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும் அமைந்துவிட்டால், சந்தோஷத்துக்குக் குறைவே இருக்காது. இரு குடும்பத்தினரும் கலந்து பேசி ஒரு நல்ல நாளில் பேராசிரியர் நுஃமான் அவர்களின் தலைமையில் கண்டி கலாசார மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. மோதிரம் மாற்றுதல், மாலை மாற்றுதல், அறிஞர்களின் வாழ்த்துரைகள் இவற்றுடனும் விருந்துபசாரத்துடனும் இந்தத் திருமணம் சிறப்புற நிறைவேறியது.

திருமண நிகழ்ச்சி முடிந்த பின் வருகையாளர்கள் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குத் தமது இல்லம் நோக்கித் திரும்ப முன்னர் பேராதனைப் பூங்கா, குறிஞ்சிக் குமரன் ஆலயம், தலதா மாளிகை, பல்கலைக்கழகம் ஆகிய இடங்களைப் பார்வையிட்டுத் திரும்பினர்.

பேராசிரியர் நுஃமான் தனது வாழ்த்துரையில், ‘மதிப்பிற்குரிய பீடாதிபதியாக இருக்கும் திரு. நந்தகுமார் அவர்கள் எனது மாணவர்களுள் ஒருவர். பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை வினா மூலம் கேட்டறிந்து தனது மாணவர்களுக்குத் தெளிவான பதிலால் சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தி வருபவர். அவரை எனது மாணவன் என்று கூறுவதில் நான் பெருமைப்படுகின்றேன். தம்பதிகள் இருவரும் பதினாறும் பெற்று நீடூழி காலம் வளமோடு வாழ என் மனப்பூர்வமான நல்வாழ்த்துகள்” என்றார்.

வருகையாளர்கள் தாங்கள் கால் பதித்த இடங்கள் எல்லாம் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டனர்.

கன்சூர் மாஸ்டர் தனது மைத்துனர் நந்தகுமாருக்குத் தங்களிடமுள்ள இரண்டு கார்களில் ஒன்றைத் தகப்பன் மூலம் வழங்க முன்வந்தார். நந்தகுமார் மறுத்துவிட்டார். தனக்கு அரசாங்கம் வழங்கிய ஜீப் வண்டி இருப்பதாகவும் அதனையே தான் பயன்படுத்துவதாகவும் கூறிவிட்டார். வாப்பா, உம்மா, கன்சூர் விடுவதாக இல்லை. “உங்கள் அரச கருமத் தேவைகளுக்கு அதனைப் பாவியுங்கள். தனிப்பட்ட முறையில் உறவினர்களைச் சந்திக்க வரும்போது இந்தக்

*காரை பாவியுங்கள்" என்று கூறி அவரது கையில் கார்ச் சாவியை ஒப்படைத்தனர்.*

## 10

*ஊர் திரும்பிய தேவகுமார் குடும்பத்தினர் தாங்கள் வாங்கி வந்த மங்குஸ்தான், றம்புட்டான், அப்பிள் பழங்களை அயலவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தனர். அத்துடன், திருமண அல்பத்தையும் அவர்களுக்குக் காட்டி மகிழ்ந்தனர். ஏற்கனவே நடந்த அசோக்குமாரின் திருமணப் பேச்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கு திலினியின் பெற்றோரும் தமையன் சரத்முத்தட்டுவேகமவும் ஆயத்தமாகினர்.*

*யாழ்ப்பாணத்தில்- தங்கை கேட்டுக்கொண்டதற்கிணங்க திலினியின் புகைப்படத்தை அதாவது, பட்டமளிப்புப் படத்தை அனுப்பி வைத்தனர். Dr. Thiliny Premalal Kumarasiri - MBBS. இந்தப் புகைப்படத்தைப் பார்த்ததும் வீட்டார் அனைவரும் மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப்பட்டனர். படிப்பு, அழகு, அடக்கம், உயரம் இவை எல்லாவற்றையும் பார்க்கும் போது, அண்ணாவுக்கென்று பிறந்த பிறப்பு மாதிரியே இருக்கிறார் என்று பிரேமாவுக்கு அளவிட முடியாத பூரிப்பு!*

*அந்தப் புகைப்படத்திற்கு பிறேம் போட்டு ஹோலில் மாட்டி வைத்தனர். மறுபுறத்தில் அசோக்குமாரின் பட்டமளிப்புப புகைப்படமும் அதனருகில் நந்தகுமாரின் திருமணப் படமும் மாட்டப்பட்டிருந்தன.*

*அடுத்த வருடம் தேவகுமார் குடும்பத்துடன் சகலரும் கொழும்புக்குச் சென்றனர். அசோக்குமார்- திலினி திருமணம் பேராசிரியர் தில்லைநாதன் அவர்களின் தலைமையில் காலி முகத்திடல் ஹோட்டலில் (Galle Face Hotel) சிறப்புற நடந்தது. ஏராளமான நண்பர்கள், அறிஞர்கள், வைத்தியத் துறையில் உள்ளவர்கள் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்கள். மோதிரம் மாற்றுதல், மாலை மாற்றுதல், விருந்தினர்களை உபசரித்தல், சாயந்தரம் கேக் வெட்டுதல்- இவ்வளவு நிகழ்ச்சிகளுடனும் விவாகம் இனிது*

நிறைவேறியது. தலைமை தாங்கிய பேராசிரியர் திரு. தில்லைநாதன் அவர்கள் தனது வாழ்த்துரையில், "நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தினால் பல அசம்பாவிதங்கள் நடந்துவிட்டன. கல்வியறிவும் மனிதநேயமும் புரிந்துணர்வும் கொண்ட இரு குடும்பங்கள் இந்தத் திருமணத்தின் மூலம், நாட்டின் இறைமையையும் ஒற்றுமையையும் வலியுறுத்தி நிற்கின்றன. இது போன்ற புரிந்துணர்வுத் திருமணங்கள் அநேகம் நடைபெற வேண்டும். பழங்காலத்தில் கலிங்க நாட்டிலிருந்து வந்த விஜயன் என்ற சிங்கள அரச வம்சத்தின் முன்னோடி மன்னன் குவேனி என்ற தமிழ்ப் பெண்ணையும் பின்னர் பாண்டிய இளவரசியையும் மணந்ததாக நாம் வரலாற்றில் படித்திருக்கிறோம். மனிதரை மனிதர் மதிக்கும் நேச மனப்பான்மை நன்கு வளர வேண்டும். புதுமணத் தம்பதிகள் வாழ்வில் சகலமும் பெற்றுப் பல்லாண்டு காலம் வளமோடும் நலமோடும் வாழ மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்" என்றார்.

இந்த இனிய திருமணம் நிறைவேறிய பின்னர் விருந்தினர்கள் காலிமுகக் கடற்கரை, தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை, நூதனசாலை ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டனர். ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திற்கும் சென்று தரிசித்துத் திரும்பினர்.

ரியூட்டறி மற்றும் தென்னந்தோப்புக்களின் பராமரிப்பு இவற்றுடன் ஈடுபாட்டில் இருந்த குமார் சகோதரர்கள் இருவரும் இரவு நேரத்தில் தனியார் ரியூட்டறி ஒன்றில் சேர்ந்து படித்துச் சட்டத்துறை வல்லுநர்களாகச் சித்தி பெற்று LLB சான்றிதழுக்கு உரிமையாளராகினர். அவர்கள் தங்களுக்குத் துணையாக அவ்வூரில் A/L சித்தியடைந்திருந்த வேலழகன் என்ற இளைஞரையும் தம்முடன் சேர்த்துக்கொண்டனர். அவரும் சகல வேலைகளிலும் கண்ணுங்கருத்துமாகச் செயற்பட்டார். அவருக்கு இரண்டு தங்கைகள் உள்ளனர். பெயர்கள் வனஜா, கிரிஜா என்பதாகும். அவர்களும் A/L வரை கல்வியறிவு பெற்றிருந்தனர். தகப்பனில்லாத குடும்பம். தாய் பத்மா சில வீடுகளுக்குச் சென்று மா இடித்து வறுத்துக் கொடுத்து உழைக்கும் காசில் தனது குழந்தைகளை நன்கு படிக்க வைத்திருந்தார்.

வேலழகன் அந்தக் கிராமத்தின் சனசமூக நிலையச் செயலாளராகவும் இளைஞர் விளையாட்டு மன்றத் தலைவராகவும் சர்வோதய நிர்வாகசபை உறுப்பினராகவும் செயற்படும் ஒரு துடிப்புள்ள

இளைஞராக விளங்கியதால், அவரைத் தமது கல்வி நிலைய, தோட்ட நிர்வாக அலுவல்களில் ஈடுபடுத்தி- A/L உடன் நிறுத்தியிருந்த கல்வியையும் தொடரச் செய்து ஊக்குவித்தனர். G.A.Q ஒரு வருடத்தில் முடிய, அடுத்துப் பட்டக் கல்வியையும் தாங்கள் படித்து முன்னேறிய ரியூட்டறியின் வழிகாட்டலில் தொடரச் செய்தனர்.

தங்கை பிரேமா, இந்த வேலழகனின் இரண்டு தங்கைமாரும் படித்துவிட்டு எந்த வருவாயுமின்றி வீட்டில் இருப்பதனை அறிந்து அவர்கள் இருவரும் சிங்கர் தையல் மெஷின் மாதாந்தக் கட்டுக் காசுக்கு எடுக்கக்கூடிய வழி வகைகளைத் தமையன்மார் மூலம் ஊக்குவித்தாள். அவர்கள் இருவரும் தனித்தனியாக ஒவ்வொரு தையல் மெஷினுக்கு உரிமையாளராக மாற்றம் பெற்று- நாளொன்றிற்கு வருவாய் ரூபா 2,500 ஈட்டக்கூடிய திறமை பெற்றுவிட்டனர். இதனால் மாதாந்தம் 1,000 ரூபா வீதம் இரண்டு வருடங்களில் தையல் மெஷின் கடன்களை அடைத்துவிட்டனர்.

மகனும் மகள்மாரும் உழைக்கத் தொடங்கிய பின்னர் தாயார் பத்மா கூலி வேலைகளுக்குச் செல்வதில்லை. தந்தையார் கட்டி வைத்த அந்த- அவர்கள் வாழ்கின்ற வீட்டிற்கு நிலக்காறைகள் சிதலமாகியும் பக்கச் சுவர்களில் வெடிப்பும் மேலே கூரையின் சலாகைகள் முல்லையன் எனப்படும் ஒருவகைக் கறையான் அரிப்பால் பழுதுபட்டும் இருந்தன. இதனைப் பற்றி வேலழகன் குமார் சகோதரர்களுடன் ஒருநாள் கதைத்தார். “அதற்கென்ன? உடனடியாக செயலில் இறங்குவோம்” என உற்சாகப்படுத்தி- மழைக்காலம் வருவதற்கு முன்னர் துரிதகதியில் மேலே உள்ள ஓடுகள் யாவும் பத்திரமாக இறக்கப்பட்டு, பனைமரங்கள், சலாகைகள் பழுதடைந்தவைகள் நீக்கப்பட்டு ‘சொலிக்கனம்’ என்ற மருந்து பூசப்பட்டுப் புதிய மரங்கள், புதிய சலாகைகள் வரவழைக்கப்பட்டு மூன்று நாட்களில் பழையபடி ஓடுகள், முகட்டோடுகள், உடைந்தவற்றிற்குப் பதிலாகப் புதியவை வாங்கியதுடன் உள்ளுக்கு சீற் அடித்து, மின் இணைப்புச் செய்வதற்காக வயறிங் எனப்படும் வேலைகளும் செய்யப்பட்டன. வேலழகன் கடந்த இரண்டு வருடங்களில் மாதாந்தம் தனக்கு ரூபா 30,000 வீதம் பெற்றுக்கொண்ட சம்பளத்தை வீணே செலவழிக்காமல் தபால்நிலையச் சேமிப்புக் கணக்கில் போட்டுப் பேணி வைத்ததனால் மனத் தைரியத்துடன் வீடு திருத்துகிற வேலையில் இறங்கினார். பக்கச் சுவர்களில் இரண்டு இடத்தில் வெடிப்புத் தென்பட்டது. அவற்றிற்கு நன்றாகச் சீமெந்து பூசி, சுண்ணாம்புப் பூச்சும் செய்யப்பட்டன. சகல

வேலைகளையும் கண்ணுங் கருத்துமாகச் செய்ததால், நிலத்துக்கு மாபிள் பதிப்பிக்கும் வேலையும் நடந்தது. வீட்டுக் கூடத்தின் முன்னால் 6 அடி அகலத்தில் தனிய மண் போட்டுச் சாணகத்தால் மெழுகப்பட்டிருந்தது. அந்த இடத்தை மாத்திரம் ஒன்றும் செய்யாது விட்டுவிடும்படி தாயார் கேட்டுக்கொண்டதற்கமைவாக அந்த இடத்தைச் சீண்டவில்லை.

பழைய முறையில் அமைக்கப்பட்டிருந்த சமையலறைக்கு 'பைப்' சகிதம் தண்ணீர் இணைப்பு, மின் இணைப்பு இவற்றுடன் 'பிரிட்ஜ்' அதாவது, குளிர்சாதனப் பெட்டி, 'காஸ் சிலிண்டர்' வைப்பது சுவருக்கு வெளியேயுள்ள விறாந்தையில் என்று தீர்மானித்து, சிலிண்டரிலிருந்து வரும் குழாய் உள்ளே வர சுவரில் ஒரு துளையும் இடப்பட்டது. அம்மி, குளவி, ஆட்டுக்கல், திரிகை, உலக்கை யாவும் வெளி விறாந்தையில் பத்திரமாகவும் அம்மிக்கு உயரமான ஒரு குந்தும் கட்டப்பட்டது. அந்த இடத்தில் அவசரத்துக்கு- அதுவும் மின்சாரம் இல்லாத போது விறகு அடுப்பில் சமைப்பதற்கு அடுப்பு மேடை, புகை போகப் புகைக்கூடு யாவும் வெளி விறாந்தையில் அழகாகக் கட்டப்பட்டன. காகம், கோழி முதலிய பறவைகள் வராமலும் நாய், பூனை உள்ளே வராமலும் தடுக்க 'கல்வன்ஸ் நெற்' வலையினால் பாதுகாப்புச் செய்யப்பட்டது. கல் உரலுக்கு நிரந்தரமாக நிலத்தில் 2 அடி ஆழமான குழி உள்ளே வைப்பிடம் செய்யப்பட்டது.

மற்றது வீட்டு வேலை, தோட்ட வேலைகளுக்குப் பாவிக்கப்படும் மண்வெட்டி, கோடரி, அலவாங்கு, பிக்கான், குப்பை விறாண்டி, குத்தூசி, அரிவாள் திருவுபலகை, சத்தகம், பாக்குவெட்டி, வயது போனவர்கள் பாக்கு இடிப்பதற்குப் பாக்கு உரல், சாவி சகிதம் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தன. சாமி அறைக்குள் அழகான, அளவான விநாயகர், இலக்குமி, முருகன், சரஸ்வதி, சிவன்-பார்வதியுடன் விநாயகர், முருகன் சிறு குழந்தைகளாக 5 படங்களுக்குத் தூண்டாமணி விளக்கும் பொருத்தப்பட்டது. மின் குமிழியுடன் கூடிய ஒரு மின் விளக்கும் பெண்டூலத்துடன் கூடிய சுவர்க் கடிகாரமும் வைக்கப்பட்டன. ஒவ்வொரு அறைக்கும் மின் விளக்கு, மின் விசிறி அமைத்தது போல சுவர்க் கடிகாரமும் பொருத்தப்பட்டது. கதவு, யன்னல்களுக்கு 'கேட்டின்' துணிகள் போடப்பட்டன. ஹோலுக்குள் 'ஷோபா செற்றியும்' வெளி விறாந்தைக்கு கதிரைகள், வாங்குகள், ஸ்டூல்கள், ரீப்போக்கள் வைக்கப்பட்டிருந்தன.

வெளி முற்றத்தின் ஒரு ஓரமாக துளசிமாடம் அமைக்கப்பட்டு விஷ்ணு

துளசிக் கன்றுகள் நாட்டப்பட்டன. துளசிமாடம் தாமரைப் பூ வடிவில் மேற்புறம் இதழ்கள் வடிவில் அமைக்கப்பட்டிருந்தது. வீட்டிலிருந்து 'கேற்' வரை கமுக மரங்கள் நாட்டப்பட்டிருந்தன. 'கேற்' சிறிது கறள் பிடித்து இருந்ததால் முழுக் கறளும் சுரண்டப்பட்டு 'அன்ரிக்குறொஸ்' பூசப்பட்டு மேலே சிவப்புப் பூச்சும் பூசப்பட்டது. 'கேற்'றிலிருந்து வீடு வரை இரு மருங்கும் பூமரங்கள் நாட்டப்பட்டு செவ்வரத்தை, எக்ஸ்சோறா, மல்லிகை, கனகாம்பரம், நித்தியகல்யாணி, நந்தியாவட்டை, வாடா மல்லிகை, பல வண்ண ரோஜாக்கள் ஆகியன ஜாடிகளில் அழகாக- வரிசையாக நாட்டப்பட்டும் வைக்கப்பட்டும் இருந்தன. மதில் கரையோரம் 'மணிப் பிளான்ற்' எனப்படும் கொடியும் 'பாம்றீ' எனப்படும் மரங்களும் சாடிகளில் வைக்கப்பட்டிருந்தன.

"வேலழகன் சேர்ந்த மனிதர்கள் ரியூட்டறி சகோதரர்கள் தங்கள் வீட்டைப் போல அவனது வீட்டையும் அழகாகவும் கவர்ச்சியாகவும் செய்ய வழிவகை செய்து கொடுத்துவிட்டனர்" என்று ஊர் மக்கள் பேசிக்கொண்டார்கள். 'பருமரத்தைச் சுற்றிய பல்லியும் பாழ் போகாது' என்றொரு பழமொழி உண்டல்லவா?

## 11

கொழும்பு அசோக்குமார் பதவி உயர்வு பெற்று, தலைமைக் காரியாலயத்தில் முதன்மை அதிகாரியாக விளங்கினார். திலினி களுபோவல அரசினர் வைத்தியசாலையில் டாக்டராகப் பணிபுரிந்து வருகின்றார். தற்போது தமிழ் மொழியை நன்கு பேச, எழுதக் கற்றுக்கொண்டார். அங்கு சிகிச்சைக்கு வரும் மூவின மக்களுக்கும் எவ்வித அசூயையும் இன்றித் தனது கடமைகளைக் கண்ணுங் கருத்துமாகச் செய்து வந்தாள்.

அதேபோல நூர்ஷஹானும் தனது சொந்த வைத்தியசாலை நிர்வாகத்தையும் வெளிநோயாளர் விடுதியையும் சிறந்த முறையில் நிர்வகித்து வந்தாள். பீடாதிபதியாகப் பதவி உயர்வு பெற்ற நந்தகுமார் தனக்கு வழங்கப்பட்ட அரசாங்க பங்களாவில் தங்கினார். அவருக்குச் சமையலுக்கென ஒரு சமையற்காரனும் வாகனம் செலுத்த ஒரு சாரதியையும் அரசாங்கம் கொடுத்தும், வாகனத்தைத் தானே

செலுத்துவார். உணவை விடுதி மாணவர்களின் உணவில் உண்பார். 'பிரசிடென்ற்' சாப்பிடுகிற சாப்பாடு என்று குக்குகள் அனைவரும் சுத்தமாகவும் ருசியாகவும் சமையலில் திறமை காட்டினர்.

பீடாதிபதி தனக்கு விருப்பமான உணவைத் தனது சமையலாள் மூலம் சமைப்பித்து உண்ண முடியும். இருந்தும், ஏன் அவர் விடுதி மாணவர்களின் உணவில் உண்கிறாரென்பது யாரும் அறியாத இரகசியம். உணவில் கல், நெல், கீரைக் கறிக்குள் புல் இவை யாவும் முன்பு இருந்ததாகவும் மாணவர்கள் ருசியில்லை என்ற காரணம் காட்டி உணவை வீண் விரயம் செய்ததையும் அறிந்திருந்தார்.

சிலவேளைகளில் தானே சமையல் நடக்குமிடத்திற்குத் திடீரென வந்து, "எங்கே உங்கள் சனிற்ரறிக் கொண்டிஷனைப் பார்ப்போம்" எனப் பார்வையிடுவார். அதனால், அத்தனை சமையல்காரரும் பாத்திரங்கள், சமைத்த உணவுகள், பரிமாறும் இடங்கள் ஆகியவற்றில் ஒரு இலையான் கூட அணுகவிடமாட்டார்கள்.

பொருட்கள் வாங்கி வைத்திருக்கும் 'ஸ்டோர் றூமையும்' திடீரெனப் பிரவேசித்துப் பார்ப்பார்கள். உணவு தயாரிக்க வாங்கிய அரிசி, பருப்பு, மா, சீனி, மரக்கறி வகைகள் திகதி காலாவதியாகிப் போகாமல்- சகலவற்றையும் கவனித்து Expiry date பார்த்துப் பார்த்துப் பாவனைக்கு உதவாதவற்றைக் கழிக்கும் படி கூறி, இனிமேல் கொள்வனவு செய்யும் பொருட்கள் நல்ல தரமாக இருக்கும்படி பார்த்து வாங்கும்படி ஆலோசனையும் கூறினார். பீடாதிபதி எந்த நாள், எந்த நேரம் உள்ளே வந்து பரிசோதனை நடத்தி விடுவாரோ என்ற பயத்தில் அவர்கள் எந்த நேரமும் சமையற்கூடம் மாத்திரமல்ல, தாங்களும் சுத்தமான ஆடையுடனே காட்சியளிப்பர்.

அத்துடன், தங்களுக்குத் தேங்காய் திருவுவதற்கு ஒரு மெஷினும் இடியப்பம் பிழிவதற்கு ஒரு மெஷினும் அவசியம் தேவைப்படுகிறது என்று கூறினர். அவர்களது கோரிக்கையும் அந்த வாரத்திலேயே நிறைவேற்றப்பட்டது. லீவே இல்லாமல் தாங்கள் மாதம் முழுவதும் விடுதியில் வேலை செய்வதால் தங்களுக்கு வார இறுதி நாள் விடுமுறை வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். அதற்கு மாத்திரம் பீடாதிபதி, "மாணவர்களும் தவணைக்கு இறுதியில் தானே வீடு போகிறார்கள்? அதேபோல உங்களுக்கும் லீவு கிடைக்குது தானே? தவிர்க்க முடியாது நோய், துன்பம் வந்துவிட்டால் மெடிக்கல் லீவில் வீடு போகலாம்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டார்.

60 வயதின் மேல் அரசாங்கப் பென்ஷன் கிடைக்கிற குக் வேலையை விட முடியாது தானே! அதைவிட இந்தப் பீடாதிபதி வந்தபின் விடுதி உணவுப் பொருட்கள் வாங்குகிற பணம் முந்தைய நிர்வாகத்தை விடக் கிட்டத்தட்ட மூவாயிரம் ரூபா மாதாந்தம் குறைந்து வருவதனால், அவர்களது சேவையைப் பாராட்டி மாதா மாதம் ஆயிரம் ரூபா பரிசு பெறுகிறவர்களாக மாறினர். இதனால் மனம் மகிழ்ந்து அந்தக் கொம்பவுண்ட் நிறைய மரக்கறிகள், வாழை முதலியவற்றைப் பயிரிடத் தொடங்கினர்.

முன் கை நீண்டால் முழங்கை நீளும் என்பது பழமொழி. கரட், பப்பாசி, பீன்ஸ், பூசணி, பாகல், தக்காளி, பயிற்றங்கொடி, முள்ளங்கி, நோக்கோட், கீரை, மரவள்ளி இவற்றுடன் வாழை, கறி முருங்கை முதலியவற்றையும் உண்டாக்கி- வளாக நிலத்தையும் சோலையாக்கிப் பயன்தரு மரக்கறி வகைகளை உற்பத்தி செய்ததை கல்வியியல் கல்லூரிகளுக்கான ஆணையாளர் அவர்கள் ஒருநாள் திடீர் விஜயம் செய்தவாறு- நிர்வாக ஒழுங்குமுறையைப் பரிசோதித்த பின்னர் வளாகச் சுற்றுப்புறத்தையும் நோட்டமிட்டார். அவருக்கே பெரிய அதிசயம்! ‘இந்தக் கல்வியியற் கல்லூரி தொடங்கிப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால், இந்த வருடம் வளாக நிலத்தினுள்ளே அநேக மரக்கறிகளை உற்பத்தி செய்வதைப் பார்க்க மிகவும் பெருமையாக இருக்கிறது’ என்று கல்லூரி வருகையாளர் பதிவேட்டில் எழுதிச் சென்றார். சமையற்காரரும் தங்கள் பீடாதிபதி சேரின் ஊக்கமும் அவரது நேரடிக் கண்காணிப்பும்தான் காரணம் என்று கூறினர். அங்கு படிக்கும் மாணவ மாணவிகளும் இதனை ஒரு முன்னோடி நிகழ்வாக முன்னெடுத்து- தங்கள் வீடுகளிலும் ஒரு நிலத்தைக் கூட வீணாக விடாமல் மரக்கறிகளை உற்பத்தி செய்யத் தொடங்கினர். கோவா, லீக்ஸ், பீன்ஸ் யாவும் ஆற்றுத் தண்ணீருக்கு கிசு கிசுவென வளர்ந்து பயன்தரத் தொடங்கிவிட்டன.

விரிவுரையாளர்கள், கற்கும் மாணவர்கள், அங்கு கடமையாற்றும் சிற்றூழியர்கள் கூட இந்தச் செயலால் விழிப்படைந்தனர். ஒவ்வொருவரும் தத்தம் வளவுகளில் மரக்கறி வகைகளை உற்பத்தி செய்து வீட்டின் பொருளாதாரத்தை வளர்த்தனர். ‘அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி’ என்றொரு முதுமொழி இருக்கிறதல்லவா!

பீடாதிபதி மண்ணில் இறங்கி மண்வெட்டி பிடித்து வேலை செய்யும் போது ஒவ்வொருவர் மனதிலும் ஒரு புது உற்சாகம், உத்வேகம்

ஊற்றெடுத்து ஓடியது. அவர்களுக்குத் தெரியாது- பீடாதிபதி சிறுவனாக இருந்த காலத்திலே அனுபவித்த வறுமை காரணமாகச் சகோதரர்கள் ஒன்றுபட்டுத் தோட்ட வேலை செய்து, வைரம் பாய்ந்த கைகள், விரல்கள் சாட்சியாகுமே! சக விரிவுரையாளர்களும் “இப்போது படுக்கையில் சரிந்தவுடனேயே தூக்கம் வந்துவிடுகிறது. வியர்வை வெளியேறுகிறபடியால் உடம்பும் பாரம் குறைந்தது போலத் தெரிகிறது” என்று பேசிக்கொண்டார்கள்.

கொழும்பு அசோக்குமார் தான் வசிக்கும் இருப்பிடத்தைப் பூக்கள் நிறைந்த நந்தவனமாக மாற்றியிருந்தார். திலினியின் வீட்டையும் அழகுபடுத்தியதோடு, வீட்டைச் சுற்றி மரக்கறிகள் பயிரிட்டுப் பலாபலன்களைச் பிரேமலால் குமாரசிறீ, தாரக்கா தம்பதிகள் ஒவ்வொரு நாள் காலையிலும் தக்காளிப்பழம், பாகற்காய், புடோலங்காய், கத்தரிக்காய், பீன்ஸ், காய் மிளகாய் இவற்றைச் செடிகளிலிருந்து பறிக்கும் போது, மருமகனின் விடாமுயற்சியைப் பாராட்டாமல் இருப்பதில்லை! இந்த நிலையில் திலினி மசக்கை என்ற இயற்கை நிகழ்வுக்கு உட்பட்டிருப்பது கண்டு உள்ளம் பூரித்தனர்.

‘திலினி தாயாகப் போகிறார்’ என்ற நற்செய்தி தேவகுமார் குடும்பத்தில்- சிறப்பாக வள்ளிநாயகிக்கும் பிரேமாவுக்கும் மிகுந்த மனமகிழ்ச்சியைக் கொடுத்தது. “கிட்ட இருந்தாலாவது யாப் பண்டம் என்று சொல்லப்படும் மாவடு, ஒடியல் கூழ் செய்து கொடுக்கலாம். நாமோ தூரத்தில் இருக்கிறோமே! தெரியாமலா பெரியோர்கள், “தூரத்துத் தண்ணி ஆபத்துக்குதவாது” என்று சொல்லி வைத்தார்கள்.

வள்ளிநாயகிக்கு அம்மாச்சி செய்து கொடுத்த ஒவ்வொரு பண்டமும் நினைவுக்கு வந்தது. மாங்காய் ஊறுகாய், எலுமிச்சை ஊறுகாய், நெல்லி ஊறுகாய் ஆகியவற்றை ஞானகுமார் மூலம் கொழும்புக்கு அனுப்பிவைத்தார். அவர்களுக்குக் கிடைக்காத யாழ்ப்பாணச் சாமான்கள் வேறு என்ன அனுப்பலாம் என்று யோசிக்க ஒன்றுமே மனதுக்குத் தென்படவில்லை. பப்பாசிப் பழம், அன்னாசிப் பழங்களைத் தவிர்க்கும்படியும் அவை கருவை அழித்து விடுமென்றும் கூறும்படி சொல்லி அனுப்பினார்கள்.

அங்கிருந்து திரும்பும்போது முந்திரிகை, அப்பிள், மன்றின் ஒறேஞ் ஆகிய பழங்களுடன் பூரணி விளையாடச் சிறு பொம்மைகள், குட்டிக் கார்கள், தண்டவாளத்தில் ஓடும் இரயில், அமுக்கினால் முட்டையிடும்

கோழி ஆகிய பொருட்களை திலினி கொடுத்துவிட்டிருந்தார். இப்படியே நாட்கள் ஓடி ஒன்பது மாதங்களும் ஒரு வாரமும் பூர்த்தியான நிலையில்- சத்திரசிகிச்சை மூலம் ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு நாக்பூஷண் என்ற பெயரைச் சூட்டினர். நாகலிங்கம் பரம்பரையின் 'நா' குழந்தையின் பெயரில் இடம்பெற்றது அனைவருக்கும் மகிழ்ச்சி. வெற்றிலையில் குங்குமப் பூவை உள்ளே வைத்து பிரசவத் தாயை மென்று விழுங்கும்படி கொடுப்பார்களாம். அதில் கிரந்தியை வெட்டக்கூடிய சக்தி இருக்கிறதாம்.

குழந்தை நாக்பூஷணுக்கு அணிவிக்கக் கைக்கு காப்பு, கழுத்துக்குப் பஞ்சாயுத இலச்சினையுடன் கூடிய சங்கிலி, அரைக்கு தங்கத்தாலான அரைஞாண்கொடி யாவும் செய்வித்துக்கொண்டு தேவகுமாரும் தங்கை பிரேமாவும் கொழும்புக்குப் புறப்பட்டுப் போனார்கள். அசோக் "உங்கள் ஆசைக்கு முதலாம் மாதம் முடிந்த பின் காப்பை அணிவிக்கிறேன். மற்றைய யாவும் பிறகு பார்க்கலாம்" என்று கூறி அவர்களையும் இணங்கச் செய்தார்.

அவர்கள் ஊருக்குத் திரும்பும்போது, டம்புல்ல சந்தையில் பேருந்து நிற்பாட்டிய இடத்தில் கோவா, லீக்ஸ், கொலிபிளவர், சவ்சவ், நோக்கூட், கரட், போஞ்சி ஆகிய மரக்கறிகள் வாங்கி வந்தனர். அந்த மரக்கறிகளை இங்கிலீஷ் மரக்கறிகள் என்று அழைப்பர். ஏனெனில், வெள்ளைக்காரன் இலங்கைக்கு வந்தபின் இந்த மரக்கறிகளைத்தான் உற்பத்தி செய்வித்து, தானும் பாவித்தானாம். கொண்டு போன பொருட்களில் யாழ்ப்பாண முருங்கைக்காயும் பாரைக் கருவாடும் மிகவும் பிரயோசனப்பட்டதாக தாரக்கா ரீச்சர் சொல்லித் தனது நன்றியையும் வள்ளிநாயகிக்குக் கூறும்படி சொல்லி விட்டாராம்.

ஊரில் குழந்தை பூரணியின் பிறந்தநாளை ஆடம்பரமின்றி அடக்கமாக வீடடங்கச் செய்து முடித்தார்கள். போட்டோக்கள் பிடிக்கப்பட்டு அல்பத்தில் வைக்கப்பட்டன. பிரேமாவும் வனஜா, கிரிஜா சகோதரிகளும் ஆளுக்கொரு சட்டை ஆர்க்கன்டி துணியில் பேபி 'Frock' தைத்து அணிவித்துப் புகைப்படம் பிடித்துக்கொண்டனர்.

## 12

தகப்பன் நாகலிங்கமும் துணைவியார் பொன்னம்மாவும் மன மொத்த தம்பதிகளாக வாழ்ந்து, குழந்தைகளையும் பெற்று, குடியிருந்த வீட்டை விட ஒரு பத்துப் பரப்பு நிலத்தையும் வாங்கி வைத்தவர்கள். ஊரில் அவர்களை சாடிக்கு ஏற்ற மூடிதான் என்றும் சம்பாரிப்பில் சமர்த்தர்கள் என்றும் குறிப்பிடுவார்கள். செப்புச் சல்லியையும் சேமியுங்கள் என்ற தத்துவத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள். அதன்படிதான் கண்டியில் வாழும் தம்பியும் கொழும்பில் வாழும் தம்பியும் தமையன் தேவகுமாரின் பிற்காலச் சீவியத்தை முன்னிட்டு மாதா மாதம் சம்பளமெடுத்தவுடன் இருவரும் தத்தமது பங்குக்குத் தமையனின் பெயரில் வங்கியில் வைப்புப் பணமாக இட்டு வைக்கத் தவறுவதேயில்லை.

'வயது போன காலத்திலே அண்ணாவுக்கு பென்ஷனா வரப்போகிறது? காலம் முழுவதும் உழைத்து உழைத்துத் தேய்ந்துபோன உடம்பு. சகோதரர்களுக்கு உணவும் உடையும் கல்வியும் குறைவின்றிக் கொடுத்த சீமான்'' என்று அம்மாச்சி உயிரோடிருந்த காலத்திலே அடிக்கடி சொல்லுவார்.

குமார் சகோதரர்கள் தாங்கள் நடத்தி வந்த ரியூட்டறி வளவில் தேங்காய்களை வீட்டுப் பாவனை போக மாதாந்தம் ரூபா 5,000 இற்கு லொறிக்காரருக்கு விற்பார்கள். விழும் தென்லோலைகளை மட்டையை வெட்டிப் போட்டு நன்றாக நனையவிட்டு இரண்டாகப் பிளந்து பின்னி, ஈரமில்லாமல் காயவிட்டு 20 பாதி அதாவது, 10 ஓலை 1 கட்டு என்ற வீதம் மாதத்தில் ஓலை விற்கிற காசே ரூபா ஆயிரத்துக்கு மேலே வரும். கிடுகு வேலி அடைப்பவர்கள் தேடி வந்து வாங்குவார்கள்.

விழுகிற பாளை, பன்னாடை இவற்றைச் சிறிய துண்டுகளாக வெட்டி வீட்டுச் சமையல் வேலைக்கு எடுத்துச் செல்வார்கள். பார்ப்பவர்கள், "நாகலிங்கத்தாற்றை பெடியள் மண்ணையும் பொன்னாக்கிப் போடுவார்கள்'' என்று வியந்து கூறுவார்கள்.

குமார் சகோதரர்கள் இருவரும் LLB பரீட்சையில் தேறிய பின்னர் ஒரு பிரபல சட்டத்தரணிக்கு உதவியாளராகச் சேர்ந்து தமது வேலை அனுபவங்களைப் பெருக்கிக்கொண்டனர். பகல் முழுவதும் ரியூட்டறி

*கணினி வகுப்பு, தோட்டப் பராமரிப்பு, இரவில் சட்டவல்லுநர் மேலதிகப் பயிற்சிகள்! அவர்கள் கற்ற முறைப்படி வேலழகனையும் மேலே படிக்கச் சொல்லித் தூண்டினார்கள். அதன்படி அவரும் படிக்கத் தொடங்கினார். LLB படிப்புக்கு விண்ணப்பித்தார். ஊக்கமும் விடாமுயற்சியும் உள்ள பிள்ளைகள் முன்னேறத் தடை கிடையாது!*

*அண்ணாவின் ஊக்கத்தைக் கண்ட வனஜா, கிரிஜா தாமும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக A/L பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெற்றனர். அடுத்து G.A.Q எடுத்து பாஸ் பண்ணிவிட்டால் பட்டப் படிப்பு தமிழ், சரித்திரம், பொருளியல் ஆகிய மூன்றையும் பிரேமாவின் வழிகாட்டலின் கீழ் படித்து முடித்துவிடலாம் என்று தன்னார்வத்துடன் செயலில் இறங்கினர். தாயார் பத்மாவுக்கு மனம் நிறைந்த சந்தோஷம்.*

*வீட்டு வறுமையில் இடைநிறுத்தப்பட்ட வேலழகனின் தொழில், படிப்பு, வீடு திருத்தியது ஆகியவை நாகலிங்கண்ணற்ற பிள்ளை யளிட்டை போனபடியால் தானே!*

*பொம்பிளைப் பிள்ளையள் தைத்து உழைத்து மெஷினுக்கு கட்டுக் காசும் கட்டி முடித்து, தங்களுக்கும் எனக்கும் கழுத்துக்கும் கைக்கும் என்று தேடிப் போட்டுதுகள். இப்ப மேலை படிக்கப் போறம் என்று ஊக்கமாக இரவு 11.00 மணி வரை ஒரே படிப்புத்தான்! ஆளுக்கொரு 'லப்டொப்' வாங்கிப் போட்டுதுகள்! அதைப்போல வாழ்க்கையும் நல்லபடியாக வந்து வாய்க்க வேண்டுமென குலதெய்வம் அம்பாளிடம் மன்றாடுவார்.*

*சின்னவர் ஞானகுமார் தனது A/L இற்குப் பிறகு தொழில்நுட்பக் கல்லூரியில் படித்துக்கொண்டு சர்வகலாசாலைப் புகுமுகப் பரீட்சையில் தேறி, மொறட்டுவ பல்கலைக்கழகம் செல்கிறார். அவர் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் படித்த காலத்தில் விரிவுரையாளர் இராதாகிருஷ்ணனின் வழிகாட்டலின் கீழ் அமெரிக்க சுதந்திரதேவி சிலையை மெழுகு பொம்மையாக வடிவமைத்தார். அது கொழும்பிலுள்ள அமெரிக்க உயர்ஸ்தானிகர் காரியாலயத்திற்கு அன்பளிப்பாக வழங்க அமெரிக்காவிலிருந்து அங்கே வருகை தந்திருந்த ஒரு உயரதிகாரி அந்த மெழுகு பொம்மையைப் பார்த்துவிட்டு, அசல் சுதந்திரதேவி இதுதான். இதை வடிவமைத்தவர் யாரென விசாரித்து அவரைப் பாராட்ட விரும்பினார்.*

*அவர் படித்துக்கொண்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஞானகுமார் நாகலிங்கம் என்ற பெயருள்ள ஒரு தமிழ் இளைஞர்தான்*

என்று அறிந்துகொண்டார். அவரைக் கண்டு பாராட்ட நேரில் செல்ல விரும்பினார். அவர் பாதுகாப்புக்களுடன் மொறட்டுவ பல்கலைக்கழகத்துக்கு விஜயம் மேற்கொண்டார். விருந்தினர் கூடத்தில் அந்த அதிகாரிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கையைப் பற்றியும் நாட்டின் கல்வி வளர்ச்சி பற்றியும் குறிப்பிட்டுப் பேசிய அவர், ஞானகுமாரைத் தனியாக அழைத்து, "நீங்கள் சுதந்திரதேவியின் வலது காதின் கீழே ஒரு கறுப்பு மச்சத்தை இட்டிருக்கிறீர்களே! அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?" என்று கேட்டார்.

அதற்கு ஞானகுமார், "நாங்கள் குழந்தைகளாக இருந்த காலத்தில் எங்கடை அம்மாச்சி திருஷ்டிபடாமல் அப்படியொரு கறுப்பு அடையாளம் இடுவார். அதனால்தான் அழகிய சுதந்திரதேவிக்கு திருஷ்டிபடாமல் அந்தக் கறுப்பு மச்சத்தை இட்டேன்" எனச் சிறு குழந்தை போலக் கூறினார்.

அதைக் கேட்ட அந்த அதிகாரி, "அப்படி ஒரு அழகிய மச்சத்தை எங்கள் நாட்டில் வீற்றிருக்கும் சுதந்திரதேவியின் வலது பக்கக் காதின் கீழ் அதை ஆக்கியவர் இட்டிருக்கிறார். அதனை நேரில் பார்க்காத நீங்கள், பெயருக்கேற்ற ஞானிதான்" என்று புகழ்ந்து பாராட்டியதோடு, அமெரிக்க நாட்டுப் புலைமைப்பரிசில் மேற்படிப்பும் 'ஸ்கொலர்ஷிப் புடன்' கூடிய இருவழி விமானப் பிரயாணச் சீட்டும் அங்கு போய்ச் சேர்ந்தவுடன் அனுப்பிவைத்தார்.

ஞானகுமாருக்கோ மனம் நிறைந்த சந்தோஷம்! தனக்குள்ளே மறைந்து கிடந்த திறமையை வெளி உலகத்துக்குக் காட்டிடக் கலங்கரை விளக்குப் போல வழிகாட்டிய விரிவுரையாளர் இராதாகிருஷ்ணன் அவர்களின் இடையறா முயற்சியை மனதுள் வியந்தார்.

விரிவுரையாளர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்குக் குடியிருக்கச் சொந்த வீடு கிடையாது. கல்லூரிக்கு அண்மையாக ஒரு வீட்டில் இதுவரை காலமும் வாடகைக்குத்தான் வாழ்ந்து வருகிறார். மனைவிக்குச் சீதனமாகக் கொடுத்த வீட்டில் ஒரு வறிய குடும்பம் கிராமத்தில் வாழ்ந்து வருகிறது. அவர்களுக்கும் சம்பளம், சாப்பாட்டுச் செலவு, வீட்டு வாடகை, பிள்ளைகளின் படிப்புச் செலவு என்று போய்விடும். ஒரு சதமும் மிஞ்சுவதில்லை. ஏற்கனவே இருந்த கடனும் குறைக்கப்படவே இல்லை. இதனை ஒருநாள் அவரின் வீட்டிற்குச் சென்ற ஞானகுமார் கவனித்தார். திருமதி பத்மலோசினி

இராதாகிருஷ்ணன் ஒரு கிழிந்த பழைய சேலையுடன்தான் கதவோரம் நின்று கதைத்தார்.

ஞானகுமாருக்கு இந்தக் காட்சி மனதை உருக்கிவிட்டது. வீட்டிற்கு வந்து வேலழகனிடம் கூறினார். வாரத்தில் இருமுறை எங்கள் வீட்டிலிருந்து அரிசி, தேங்காய், மரக்கறிகள் கொண்டு போய் விரிவுரையாளர் வீட்டில் கொடுக்க வேண்டும் என்று. அவரின் ஊக்குவிப்பினால்தான் தனக்கு அமெரிக்காவுக்குச் சென்று படிக்கிற புலைமைப்பரிசில் கல்வி கிடைக்கிறது என்றும் ஒருநாளைக்கு நீங்கள் அங்கு போய்ப் பார்த்தால், அந்த அம்மா குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியாமல் கஷ்டப்படுகிறமையை பார்த்துச் சகிக்க மாட்டீர்கள் என்றும் உருக்கமாகக் கூறினார். தமையன் தேவகுமாரிடமும் விரிவுரையாளர் வீட்டுப் பற்றாக்குறை வாழ்வுப் போராட்டத்தைக் கூறினார்.

"தம்பி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று ஒரு பழமொழி இருக்கிறது. அவர் கல்விச் செயல்களால் மற்ற மாணவர்களை ஊக்கப்படுத்தி உயர்த்தி விடுகிறார். அவர் செய்த நல்ல செயல்கள் அவரது குடும்பத்தின் பராமரிப்பை உமது செயல்கள் மூலம் நிறைவேற்றுகிறது" என்று தம்பியாரைப் பாராட்டினார்.

அத்துடன், விரிவுரையாளர் குடும்பத்துக்குத் திருமண வெள்ளி விழாவையொட்டி அன்னாருக்கும் துணைவியாருக்கும் நல்ல உடுப்புகள், சேலைகள் சகிதம் பணமும் 25,000ம் வழங்கி அவர்களைச் சந்தோஷப்படுத்தினார். மகள்கள் இருவரும் பாமா, சீதா பெயருடையவர்கள். வயது 20, 18 நடக்கிறது. மூத்தவள் பாமா யாழ். பல்கலைக்கழகத்தில் B.Com முதலாம் ஆண்டிலும் சின்னவள் சீதா A/L பரீட்சைப் பெறுபேறு எதிர்பார்க்கிறாள் என்பதும் அறிய முடிந்தது.

ஞானகுமாரின் சிபாரிசின்படி வேலழகன் தவறாது வாரம் இருமுறை அவர்கள் வீட்டுச் சமையற்கூடத்தைக் குறைவறக் கவனித்து வந்தார்.

ஞானகுமார் நியூயோர்க்கிலுள்ள அல்பெனி பல்கலைக்கழகத்தில் தனது மாஸ்டர் பட்டத்தினையும் அதனைத் தொடர்ந்து தனது Ph.D பட்டத்தையும் படித்துக்கொண்டிருக்கிறார். அங்கு படிக்கும் காலத்தில் தனது இடையறா முயற்சியினால் (NASA) நாசா நிறுவனத்திற்குச் சென்று பார்க்கின்ற வாய்ப்பினையும் பெற்றார். அதனைச் சென்று

பார்த்த பின்னாலே இந்த மனிதனால் ஆகாதது ஒன்றுமில்லை என்று எத்தனை வியத்தகு சாதனைகளைப் பாராட்டியிருக்கிறார்.

ஒரு தடவைதான் பூமியில் பிறக்கின்ற அதிஷ்டத்தைப் பெற்ற நாங்கள் இந்த மானிட வாய்ப்பினை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமா? என்று யோசித்து தனது பேராசிரியர் Dr. George Derwent Thomson அவர்களின் அனுசரணையுடன் சத்தமின்றிப் பறக்கும் ஒரு சிறிய விமானத்தை உருவாக்கினார். அப்படிப் பலரும் பலவிதமாகச் செய்து சமர்ப்பித்தனர். இதில் இரட்டை என்சின்களில் ஒன்று செயலிழக்க மற்றது தானே இயங்கும் சக்தி கொண்டது. மற்றது இயங்கும் போது முதலாவது தானாகவே பலம்பெற்று இயங்கு சக்தி பெற்று விடும்.

இவற்றையெல்லாம் பார்த்துத் தனக்கு மூத்த இரண்டு அண்ணாக்கள் எவ்வளவோ திறமைசாலிகள். அவர்கள் வீட்டு நிர்வாகம், தோட்ட நிர்வாகம், ரியூட்டறி நிர்வாகம் இவற்றின் மத்தியில் இரவு வகுப்புக்குச் சமுகமளித்து LLB பரீட்சையில் தேறியதுடன், தங்கள் உதவியாளர் வேலழகனை படிக்க வைத்துள்ளனர். 'இராதாகிருஷ்ணன் சேர் தனது இடையறாத ஊக்கத்தினால் என்னை அமெரிக்க மண்ணிலே படிக்கக்கூடிய வாய்ப்பினைத் தேடித் தந்திருக்கிறார். நான் யாருக்காவது வழிகாட்டியாக இருந்திருக்கிறேனா? யாரையாவது ஊக்கப்படுத்தும் உந்துசக்தியாகத் திகழ்ந்திருக்கிறேனா?' என்ற கேள்விகளைத் தனக்குத் தானே கேட்டிருக்கிறான்.

இராதாகிருஷ்ணன் சேருக்கு ஆண் குழந்தைகள் கிடையாது. அவரது பெண் பிள்ளைகள் இரண்டு பேருக்கும் நல்வழிகாட்டும் ஒரு ஆசானாக நான் இருக்க வேண்டும். 'செய்தார்க்குச் செய்வது செத்த பிறகோ? உயிரோடு இருக்கும்போது தானே செய்ய வேண்டும்!' என்று மனதில் உறுதி செய்துகொண்டு "சாதாரணமாக இறுதிப் பரீட்சையில் தேறினால் போதாது. முதற் பிரிவில் சித்தி பெறவேண்டும். கல்வியால் உயர்ந்து உலக வங்கியில் கடமையாற்றும் திண்மையைப் பெறவேண்டும்" என்று E.mail மூலமும் கைத் தொலைபேசி மூலமும் பாமா, சீதா இவர்களுக்கு ஒரு அண்ணனின் ஆலோசனை போல வற்புறுத்திக் கண்டிப்போடு கூறுவார்.

"அப்பாவின் விஞ்ஞான ரீதியான துறைக்குச் சீதாவாவது காலடி எடுத்து வைக்க வேண்டும். விஞ்ஞானம் வளர்ந்து சந்திர மண்டலம், செவ்வாய் வரை சென்று அங்கு மனிதன் குடியேறி வாழ்வதற்குக்

காற்று, தண்ணீர் இருக்கிறதா என்று ஆராயும் போது, நாங்கள் 'உண்டுண்டு உறங்குவதைக் கண்டதோடல்லாமல் ஒரு பயன் அடைந்திலேனே...' என்று இருக்கலாமா?'' என்று வார இறுதியில் அவரது கைபேசி தனது இலட்சியத்தைக் குறைந்தது பத்து நிமிடங்களுக்குக் குறையாது பேசுகிறது.

'அரிது அரிது! மானிடராகப் பிறப்பது அரிது! அதிலும் அரிது கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிதிலும் அரிது' என்ற ஔவைப்பாட்டியின் வாக்கினைத் தினமும் மற்றவர்களுடன் கதைக்கும் போது மிகவும் பொறுமையாகக் கூறுவார். ஞானகுமாரின் அறிவுரைகளைச் செவிமடுத்த இரு சகோதரிகளும் அவரது வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து அவற்றைச் செயலில் செய்யவும் தொடங்கினர். வீட்டில் வசதி குறைந்த பிள்ளைகளைக் கூப்பிட்டுத் தமது கல்விக் கருவூலத்தையும் அவர்களுடன் பகிர்ந்தனர்.

'இன்னும் இன்னும் படித்துக்கொண்டே இருக்க வேண்டும்' என்ற ஆவலை அவர்கள் உள்ளத்திலும் விதைத்தனர். அந்த விதை வளர்ந்து பெரிய விருட்சமாக மாற- அவர்களும் தோற்றுகிற பரீட்சையெல்லாம் வெற்றி என்ற பெறுபேற்றினைத் தவிர வெறெதையும் தரவில்லை.

'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்ற முதுமொழிக்கமைய தோற்றுகிற பரீட்சைகளில் திறமைச் சித்தி பெறுவது அவர்களுக்கு ஒரு கைவந்த கலையாகிவிட்டது. 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர், கற்பிலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் இடுகாட்டில் காக்கை உவர்க்கும் பிணம்' என்ற முதுமொழிக்கமைவாக, படித்த குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவரும் தங்களை நம்பி வந்த மற்றவர்களின் கல்வியின் உயர்வில் அக்கறை செலுத்தி, அவர்களை இந்தச் சமுதாயத்துக்குப் பயனுள்ளவர்களாக ஆக்கும் பணியில் அதிக கவனம் செலுத்தினர். 'நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை' என்பது முதுமொழி. மனிதர்கள் ஒவ்வொருவரும் புரிந்துணர்வும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் உள்ளவர்களாக இருப்பின் நமக்குள் எந்தவிதமான மனக்கசப்போ வெறுப்புணர்வோ உண்டாகாதல்லவா!

'நாகலிங்கம் அண்ணனின் பிள்ளைகளை நம்பி அவர்கள் பின்னே சென்றவர்கள் அத்தனை பேரும் நன்கு படித்த, மதிப்பான தொழிலும் பார்த்து, சமுதாயத்தின் கண்களுக்கு முதலாந்தர மனிதர்களாக முன்னேறி விட்டார்கள்' என்று மக்கள் மனதில் அவர்கள் ஒரு சிறந்த-உயர்வான இடத்தில் வைத்து மதிக்கப்பட்டனர்.

பிரேமா யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் இசைத்துறையில் இறுதியாண்டில் படித்துக்கொண்டிருக்கிறாள். அது மாத்திரமன்றித் தங்கள் குடும்பத்தை நம்பி வந்த வேலழகனை LLB பரீட்சைக்குத் தயார்படுத்தி வைத்துள்ளனர். வேலழகனின் தங்கைமார் இரு வரையும் G.A.Q வுக்குப் பின் பட்டக் கல்வியைத் தொடரும்படி ஊக்குவித்துள்ளனர். 'ஊரார் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும்' என்ற முதுமொழிக்கமைய விரிவுரையாளர் திரு. இராதாகிருஷ்ணனின் மகள்மார் இருவரும் யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பில் முதலாவது ஆண்டில் பாமாவும் புகுமுகத்தில் சீதாவும் படிக்கின்றனர். திரு.இராதாகிருஷ்ணன் அவர்களின் வீட்டில் தற்போது பற்றாக்குறை என்ற சொல்லுக்கே இடமில்லாமல் ஓடி விடுகிறது.

## 13

அமெரிக்கப் பல்கலைக்கழக நிர்வாகம் ஞானகுமாருக்கு நிரந்தர வாசத் தகுதியும் விரிவுரையாளர் பதவியும் கை நிறைந்த சம்பளமும் தங்குமிட வசதியும் ஒரு வாகனமும் தர முன்வந்தது. ஆனால், அவரோ, “என்னை மனித சமுதாயத்தின் கண்களுக்கு ஒரு கல்விமானாகக் காட்டிய இலங்கைத் தாய்க்கும் அவள் தந்த அடிப்படைக் கல்விக்கும் நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்” எனக் கூறி, தான் தனது பிறந்த நாடாகிய இலங்கைக்குச் செல்ல வேண்டும் என்றும் தேவைப்பட்டால், இன்னும் இன்னும் அறிவுப் பசிக்கு அமெரிக்கா உதவ வேண்டுமெனவும் கூறி நாட்டிற்குத் திரும்பும் ஆயத்தங்களில் இறங்கிவிட்டார். அவருக்குப் பல்கலைக்கழகம் மானியமாக 10,000 டொலரை அவரது இலங்கை வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டது.

இந்தச் சந்தோஷமான நேரத்தில் கண்டியில் நூர்ஷஹான் அண்ணிக்கு கண்டி ஆஸ்பத்திரியில் ஒரு அழகிய ஆண் குழந்தை சத்திரசிகிச்சை மூலம் கிடைத்தது. அந்தக் குழந்தைக்கு நாமனுல்லா என்ற பெயரிடப்பட்டது. தேவகுமாருக்குப் பெரிய சந்தோஷம். தங்கள் தகப்பனின் 'நா' என்ற முன்னெழுத்தை தனது தம்பியர் இருவரும் குழந்தைகளுக்குச் சூட்டியது பற்றித் தன்னுடன் வேலை செய்யும் சகல தொழிலாளர்களிடமும் சொல்லிப் பூரித்துப் போனார்.

கண்டியில் குழந்தைக்கும் கொழும்புக் குழந்தைக்குச் செய்தது போலவே கை, கழுத்து, அரைஞாண் எனத் தங்கத்தால் செய்வித்துக்கொண்டு- சகோதரி பிரேமாவையும் கூட்டிக்கொண்டு யாழ்ப்பாண முருங்கைக்காய் வாழைமடலில் வைத்துக் கட்டி, பாரைக் கருவாடு, பனங்கட்டி, நல்லெண்ணெய் சகிதம் போனார். பெரியண்ணா, தங்கை இவர்களைக் கண்டது நந்தகுமாருக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி. அவர் தமையனாரிடம் கூறினார், "அண்ணா, இங்கே குடும்பத்தில் தங்கம் நிறைந்து கிடக்கிறது. ஆனால், நான் எந்தவித ஆபரணத்தையும் குழந்தைக்கு அணிவிக்க மாட்டேன். உங்கள் ஆசைக்கு, 'இது பெரியப்பா தந்த பரிசு' என்று கூறி அவர் வளர்ந்த பின் காட்டுகிறேன்" என்று கூறிவிட்டார். அவர்களும் மன மகிழ்வோடு 3 நாட்கள் தங்கியிருந்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பினர்.

யாழ்ப்பாணத்தில் கிடைக்காத சவ்சவ், லீக்ஸ், கோவாப்பூ, கரட், நோக்கூட் ஆகிய மரக்கறிகளை வாங்கி வந்தனர். கண்டியில் விற்கும் கித்துள் எனப்படும் வெல்லமும் வாங்கி வந்தனர். ஊருக்கு வந்தபின் நெருங்கிய உறவினர்களுடன் விரிவுரையாளர் வீடு, வேலழகன் வீடு சகலருக்கும் பகிர்ந்தளித்தனர்.

ஞானகுமார் அமெரிக்காவிலிருந்து திரும்பும்போது தனது விரிவுரை யாளருக்கு ஒரு கைக் கடிகாரமும் வீடியோ கமராவும் வாங்கி வந்தார். நேரே கொழும்பு அண்ணாவின் குழந்தை, கண்டி அண்ணாவின் குழந்தை ஆகிய குடும்ப வாரிசுகளைக் கண்டுகளித்து, யாழ்ப்பாணம் திரும்பினார். யாழ். புகையிரத நிலையத்திற்கு வீட்டாருடன் இராதாகிருஷ்ணன் ஐயாவின் மகள்மாரும் சமுகமளித்திருந்தனர்.

தமையனார் தேவகுமாரின் கால்களிலும் விரிவுரையாளர் இராதாகிருஷ்ணன் கால்களிலும் தொட்டு வணங்கினார். அவருக்கு குழந்தை பூரணியும் பாமா, சீதா சகோதரிகளும் பூங்கொத்து வழங்கி வரவேற்றனர். வீட்டார் வந்த காரில் ஏற முன்னர் ஞானகுமார் தனது விரிவுரையாளருக்கு வாங்கி வந்த கைக் கடிகாரத்தையும் வீடியோ கமரா பெட்டியையும் அமெரிக்க டொலர் 1000 உம் வைத்துக் கொடுத்தார். பூரணி கையில் அண்ணாமார் தந்துவிட்ட பொம்மைகளைக் கொடுத்தார். இரண்டு கார்களும் தத்தம் இருப்பிடம் நோக்கிச் சென்றன.

அமெரிக்க நாடு சென்று படித்தது மட்டுமல்ல, தான் பிறந்த தாய்நாட்டிற்குத் திரும்பி வந்து சேவை செய்கின்ற ஞானகுமாரை பல

கல்லூரிகள் பிரதம விருந்தினராக வரவேற்று, மேளதாளங்கள், மலர் மாலைகள், செங்கம்பள வரவேற்புகள் அளித்துக் கௌரவிக்கின்ற நிகழ்வுகள் அடிக்கடி நடைபெறுகின்றன. பத்திரிகை, தொலைக்காட்சி நிறுவனங்கள் அவரைப் பேட்டி கண்டு மக்கள் மத்தியில் அவரைப் பிரபலப்படுத்தின. தனது மாணவன் அன்போடு கொண்டு வந்து தந்த வீடியோ கமரா மூலம் அவருக்குக் கொடுக்கப்படுகிற ஒவ்வொரு கௌரவ நிகழ்ச்சிகளையும் தந்தையின் சொற்படி மகள் பாமா படம் பிடித்துக் கொள்வாள்.

இந்த நாட்களில் பூரணிக்கு, ஆரணி என்ற பெயருடன் ஒரு தங்கையும் வந்து பிறந்தாள். அவள் பிறந்து 2 மாதங்கள் கழிந்தவுடன் தேவகுமார்-வள்ளிநாயகி தம்பதிகளின் தீர்மானத்தின்படி குமார் சகோதரர்களுக்கு வனஜா, கிரிஜா சகோதரிகளை நிச்சயித்துத் திருமண ஏற்பாடு நடைபெற்றுச் செயல் வடிவமாகவும் ஆரவாரமற்ற முறையில் நடைபெற்றது.

அவ்வூர்ப் பெரியார் வைத்திய கலாநிதியும் பல அநேக குழந்தைகளின் தந்தையுமாகிய Dr. கைலாயபிள்ளை அவர்களின் தலைமையின் கீழ் திருமண நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன. திருமணம் வழக்கம்பரை திருமண மண்டபத்தில் நடந்தது. சுமார் 1,000 பேரை உள்ளடக்கக்கூடிய பெரிய மண்டபம் அது. திருமண மேடையும் விசாலமானது. நாற்காலிகள் யாவும் நிரம்பியிருந்தன. வந்த விருந்தினர்களுக்கு மதிய உணவு, குளிர்பான உபசரிப்பு யாவும் சிறப்புற நடைபெற்றன.

திருமணத்திற்கு வந்திருந்த கண்டி, கொழும்பு சகோதரர்களும் அவர்களது மாமன், மாமி, மைத்துனர்கள், குழந்தைகள் யாவரும் தத்தம் இடங்களுக்குத் திரும்பிட புதியவர்களின் இல்லறம் தங்கை பிரேமாவுக்கு கட்டப்பட்ட வீட்டில் ஆரம்பித்தது.

சுழிபுரம் கங்காணி சண்முகம் என்பவர் தனக்குப் பிள்ளை குட்டிகள் இல்லை; தனது வெற்று நிலம் 10 பரப்பையும் வயற்காணி 30 பரப்பையும் விலைக்கு விற்பதாக வேலழகனிடம் கூறி, "தம்பீ! நீங்கள் வாங்கினால்தான் அந்த நிலங்கள் அடுத்த வருடத்திலேயே வளம் பெறும். எப்படியும் உங்கள் நண்பர்களுடன் கலந்தாலோசித்து எனது நிலத்தை வாங்குங்கள்" என்று அடிக்கடி சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்.

அதன்படி மேற்படி இருவரும் சேர்த்து வைத்திருந்த பணமும் சீதனமாக மைத்துனர் வேலழகன் வழங்கிய பணமும் மொத்தம் 40 இலட்சம் தேறியது. வெற்று நிலத்தில் கிணறு கிடையாது. வயலில் கிணறு இருந்தது. குடிநிலம் தரிசு நிலம்தான். பரப்பு 2 இலட்சம் படியும் வயற்காணி 30 பரப்பும் 15 இலட்சம் ரூபாவுக்கும் வாங்கி, இருவருக்கும் சமபங்காக நொத்தாரிசு குமாரசாமியால் உறுதி எழுதப்பட்டு, கச்சேரியில் பதிவு செய்யப்பட்டு, உறுதியும் வந்துவிட்டது. வயல் நிலத்துக்கு தனது டிராக்டர் (உழவு இயந்திரம்) நீரிறைக்கும் இயந்திரம் (வாட்டர்பம்) விதை நெல், சூடு மிதிக்கப் பயன்படுத்தப்படும் கதிர்ப்பாய்கள், பழைய கலப்பைகள், கூர் அரிவாள்கள், உழுகிற சோடி வடக்கன் மாடுகள் யாவற்றையும் அன்பளிப்பாக அவர்களின் கையில் கொடுத்து, “உரிமை அழியாமல் அறுவடைக்கு அறுவடை எங்கள் இரண்டு பேருக்கும் வருடக் கஞ்சிக்கு அரிசியாகத் தந்தால் போதும். எனக்கென்ன பிள்ளையா குட்டியா? சொந்தக்காரர்கள் மலடனின் சொத்தைச் சும்மா தந்தால் என்ன? என்று கேட்டார்கள். இது என்ர தாய்வழிச் சொத்து. அதைப் பேணிப் பாதுகாப்பவர் கையில் ஒப்படைப்பதுதான் நீதியானது. நான் இவ்வளவு காலமும் மூடனாக இருந்துவிட்டேன். இது எப்பவோ செய்திருக்க வேண்டிய வேலை” என்று கூறி, “உங்களுக்கு வீடு கட்ட, கிணறு வெட்ட காசு தந்து உதவுகிறேன். அதற்கு வட்டி தரவேண்டாம். தருகிற முதலையே கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பித் தந்தால் போதும்” என்று மலர்ந்த முகத்துடன் கூறினார்.

கங்காணியார் கையுதவியுடனும் குடியிருப்பு வளவில் கிணறு 10 அடி விட்டத்தில் வெட்டிக் கட்டப்பட்டு மோட்டர், மின் இணைப்பு, சுற்று மதில் சகிதம் கிடுகிடுவென வேலைகள் துரிதகதியில் ஆரம்பித்தன. 5, 5 பரப்பாகப் பிரிக்கப்பட்டு ஒரே மாதிரி வீடுகள் மாதிரிப் படம் வரையப்பட்டு கிராமசபையிடமும் உத்தரவு பெற்றாகிவிட்டது.

தங்கை பிரேமாவின் வீடு போலவே அறைகள், சாப்பாட்டறை, ஹோல், சாமியறை, சமையலறைகள், வெளி விறாந்தைகள், வாகனம் நிறுத்த கராஜ், வீட்டு முன்னுக்கு போர்டிக்கோ சகிதம் அசுரவேகத்தில் இரண்டு வீடுகளும் தொடங்கிய வருடத்திலேயே குடிபூரல் என்ற விழாவை வெற்றிகரமாக முடித்துக்கொண்டன.

வயல் நிலத்தில் முதலிலேயே கிணறு இருந்தது தானே! தேவைப்படும் நேரத்தில் தங்கள் திருக்கல் வண்டியில் (வாட்டர்பம்) நீரிறைக்கும்

இயந்திரத்தைக் கொண்டு சென்று இறைப்பார்கள். நெல் அறுவடை முடிந்ததும் எள் விதைப்பார்கள். எள் விதைக்கும் நேரம் சுற்றிவர மரக்கறி வகைகளை நாட்டுவர். பாகல், பயறு, கத்தரி, வெண்டி, தக்காளி இவற்றை உற்பத்தி செய்து இரவுக் காவலுக்கு மாறி மாறி ஓடுவர். இராக் காவல் காத்துப் பாதுகாப்புச் செய்தனர். ஊரவரும் உறவினரும், "இவர்கள் என்னடா, நினைத்த காரியத்தை உடனுக்குடன் செய்து முடிக்கிறார்களே! பொன்னும் மண்ணும் அவர்களைத் தேடி வருகுதே!" என்று அங்கலாய்ப்பார்கள். அவர்களுக்குத் தெரியாதா, "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்" என்பது. இனித் தங்கை பிரேமா- வேலழகனின் திருமணம்தான். அந்தத் திருமணத்தை தொல்புரக்கிழார் சிவபாதசுந்தரனார் அவர்களது தலைமையில் வீட்டில் நடத்தினர். அவர்களது ரியூட்டறி நண்பர்கள் தொடக்கம் வயல்வெளியில் உதவி செய்யும் சாதாரண தொழிலாளி வரை சமபந்தி போசனத்தில் வரவேற்கப்பட்டனர்.

சிலருக்கு வயிற்றெரிச்சல்! "இவ்வளவு காலமும் கட்டிக் காத்து வந்த சாதி அந்தச் சாதி. குலம் அந்த ஆசாரம் என்ற கட்டுக்கோப்பை இப்படி இந்த நாகலிங்கத்தாற்றை பெடியன்கள் தகர்த்து விட் டார்களே!" என்று கூறுவோருக்கு, 'மாற்றம் ஒன்றே மாறாதது.' 'சாதிகள் இல்லையடி பாப்பா! குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்! நீதி நிறைந்த மதி கல்வி நிறைய உடையவர்கள் மேலோர்' என்ற பாரதியார் பாடலும், 'சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால் நீதி வழுவா நெறிமுறையில் மேதினியில் இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தார், பட்டாங்கில் உள்ளபடி' என்ற ஒளவை பாடலுக்கமைவாகக் கல்வியிலும் செல்வத்திலும் தங்களுக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி வாழ்ந்து காட்டத் தொடங்கினர்.

நாகலிங்கத்தார் வீட்டுத் திருமணம் என்றால் உறவினர்கள் வீட்டில் சமையல் நடப்பதில்லை. சமையல், சாப்பாடு சகலதும் திருமண வீட்டிலேயே ஒப் பேறிவிடும். அதுபோலத்தான் குமார் சகோதரர்களும், "உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற திருமறைக்கமைவாக உறவையும் நட்பையும் பேணி நடந்து வருகிறார்கள்.

குமார் சகோதரர்களின் முயற்சியினாலும் வேலழகனின் ஒத்துழைப் பினாலும் கங்காணி சண்முகத்தாரின் பரோபகாரத்தினாலும் இரண்டு வீடுகள், இரண்டு திருமணங்கள் ஒப்பேறிவிட்டன. வயல் மண்

தாயாரும் கண் திறந்து அருள்பாலிக்கத் தொடங்கிவிட்டாள். எல்லோர் வீட்டு கோர்க்காலிகளிலும் நெல் மூடைகளும் எள்ளுச் சாக்கும் நிரம்பி வழிய, சமையலறைகளில் மரக்கறிகளும் தேங்காயும் பொலிந்து காணப்பட்டன.

## 14

அமெரிக்காவிலிருந்து ஞானகுமார் நாடு திரும்பிய பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்திலும் வாரத்தில் மூன்று மூன்று நாட்களுக்கு வருகை விரிவுரையாளராகச் சென்று கடமையாற்றுகிறார். இனிக் கடைக்குட்டி ஞானகுமாரின் திருமணம்தான் நடந்தேற வேண்டும். ஞானகுமார் தனது ஆசானும் வழிகாட்டியுமாகத் திகழ்ந்த இராதாகிருஷ்ணன் அவர்களது மூத்த மகளான பாமாவைத் திருமணம் செய்ய விரும்புவதாக மூத்த அண்ணா தேவகுமாரின் காதுகளுக்கு அண்ணி வள்ளிநாயகி வாயிலாக வெளியிட்டார்.

இதற்கிடையில் குடியிருக்கச் சொந்த வீடில்லாத இராதாகிருஷ்ண னுக்குத் தனது புலைமைப்பரிசில் பணத்தில் அவரது கல்லூரிக்கு அருகாமையில் ஒரு வீடு- அது புதிதாக 'துஷி பில்டேர்ஸ்' நிறுவனத்தால் ஆக்கப்பட்டது. நிலம் ஏழு பரப்பு. சுற்றிவர மதில்கள், கேற், நல்ல தண்ணீர்க் கிணறு, வீடு ஒரு கூரை, 5 அறைகள். பூசை அறை, சமையல் அறை, 5 அறைகளுடன் கூடிய குளியலறைகள், ஒரு பெரிய ஹோல், ஒரு பக்கச் சுவரோரமாகப் படிக்கட்டு, அதன் வழியே மேலே சென்றால் தண்ணீர்த் தாங்கி (Water tank), சுத்தப்படுத்தத் துணிகள், காயவிட ஒரு இடமுண்டு. வீட்டைச் சுற்றிப் பூமரங்களும் வாழை, தென்னை, மா, பலா போன்ற பயன்தரு மரங்களும் நாட்டப்பட்டுச் சோலையாகக் காட்சியளித்தது.

ஞானகுமாரின் வங்கிக் கணக்கில் 10 கோடி ரூபா இருந்தது. விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கும் தனது திருமணத்திற்கும் வைத்துக் கொண்டு 8 கோடி ரூபாவுக்கு அந்த வீடு வளவை வாங்கினார். பாமாவின் தாயாகிய பத்மலோசினிக்கு பெற்றோர் சீதனமாகக் கொடுத்த வீடு, வளவு அளவெட்டியில் இருக்கிறது. அதில் வீடற்ற ஒரு ஏழைக் குடும்பம் இருக்கிறது. அந்த வீடு பாமாவின் தங்கை

சீதாவுக்குத்தான். தற்போது அந்த வீட்டில் வசிப்பவர்கள் தமது பூர்வீக நிலத்தில் அரசாங்க வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடொன்றினை அமைத்துக்கொண்டனர்.

அவர்களும் நன்றியுள்ளவர்கள். குடியிருந்த வளவினை நன்கு பராமரித்து வாழை, எலுமிச்சை, தோடை, கறி முருங்கை, பப்பாசி, மரவள்ளி, கத்தரி, மிளகாய்ச் செடி போன்றவற்றை நாட்டிப் பராமரித்துத் தாமும் பயன்பெற்று வந்தனர். இந்த யுத்தம் நாட்டில் ஏற்பட்ட காலத்தில் இந்த வீடு அவர்களுக்குப் பெரிய பாதுகாப்பான அரண்மனையாக உதவியது. கிணறு, மலசலகூடம் யாவும் வளவில் இருந்தன. தற்போது குடியிருப்பவர்கள் தங்களுக்கு அரசாங்கம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டிக்கொடுக்கும் வீட்டிற்குக் குடிபெயர ஆயத்தமாகிவிட்டார்கள்.

அவர்கள் தங்கள் இருப்பிடத்திற்குப் போன பின்னர் அவர்கள் இவ்வளவு காலமும் குடியிருந்த பத்மலோசினியின் சீதன வீடான அளவெட்டி வீடு திருத்தப்பட்டு மின் இணைப்பு, உள் கூரை சீற் அடித்தல், நிலத்திற்கு மாபிள் முதலிய அவசர தேவைகளைச் செய்ய வேண்டிய காலத்தின் கட்டாயம் இருந்தது. அதையும் தானே திருத்துவித்துத் தருகிறேனென ஞானகுமார் கேட்டார். அதற்கு இராதாகிருஷ்ணன் ஒப்பவில்லை. அடுத்த வருடம் தான் ஓய்வு பெறும்போது கிடைக்கும் 'கொமிரேட் பென்ஷன்', EPF இவற்றின் உதவியுடன் திருத்துவிக்கலாம் என்று மறுத்துவிட்டார்.

"இல்லை சேர். நான் முதலில் திருத்துவிக்கிறேன். காலம் போகப் போக சீமெந்து, கம்பி, மணல் எல்லாம் விலை கூடுவதோடு மின் இணைப்பு, மோட்டர், A.C பெட்டிகள் யாவும் நாளுக்கு நாள் விலை அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. முதலில் என்னிடமுள்ள காசில் வேலைகள் நடைபெறட்டும். கணக்குப் பார்த்து உங்கள் 'கொமிரேட் பென்ஷன்' வந்தபின் திருப்பித் தாருங்கள்" என்று கூறிவிட்டார்.

'கரும்பு இனியதென்று வேரோடு பிடுங்கித் தின்னக் கூடாதல்லவா?' இருந்தும் ஞானகுமார் தனது மூத்த அண்ணா தேவகுமாருடன் கலந்தாலோசித்து அவரது தொழிலாளித் தோழர்களின் அனுசரணை யுடன் அளவெட்டி வீடு முழுக் கோப்பிசமும் கீழே இறக்கப்பட்டு கறையான்- முல்லையன் அரித்த பனைமரம், சலாகைகள் மாற்றப்பட்டு சொலிக்கனம் என்ற மருந்து (கிருமி நாசினி) பூசப்பட்டு, அடி அத்திவாரச் சுவரோரங்களுக்கு DPC தாரும் பூசப்பட்டது. சில

பனைமரங்கள், சலாகைகள், ஓடுகள் வாங்க வேண்டியதாயிற்று. கூரைக்கு உள்ளே சீலிங் சீற் அடிக்கப்பட்டு மின் இணைப்புகள் செய்யப்பட்டன. நிலத்துக்கும் மாபிள் பதிக்கப்பட்டது. கிணற்றுக்கு மோட்டர் போடப்பட்டு வாட்டர்பம் கட்டப்பட்டு சமையலறை, சாப்பாட்டறை, குளியலறை ஆகியவற்றிற்கு 'பைப்' வசதிகள் செய்யப்பட்டன.

தனக்கான கல்வியை ஊக்கத்துடன் கற்பித்துத் தான் அமெரிக்கா வரை சென்று படித்து- இன்று இந்த உயர்ந்த நிலையில் வாழ்வதற்கு உந்துசக்தியாக இருந்த தனது குருவாகிய இராதாகிருஷ்ணனை மனதார- உளமார ஞானகுமார் வாழ்த்திக்கொண்டேயிருப்பார்.

இராதாகிருஷ்ணனோ, 'எல்லா மாணவர்களுக்கும் நான் ஒரே மாதிரியாகத் தானே கற்பித்தேன். ஞானகுமார் மாத்திரம் காந்தம் இரும்பைக் கவர்வது போலப் பாடத்தை மிக உன்னிப்பாகவும் ஆழமாகவும் அவதானித்ததோடு, சந்தேகங்களையும் உடனுக்குடன் கேட்டுத் தெரிந்துகொள்வார். அவரை ஒரு அன்னப்பட்சி என்று தான் சொல்ல வேண்டும். பாலுடன் நீரைக் கலந்து வைத்தால் அன்னமானது நீரை நீக்கிப் பாலை அருந்துமாமே' என்று தனக்குள் வியந்துகொள்வார்.

அளவெட்டிப் பகுதி நிலம் சிவப்பு நிறமானது. கிணற்று நீரும் கல்சியம் குறைவானது. அப்பகுதியில் வாழைத் தோட்டத்திற்குள்ளே இராசவள்ளி, வத்தாளங்கிழங்கு, சட்டிக்கறணை, முள்ளங்கி, கரட் ஆகியவை விளையக்கூடிய சத்துள்ள மண்தான். "பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்" என்பது ஆன்றோர் வாக்கு. வீடு திருத்திய கையோடு சகல மரங்களுக்கும் நீரை இறைத்து வீட்டிற்கு முன்பாக வட்ட வடிவில் பூமரங்களையும் நாட்டி ஒரு துளசிமாடத்தையும் கட்டி, ஒரு புனிதமான- பார்த்தால் கால் கழுவித்தான் உள்ளே போக முடியும் என்ற ஆச்சார நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

விரிவுரையாளர் இராதாகிருஷ்ணனுக்கும் மனைவி, மக்களுக்கும் மிகுந்த மனச் சந்தோஷம். மூத்த மகள் பாமாவின் திருமணம் முடிந்தபின் தாங்களும் தங்கள் அளவெட்டி வீட்டிற்குச் சென்று வசிப்பது என்று தீர்மானித்துக்கொண்டனர். "இவ்வளவு காலமும் சோம்பேறிகளாக வாழ்ந்து விட்டோம். இனிமேல் தோட்டங்கள் செய்து வாழ்க்கையில் ஒரு திருப்பத்தைக் காணப்போகிறோம்" என்ற ஆவலுடன் இருந்தனர். தாங்கள் இன்றுவரை வாழ்ந்த வாடகை வீட்டுக்கும் பூமரங்கள் நாட்டி வீட்டை வாடகைக்குத்

தந்தவர்களின் மனம் மகிழ வாழை, செவ்விளநீர் போன்றவற்றை உற்பத்தி செய்தனர். அந்த வளவில் ஒரு புளியமரம் நிற்கிறது. அதில் புளியம்பழம் உதிர்ப்பித்துத் தங்களுக்குத் தேவையான ஒரு முட்டி புளியை எடுத்துக்கொண்டு மிகுதியை ஞானகுமார் வீட்டிற்கு அனுப்பிவிடுவார்கள். வீட்டுக்காரர் நாட்டில் இல்லை. அவர்கள் வெளிநாட்டில் வசிக்கிறார்கள். அவர்கள் ஊரில் இருந்தால் அவர்களுக்குத்தான் கொடுத்திருப்பார்கள். அவர்களும் தொலைபேசியில் பேசும்போது, தங்களுடைய கொக்குவில் வீட்டை நல்ல விலை வந்தால்- யாரும் விரும்பி வந்து கேட்டால் விலைக்குக் கொடுக்கும்படி கூறியிருந்தார்கள். கடவுளே என்று எங்கள் ஒவ்வொருவருக்கும் குடியிருக்க வீடு இருக்கிறது. எத்தனையோ சனங்கள் குடியிருக்க வீடில்லாமல் கஷ்டப்படும்போது நாம் மாத்திரம் இரண்டாம் வீட்டிற்கு ஆசைப்படக்கூடாது என்று குமார் சகோதரர்கள் கூறிவிட்டனர்.

வேலழகன், அப்படியென்றால் ரியூட்டறியைக் கொக்குவிலுக்கு மாற்றினால் என்ன என்றொரு யோசனையும் இருப்பதாகக் கூறினார். ஏனெனில், இவ்வளவு காலமும் பிரேமாவுக்குக் கட்டிய சீதன வீட்டின் கார் கராஜில்தான் ரியூட்டறி நடந்தது. இனி பிரேமாவுக்கு குழந்தைகள் பிறந்துவிட்டால் மாணவர்களின் சத்தம் குழந்தைக்கு இடைஞ்சலாக இருக்குமே என்று யோசித்தனர். கொக்குவில் வீடு றோட்டோரமாகப் போக்குவரத்துக்கு வசதியாக இருந்தாலும், அந்த வீட்டை முற்று முழுதாகத் திருத்திய பின்னர்தான் ரியூட்டறியாக மாற்றலாம். ஏனெனில், ஓடுகள் உடைந்து மழைக்காலத்தில் சில இடங்களில் மழை ஒழுக்கும் இருக்கிறது.

“இப்போது இருக்கும் நிலையில் ஒருவரும் அந்த வீட்டை வாங்க முன்வரமாட்டார்கள். திருத்தி, வெள்ளையடித்து, மேற்கோப்பிசத்தைக் கீழே இறக்கி, பனைமரச் சலாகை, ஓடுகள் மாற்றி, நிலத்துக்கும் காறை போட்டு, மின் இணைப்பு, வாட்டர் ராங், பைப் வசதிகள், குளியலறை, கழிவறை வசதிகள் செய்தால்தான் யாரும் வாங்க முன்வருவார்கள்” என்று லண்டனில் வசிக்கும் வீட்டு உரிமைக்காரருக்குத் தெரிவித்தனர்.

தங்களுடைய வாடகைப் பணம் தமது வங்கிக் கணக்கில் யாழ்ப்பாணம் இலங்கை வங்கியில் இருப்பதால் திருத்தத்திற்குரிய செலவுகளை விபரமாகக் கூறினால், அத்தொகையைத் தங்களால் தரமுடியும் என்று கூறினார்கள்.

அந்த வீட்டை விட்டு பத்மலோசனி குடும்பம் தமது தள பாடங்களுடன் அளவெட்டிக்குப் போக, இந்த வீடு திருத்துவதற் காகக் கழற்றப்பட்டது. இராதாகிருஷ்ணனிடம் படிக்கும் மாணவர்கள் வந்து பார்த்து, "இந்த ஓட்டை வீட்டில்தான் எங்கள் கோமகன் இவ்வளவு காலமாக வாழ்ந்தாரோ?" என்று தங்கள் ஆசானின் சகிப்புத் தன்மையை எண்ணி வியந்தனர்.

திருத்த வேலைகளைப் பொறுப்பெடுத்த வேலழகன், "எனது சாதகத்தில் 5 வீடுகளைத் திருத்தியமைக்க வேண்டிய பொறுப்பு இருக்காம். முதலாவது நான் பிறந்த வீடு. இரண்டாவது தேவகுமார் அண்ணையின் வீடு. மூன்றாவது அளவெட்டி வீடு. நான்காவது இந்தக் கொக்குவில் வீடு. அப்ப இன்னும் ஒரு வீடு திருத்துகிற பாக்கிக் கடமையை எதிர்நோக்குகிறேன்" என்று சந்தோஷமாகக் கூறினார்.

## 15

ஒரு குடியிருக்கும் இல்லம் என்பது மகாலட்சுமி தானாக விரும்பி அதன் சுத்தத்தில்- அமைப்பில்- அழகில் வந்து குடி இருக்க வேண்டும். இதனைக் குதம்பைச் சித்தர் பாடிய மனையடி சாத்திரம் என்ற புத்தகத்தில் வேலழகன் படித்து இருக்கிறார்.

இலக்குமியுடன் சரஸ்வதியும் சேர்ந்து குடியிருக்க ஆசைப்படுமளவிற்கு முன்னர் திருத்திய வீடுகளின் அனுபவ முதிர்ச்சி அறிவும் ஒன்று சேர வேலை ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் கணக்குப் போட்டுப் பார்த்த 'எஸ்ரிமேற்றுக்கு'- மதிப்பிடலுக்கு அதிகமாகப் பொருட்களின் விலையும் மனிதக் கூலியும் அதிகரித்தமையே காரணம். இதனைத் தொலைபேசி மூலம் வீட்டு உரிமைக்காரர் கார்த்திகேயன் மாஸ்டரின் குடும்பத்துக்கு வேலழகன் தெரிவித்தார்.

"நான் உங்களுக்கு அறிவித்த கணக்கை விட மேலதிகமாக 5 இலட்சம் ரூபா தேவைப்படுகிறது. இது கூடுதல் தொகை என நினைக்கிறீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர், "உங்கள் நேர்மை, உண்மை, விசுவாசம் யாவும் நாங்கள் அறிந்ததே! உங்களை விட்டிட்டு இன்னொருவரைத் தேடிப் போகிற அளவுக்கு நாங்கள் ஒரு நன்றி

*கெட்டவர்கள் அல்ல. இராதாகிருஷ்ணன் சேர் உரிய காலத்தில் வந்து குடியிருக்காது விட்டிருந்தால் ஊரிலுள்ள திருடர்கள் நிலை, கதவு, யன்னல் யாவும் உடைத்து எடுத்திருப்பார்கள். ஏதோ அவர் நாங்களும் வெளிநாடு புறப்பட வந்து வசித்தபடியால் அவர் மாதா மாதம் காசும் வாடகை பெயரால் தந்தது மட்டுமன்றி வீட்டுக்குக் காவல் காத்த பெரிய ஒரு பணியை அல்லவோ செய்திருக்கிறார்!*

*ஆகவே, வேலழகன் தம்பியின் விருப்பப்படி பூரணமாகத் திருத்திய பின் படம் பிடித்து அனுப்பினால் போதும். செலவழித்த அவ்வளவு பணமும் அனுப்புகிறேன். அத்துடன், இந்த வீடு ஒரு கல்வி நிலையமாக மாற இருப்பதனால் எங்களது அன்பளிப்பாக அதனுள் இருக்கும் நான்கு கட்டில்களில் மூன்றையும் மூன்று மேசைகளில் இரண்டையும் சாப்பாட்டு மேசை ஆறு கதிரைகளையும் சமையலறைத் தளபாடங்களில் 1 குடம், 2 கிடாரம் இவற்றை இராதாகிருஷ்ணன் மாஸ்டரிடம் கொடுங்கள். மிகுதி யாவும் ரியூட்டறிக்கு எமது அன்பளிப்பாக இருக்கட்டும். எமது பெண்டூலத்துடன் கூடிய சுவர்க்கடிகாரம், 2 அலுமாரிகள், 6 வாங்குகள், நிலைக்கண்ணாடி யாவும் திருமணமாகப்போகும் பாமாவுக்கு- இவ்வளவு காலமும் எமது வீட்டில் வளர்ந்த நினைவுக்கு இந்தக் கார்த்திகேயன் மாஸ்டர் குடும்பத்தின் அன்பளிப்பு என்று கொடுங்கள்" என்று கூறிவிட்டார்.*

*தளபாடங்களுக்குக் கடதாசி அரம் மூலம் தேய்க்கப்பட்டு, வானிஷ் பூசப்பட்டு அளவெட்டி வீட்டிற்கு லொறி மூலம் அவை அனுப்பிவைக்கப்பட்டன.*

*ஊரிலுள்ளவர்கள் பேசிக்கொண்டார்களாம்- இவர் இராதாகிருஷ்ணன் ஏதோ ஊரார் சொத்தை ஆளப்பிறந்த அதிஷ்டசாலி போலக் கிடக்குது. 5 சதம் சீதனம் கேட்காமல் அமெரிக்காவில் படித்த மாப்பிள்ளை வலிய வருகிறார். தனக்குத் தானே புது வீடும் வாங்கிப் போட்டார். இப்ப என்னடா என்றால், பொண்டாட்டியின் சீதனப் பழைய வீட்டைப் புது வீடாகத் திருத்திக் கொடுக்கிற வேலையையும் அந்த நாகலிங்கம் குடும்பமே பொறுப்பேற்றுச் செய்யுதுகள். அது மாத்திரமோ- அந்த லண்டன்காரன் வீட்டுத் தளபாடங்களைக் கூட அன்பளிப்பாகக் கொடுக்கிறானாம். அவன் இராதா பிறந்த நிலத்திலே நாங்கள் உருண்டாலும் இப்படி ஒரு குபேர வாழ்வு கிட்டுமா? என்று அங்கலாய்த்தார்கள். இராதாகிருஷ்ணனின் பயன் கருதாத சேவை இப்படியான நிறைவுகளை அள்ளிக் கொடுக்கிறது.*

கார்த்திகேயன் மாஸ்டர் வீட்டின் சமையலறையின் பக்கத்து அறையில் அவர்கள் பாவித்த அம்மி, குளவி, ஆட்டுக்கல், திரிகை, உரல், உலக்கை யாவும் பத்திரமாக- மேடை ஒன்று கட்டி அம்மி குளவி வைக்கப்பட்டது. ஆட்டுக்கல், திரிகை, கல்லுரல், உலக்கைகள் யாவும் பத்திரமாகப் பேணி வைக்கப்பட்டன. யாவும் அவருக்குப் படம் பிடித்து அனுப்பப்பட்டன. தான் சிறுவயதில் வாசித்த 'வாஷிங்டன் கல்யாணம்' என்ற நாவலில் அப்பளம் செய்ய அமெரிக்காவுக்கு அம்மிக் குளவி கொண்டு போன சம்பவத்தை வாசித்த நினைவு வந்து மனைவிக்குச் சொல்லி மகிழ்ந்தார்.

குமார் சகோதரர்கள் தங்கள் ரியூட்டறியில் ஆடிப்பிறப்பு நிகழ்வை மிகச் சிறப்பாக மாணவர்களுடன் கொண்டாடினர். பிள்ளைகள் அனைவரும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் ஆடிப்பிறப்புப் பாடலை ஆனந்தமாகப் பாடி மகிழ்ந்தனர். பின்னர் கார்த்திகேயன் மாஸ்டரின் கொக்குவில் வீட்டிற்கு ஆவணி மாதம் பால் காய்ச்சி ரியூட்டறியை அங்கு நகர்த்தினர்.

*ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை*
*ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!*
*ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை*
*ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!*
*கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்*
*கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!*

*பச்சை அரிசி இடித்துத் தெள்ளி*
*பாசிப் பயறை வறுத்துக் குற்றி*
*மாவைப் பதமாய் வறுத்தெடுத்து*
*தோண்டியில் நீர்விட்டு மாவை அதில் கொட்டி*
*சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு....*

*குற்றிய பருப்பை அவிய விட்டு*
*தேங்காய் அடித்துத் துருவிக் கொண்டு*
*வேலூரிற் சர்க்கரையும் கலந்து...*
*வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி*
*வெல்லக் கலவையை உள்ளே இட்டு*
*பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பளே*
*பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே...*
*மணக்க மணக்க வாய் ஊறிடுமே...*

*கூழுக்கு பானையில் நீர்விட்டு அடுப்பிலே*
*குற்றிய பயறின் அடிப் பயறை அவியவிட்டு*
*மாவுடன் தேங்காய்ப் பால் பனங்கட்டி*
*கரைத்த கரைசலை உள்ளே ஊற்றி*
*தேங்காய்ச் சொட்டும் சிறு சிறு துண்டுகள்*
*பாங்காய்த் துழாவி இறக்குவாளே!*

*வண்ணப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே*
*வந்து மடித்து எடுத்துக்கொண்டு*
*அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க*
*ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே....*
*பல்லுக் கொழுக்கட்டை கடித்துக்கொண்டே*
*மாவின் பழத்தை அரிந்து தின்போம்- நல்ல*
*வாழைப் பழத்தை உரித்துத் தின்போம்!*
*... ... ...*

*அம்மா நான் விளையாடப் போறேன்- கையில்*
*அன்புடன் பட்சணம் தந்தனுப் பென்னை*
*சும்மா நான் உட்கார மாட்டேன்- நல்ல*
*தோழர்கள் அழைக்கின்ற நாழிகை ஆச்சு!*

*வட்டக் குளத்துக்குப் போவோம்- களி*
*மண்ணை உருட்டித் திரட்டி விடுவோம்!*
*சட்டிகள், பொம்மை செய்வோம்- பின்பு*
*சாதம் சமைத்தொன்றாய்ச் சாப்பிட்டலம்பி*
*பாட்டுக் கச்சேரிகள் செய்வோம்- நான்*
*பாடுவேன் மத்தளம் போடுவேன்- சிட்டு*
*கேட்டுச் சபாஷ் எனச் சொல்வார்- பின்பு*
*கிண்கிணி கட்டி நடனங்கள் செய்வோம்!*
*வேப்ப மரத்தடி மண்ணில் சிறு வீடுகள்*
*கட்டி விருந்துகள் செய்வோம்!*
*மண் பொம்மைக்குத் திருமணக் காட்சி*
*கண், மூக்கு எல்லாம் கறுத்த மையிலே*
*வண்ண மயமாகத் தீட்டி- அவற்றுக்கு*
*மணவாளக் கோலங்கள் செய்தே மகிழ்வோம்*
*தீப்பெட்டி உள்ளே உள்ள பெட்டிகள்*
*இரண்டே இரண்டு ஊர்வலம் போகின்ற*

*வாகனமாக வடிவாக சரித்து எடுப்போம்!*
*மேள, தாளங்கள், பீப்பீ எல்லாம் நாமே*
*ஊர்வலம் நடத்திய அழகினைக் கண்டு*
*அக்கம் பக்கமுள்ள அன்பான சிறுவர்கள்*
*எம்முடன் சேர எமக்குப் பெருமையும் ஆச்சு...*
*தம்முடைய வீட்டிற்கு எம்மையும் அழைப்பார்...*

## 16

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாகத் தமிழர்கள் புலம்பெயர்ந்து பற்பல நாடுகளில் வசித்தாலும், தைப்பொங்கலைத் தரை மெழுகி, கோலம் போட்டு, புதுப்பானை சூரியப் பொங்கல் முறைகள் அருகிவிட்டாலும் தீபாவளிப் புத்தாடையும் ஆடிக் கூழையும் மறக்காமல் செய்கிறார்கள். வேலையில் இருந்து திரும்பி வந்து மாலையிலாவது கூழ் காய்ச்சி அயலட்டை, நண்பர்களுக்கும் கொடுத்துப் பகிர்ந்துண்கின்றனர். அவர்கள் வாழும் நாடுகளின் கடைகளில் அரிசி மா, பயிற்றம் பருப்பு, சர்க்கரை, பனங்கட்டி, தேங்காய் யாவும் வாங்க முடியும். சோமசுந்தரப் புலவர் பாடி வைக்காவிட்டால் ஆடிப்பிறப்பு என்ற ஒரு அற்புத நாள் தமிழர் மனதை விட்டு அகன்றுவிடும். இது யாழ்ப்பாணத் தமிழருக்கு உரித்தான ஒரு சொத்துத் திருநாளாகும்.

இந்தியாவில் ஆடிப்பெருக்கு என்றும் ஆடியில் தாலி பிரித்துக் கோர்ப்பது என்றும் விழாக்கள் உண்டு. ஆடிப்பிறப்பென்ற சிறப்புக்கள் இல்லையெனலாம். உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் இந்திய அகதி முகாம்களில் வசிக்கும் யாழ்ப்பாணத் தமிழர்கள் இந்த ஆடிப்பிறப்பைக் கொண்டாடுவதை அங்குள்ளவர்கள் பார்த்து அதிசயப்படுகிறார்களாம்.

எங்கள் நாகலிங்கம் குடும்பத்து அங்கத்தவர்கள், வயோதிபர், குழந்தைகள் உட்பட இந்த ஆடிப்பிறப்பை அழகுறக் கொழுக்கட்டை - கூழ் சகிதம் கொண்டாடுவர். கண்டியிலும் கொழும்பிலும் உள்ளவர்களுக்கு அந்தப் பாக்கியம் கிடையாது!

பத்மலோசனியின் அளவெட்டி வீடும் நன்கு திருத்திய கையோடு கார்த்திகேயன் மாஸ்டரின் கொக்குவில் வீடும் சிறந்த முறையில்

திருத்தப்பட்டு விட்டது. கார்த்திகேயன் மாஸ்டர் தனது வீட்டுத் தளபாடங்கள் சிலவற்றை ரியூட்டறிக்கும் சிலவற்றை இராதாகிருஷ்ணனின் இரண்டாவது மகள் சீதாவுக்கும் தாராள மனத்துடன் வழங்கியிருந்தார். அவர்கள் அந்தப் பொருட்களின் ஒருபுறத்தில், 'இது கார்த்திகேயன் மாஸ்டரின் அன்பளிப்பு' என்ற வாசகத்தை எழுதி ஒட்டியிருந்தனர். 'நன்றி மறப்பது நன்றல்ல, நன்றல்லதை அன்றே மறப்பது நன்று' இது ஆன்றோரின் அருள்மொழியாகும்.

கொக்குவில் ரியூட்டறியானது முன்னர்- அதவாது, சுழிபுரத்து உள் ஒழுங்கையில் அமைந்திருந்தது. இன்று பிரதான வீதியில் பெரிய பெயர்ப் பலகையுடன் அதாவது, 'நாகா ஞாபகார்த்த கணினிப் பயிற்சி நிலையம்' என்ற பெயருடன் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் பெயர்ப்பலகை எழுதப்பட்டுப் பதிவு இலக்கம் யாவும் பளிச்செனத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் முன்பு ஆனைப்பந்தியில்தான் ஒரு ரியூடட்றி இயங்கி வந்தது. அதைப்போல இந்த நிலையமும் காலை 8.00- இரவு 9.00 மணிவரை 3 பிரிவாக கணினி மாத்திரமல்ல தனியார் மாணவர்களின் O/L, A/L, G.A.Q வகுப்புக்களும் ஒரு நவராத்திரி நாளில் தொடங்கப்பட்டுச் சிறப்புற நடந்து வருகின்றன. யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட சகல மாணவ மாணவிகளும் கேள்விப்பட்டுக் கேள்விப்பட்டுப் பெருந்தொகை மாணவர்கள் சேர்ந்தனர். அதனால் கேற் அயலில் ஒரு 'செக்குறிட்டிக்காட்'- பாதுகாவலர் அமர்த்தப்பட்டிருந்தார். அவரின் அறையிலிருந்து உள் வீடுவரை தொடர்பு கொள்ள தொலைபேசி வசதியும் செய்யப்பட்டிருந்தது.

ஊர் மக்கள் கதைத்துக்கொண்டனர்:- "இந்த நாகலிங்கண்ணையின்ரை பொடியள் மண்ணைத் தொட்டாலும் அது பொன்னாக மாறி விடுகிறது" என்று. அவர்களுக்குத் தெரியாது நாகலிங்கத்தாரின் தகப்பன் ஆசைப்பிள்ளையும் தாய் செல்லமுத்துவும் 'பசித்தோர் முகம் பார்த்து உணவளித்தவர்கள்' என்பது. முஸ்லீம் வீட்டில் முடித்தால் என்ன? சிங்கள வீட்டிலே சீராடினால் என்ன? ஒரு தாய் பிள்ளைகள் போல ஒருவிதமான வேற்றுப் பிரிவின்றி எப்படி இவர்களால் வாழ முடிகிறது? என்று விடுப்புக் கதைப்போர் மனதில் எந்த நாளும் ஒரு விடை கிடையாது கேள்வி இருந்துகொண்டே இருக்கும்.

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் புரிந்துணர்வும் கல்வியறிவும்

பொருளாதாரச் செழுமையும் இருக்கிற இடத்தில் பழி வாங்கல், பொறாமை, வயிற்றெரிச்சல் ஆகிய தீய குணங்கள் கிட்டவும் வராது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஒரு நாட்டில் பிறந்தவர்கள் எத்தனை இனமாக இருந்தாலும், எத்தனை மொழிகளால், மதங்களால் வேறுபட்டிருந்தாலும் நாமெல்லோரும் ஒரு தாயின் மக்கள் என்ற நேச மனப்பான்மை இருத்தல் அவசியம். எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற ஐக்கியமும் பிணைப்பும் அவர்களின் மன ஆழத்தில் இருத்தல் அவசியம். அப்படி வாழ்ந்தால்தான் இன்னொரு நாடு, நம் நாட்டின் மீது யுத்தம் தொடுத்தாலோ, படையெடுத்துப் போர் புரிய வந்தாலோ எமது ஐக்கியத்தால், பலத்தால் எதிரியை வென்று நம் தாய் நாட்டைக் காக்க முடியும்!

நாகலிங்கத்தார் குடும்பத்தின் முற்போக்குக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் சிலர்- பல்கலைக்கழக மாணவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்டனர். ஒற்றுமை குன்றாமல் வாழ்ந்து காட்டுகின்றனர். அவர்களுள் ஒருவர் மயூரன் என்ற பெயருடைய ஒரு பொறியியலாளர். அவர் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். முற்போக்குக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அதன்படி நடப்பவர். அவர் மீது பொறாமை கொண்ட ஒருசிலர் சில அபாண்டமான கதையை சிருஷ்டித்து அவரின் மனதை வருத்தினார்கள். இப்படியான வதந்தி பரப்பும் சிலரும் இந்த நாட்டில் இருக்கிறார்கள் தானே!

*நெஞ்சு பொறுக்குதில்லையே- இந்த*
*நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்!*
*வஞ்சனைப் பேய்கள் என்பார்*
*அந்த மரத்தில் என்பார்*
*இந்தக் குளத்தில் என்பார்*
*துஞ்சுது முகட்டில் என்பார்*
*துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்- அந்தோ*
*நெஞ்சு பொறுக்குதில்லையே..."*

என்ற பாரதியாரின் பாடலை நினைந்து நமது மனதைத் திடப்படுத்துவோமாக!

கடைக்குட்டி ஞானகுமாரின் திருமணம் ஒரு தைப்பூசத் தினத்தன்று நடைபெற்றது. அமெரிக்காவிலிருந்து திரு. ஜார்ஜ் தாம்சன், என்ற வெள்ளைக்காரப் பேராசிரியர் விசேட விருந்தினராக

அழைக்கப்பட்டிருந்தார். அவருடன் பாரியார் கேத்ரின் (*Madam Katherine*) வந்திருந்தார். பேராசிரியரது வருகை பற்றியோ அல்லது அவர் வகிக்கும் பதவி பற்றியோ யாருக்கும் எந்த விபரமும் தெரியப்படுத்தவில்லை.

அவர் தான் ஒருமுறையாவது ஸ்ரீலங்கா நாட்டைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் இருந்தவராம். உலகில் சிறந்த ருசியான தேயிலையை உற்பத்தி செய்கின்ற நாடு. இரத்தினக் கற்களை உற்பத்தி செய்யும் இரத்தினபுரி என்ற ஆற்றுவளப் பிரதேசம். கறுவா, ஏலம், கராம்பு போன்ற வாசனைத் திரவியங்களை விளைவிக்கின்ற நாடு என்று கேள்விப்பட்டிருக்கிறாராம். தனது மாணவனின் திருமண அழைப்பின் சாட்டில் வந்து இந்த இலங்கை மணித்திருநாட்டின் இயற்கை வளங்களைச் சுற்றிப் பார்க்க ஆசைப்பட்டவராம்.

இந்தியாவின் ஊட்டி, கொடைக்கானல் போன்ற குளிர்ப் பிரதேசங் களைப் பார்க்க நுவரெலியா போனால் போதும். ஆபிரிக்காவின் சகாரா போன்ற வரண்ட பிரதேசம் பார்க்கில் மன்னார் போனால் போதும். பல நாடுகளின் சீதோஷண நிலைகளை இந்த ஒரு நாட்டிலேயே பார்க்க முடியும் என்று பூகோள வாயிலாகப் படித்திருக்கிறார். அவர் அங்கிருந்து புறப்படும் போது அதிவிலை கூடிய இரண்டு மோதிரங்களை பிளாட்டினம் (வெள்ளைத் தங்கம்) மணமக்களுக்கு வாங்கி வந்தார். தனது மோதிர விரல் அளவுக்கு மணமகனுக்கும் சின்ன விரல் அளவுக்கு மணமகளுக்கும் வாங்கி வந்தார். ஞானகுமாரின் மூத்த அண்ணனுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள் என்று ஞானகுமார் மூலம் அறிந்திருக்கிறார். ‘பாபிடோல்’ என்ற பொம்மைகளையும் ‘கீ’ கொடுத்தால் மேலே எழுந்து சிறகு விரித்து சிறிது தூரம் பறந்து பின் கீழே இறங்கி சற்று ஓடி நிற்கும் ஒரு விளையாட்டு விமானத்தையும் வாங்கி வந்தார்.

திரு. ஜார்ஜ் தாம்சன் அவர்களது விருப்பத்திற்கு அமைய எந்தவிதமான ஆடம்பர வரவேற்பும் கொடுக்கப்படவில்லை. இருந்தும், இலங்கை யிலுள்ள அமெரிக்க உயர்ஸ்தானிகரின் காரியாலயத்திலிருந்து இரண்டு உயர் அதிகாரிகள் மாற்று உடையில் விமான நிலையத்திற்கு வந்திருந்தார்கள். தங்கள் நாட்டுப் பிரஜை- அதுவும் அணுமின் ஆராய்ச்சியாளர் ஒருவரின் உயிர், உடைமைகள் யாவற்றிற்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது அவர்களது கடமையல்லவா!

ஞானகுமார் கொழும்பு விமானநிலையம் சென்று வரவேற்று-

பலாலி விமானநிலையம் வரை விமானம் மூலம் அழைத்து வந்து, மாமனார் திரு. இராதாகிருஷ்ணன் வீட்டில் தங்க வைத்திருந்தார். அவர் வெள்ளைக்காரராக இருந்தபோதிலும், மாமிசம் உண்ணாத சைவ போசனகாரராக இருந்ததில் அவரின் உணவைத் தயாரிப்பது பத்மலோசனிக்கும் மகள்மாருக்கும் இலேசாக இருந்தது. கை விரல்களைப் பாவியாது கரண்டி, முள்ளுக்கரண்டி ஆகிய உபகரணங்கள் மூலம் சாப்பிட்டுப் பழகிய அவர், முருங்கைக் காயை எப்படிச் சாப்பிடுவது என்று திரு. இராதாகிருஷ்ணனிடம் கேட்டாராம். அதற்கு அவர், ஒரு முனையை முள்ளுக்கரண்டியால் அமர்த்தி வைத்துக்கொண்டு, உட்பகுதியைக் கரண்டியால் வழித்துச் சாப்பிடலாம் என்று தானே செய்து காட்டினார்.

பெயரளவில் ஆடம்பரமற்ற திருமணம் என்று கூறினாலும் பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரிகள் வரை மாணவ மாணவிகள் பெருமளவில் வருகை தந்திருந்தனர். பிற்பகல் (ரிஷப்ஷன்) வரவேற்பு நிகழ்ச்சிக்கு லீலா நாராயணன் என்ற சிறுமியின் பரதநாட்டியமும் சகோதரர்களான சின்னப்பொன் - பெரியபொன் அவர்களின் வள்ளி திருமணம் என்ற சரித்திர நாடகம் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியாக நடத்திக் காண்பிக்கப்பட்டது. வில்லுப் பாட்டு என்று ஒரு நிகழ்ச்சியை இதுவரை பார்த்தறியாத திரு. ஜார்ஜ் தாம்சன் அவர்கள் தமது வீடியோ கமரா மூலம் திருமண நிகழ்ச்சி, பரத நாட்டியம், வில்லுப்பாட்டு இவற்றைப் படமெடுத்துக்கொண்டார். அடுத்தநாள் காலை பலாலி விமானநிலையம் சென்று அங்கிருந்து கொழும்பு கட்டுநாயக்க விமானநிலையம் சென்று, அன்றிரவே பாரியாருடன் அமெரிக்கா பயணமானார்.

அவர் வரும்போது அழைத்து வந்தது ஞானகுமாராக இருந்தாலும், பயணம் அனுப்ப திரு. இராதாகிருஷ்ணனே சென்றிருந்தார். அவருக்கு இலங்கைத் தேயிலை, வாசனைத் திரவியங்களான கறுவா, கராம்பு, ஏலக்காய் இவற்றுடன் ஒரு நீலநிற இரத்தினக்கல்லும் ஞானகுமார் பரிசாகக் கொடுத்திருந்தார். இருந்தும், அவர் பார்க்க விரும்பிய நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய இடங்களைப் பார்க்கப்போக அனுமதிக்கவில்லை. ஏனென்றால், அவரது உயிர் அமெரிக்க நாட்டுச் சொத்து. அதுவே இந்த அவசர அவசரமான புறப்பாடு ஏற்பாடு!

தனது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பேராசிரியர் திரு. ஜார்ஜ் தாம்சன் அவர்கள் வந்திருந்து தனது திருமணத்தில் பங்குபற்றியது குறித்து ஞானகுமாருக்கு மாத்திரமல்ல, அன்னாரது குடும்பத்தினர்,

நண்பர்கள் யாவருக்கும் அளவிட முடியாத ஆனந்தமே! 'எந்தத் தமிழனின் திருமணத்துக்கு அமெரிக்க வெள்ளைக்காரன் வருகை தருவான்?'

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பது எவ்வளவு உண்மையான வாசகம்? என்று எல்லோருக்கும் ஒரே வியப்பு! ஞானகுமாரின் திருமணத்திற்கு வருகை புரிந்த சகலருக்கும் பேராசிரியர் திரு. ஜார்ஜ் தாம்சனுடன் நின்று புகைப்படம் எடுக்கிற அரிய வாய்ப்புக் கிட்டியது. இந்த நிகழ்ச்சியை அவர்கள் தங்கள் வாழ்வில் கிடைக்க முடியாத பெரிய பேறாகக் கருதினர். ஞானகுமாருக்கும் பாமாவுக்கும் எல்லாம் ஏதோ ஒரு கனவில் நடந்து முடிந்ததாக ஒரு அவசர அவசர நிகழ்வு போல இருந்தது.

திருமண வீட்டு வீடியோவைத் திரும்பத் திரும்பப் பார்ப்பது, அல்பம் வந்ததும் புரட்டிப் புரட்டிப் பார்ப்பதுமாக இருந்தனர். மணமக்கள் இருவரினது மோதிர விரல்களை அலங்கரித்த அந்தப் பெறுமதி மிக்க பிளாட்டினம் மோதிரங்கள் அளவெடுத்துச் செய்தது போலவே சரியான அளவாக இருந்தன.

## 17

இலக்குமி இருக்கும் வீட்டில் சரஸ்வதி இருக்க மாட்டாள் என்றொரு கர்ண பரம்பரைக் கதை சொல்வார்கள். ஒரு மனிதனின் வாழ்வில் கல்வி முதல் அவசியம், அறியாமை என்ற இருள் நீங்குவதற்கு. அதுபோலவே செல்வமும் அவசியம். உணவு, உடை, உறையுள் இவை யாவும் செல்வத்தினால் தானே பெற்றுக்கொள்ள முடியும்? செல்வம் வந்த போது செருக்குக் கொள்ளக்கூடாது. அதுபோல கல்வி வந்தபோது தலைக்கனம் ஆகாது. எக்காலத்திலும் ஒரே மாதிரியான தன்னடக்கமும் நன்றி மறவாமையும் இருந்தால், அவனே முழு மனிதனாக- மற்றையோரால் மதிக்கப்படுபவனாக வாழ முடியும்!

நாகலிங்கத்தாரின் பிள்ளைகள் யாவரும் கல்வியிலும் செல்வத்திலும் நிறைவாக இருந்தபோது, துளி கூடச் செருக்கின்றி- மற்றைய உயிர்களைத் தம்முயிர் போல மதித்து வாழ்ந்தனர்.

ஏழைக் குழந்தைகளை வரவழைத்து அவர்களுக்கு இலவசமாகப் பாடங்களைக் கற்பித்து, அவர்களுடைய பிறந்தநாளை அந்தக் கல்வி நிலையத்திலேயே கொண்டாடி, அப்போது அவர்களது பெற்றோரை வரவழைத்து, அவர்களையும் பங்குபெற வைத்து மகிழ்விப்பர். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற உலகியல் உண்மைக்கு எடுத்துக்காட்டாக அவர்கள் வாழ்ந்தனர்.

தேவகுமார் தனது ஓய்வு நேரத்தில் தனது புல்லாங்குழலை எடுத்துக்கொண்டு போய் கோவில் குளத்துப் படிக்கட்டில் உட்கார்ந்து இனிய கீதங்களை வாசிப்பார். அவர் சிறுவயதிலேயே தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் காரைநகர் வினாசித்தம்பி என்ற ஆசிரியர் இவர்களது வீட்டின் அயலிலுள்ள பள்ளியில் சங்கீத ஆசிரியராக இருந்தபோது அவரிடம் குழல் வாசிக்கக் கற்றுக்கொண்டார். அதுபோல பரமசாமி என்ற சங்கீத ஆசிரியர் இவர்களது ஊரிலுள்ள கல்லூரியில் சங்கீத ஆசிரியராக இருந்தபோது அவரிடம் வயலின் கற்றுக்கொண்டார். இந்த இரண்டு இசைக்கருவிகளுடன் ஹார் மோனியம், மிருதங்கம் ஆகிய இசைக் கருவிகளும் அவரது வீட்டில் இருந்தன. இருந்தும், புல்லாங்குழல் மாத்திரம் வேட்டியுள் செருகி- சேர்ட்டால் மறைத்துக்கொண்டு- தனது திறமைகளைக் காற்றிலே மிதக்கவிட்டு- அந்த ஓசை கேட்போரை மகிழ்வித்து வீடு திரும்பினால் அது அவருக்கு ஒரு ஆத்ம திருப்தி!

நிச்சயமாக மாதம் இருமுறை அமாவாசை, பௌர்ணமி, அதாவது தந்தை, தாய் நினைவு விரத நாட்களில் அவர் விரதம் அனுட்டிப்பார். அந்நாட்களில் கோவில் குளப் படிக்கட்டில் பிற்பகல் 4.30- 6.30 மணிவரை அவரது தனித்துவ ஆலாபனை சுற்றிவரக் குடியிருப்போர் காதுகளையும் வழிப்போக்கர்களின் காதுகளையும் இனிக்க வைக்கும். அண்ணனின் திறமை அண்ணனுடன் மறையக்கூடாது என்பதற்காக ஒருநாள் ஞானகுமார் தமையனுக்குப் பின்னாலேயே சென்று புல்லாங்குழல் இசையைப் பதிவு செய்து கொண்டார். அவர் வாசிக்கும் பாடல்களில், 'குலவும் யாழிசையே! கண்ணன் குழலிசை யாவாயோ? ஊதும் குழலிசை போலே உள்ளம் கொள்ளை போகுமோ?' என்ற பாடல் பழைய ஜாதகம் என்ற படத்தில் வந்ததாம். இதே பாடலை தேவகுமாரின் பள்ளிச் சிநேகிதியான கமலாம்பிகையும் நன்கு பாடுவார்.

மிருதங்கத்தை சடாட்சரம் என்ற மேதையிடமும் ஹார்மோனியத்தை முருகையா ஆசிரியரிடமும் சிறுவயதிலேயே கற்றுத் தேறியிருந்தார். அவரது தம்பிமார் ஐவருக்கும் தங்கை பிரேமாவுக்கும் தமையன் தேவகுமாரின் திறமையும் வித்துவத் திறனும் அவரது மகள்களாகிய பூரணி, ஆரணி இருவருக்குமாவது கைவர வேண்டுமென்பதே! தமையனின் சங்கீதக் கருவிகள் அத்தனையையும் அவர் லாவகமாகக் கையாளும் விதத்தை வீடியோ பதிவு செய்து 'படிக்காத மேதை' என்ற கசெற் பலவற்றில் சகோதரர்கள் பதிவு செய்து வைத்தனர்.

வேலழகன் தனது மூத்த மைத்துனரிடமிருந்து அவரது வாத்தியத் திறமைகளை ஒவ்வொருநாள் இரவும் அவரது இல்லத்திற்குச் சென்று பயிற்சி பெற ஆரம்பித்தார். தேவகுமாரின் மகள்மார் இருவரும் அருகிருந்து சங்கீத ஞானத்தைக் கிரகித்துக் கொண்டனர். முதலில் பழகியது ஹார்மோனியம். அதில் பாட்டு வாசிக்கக் கற்றுக்கொண்ட பின் மிருதங்கம். அதிலும் சுதி தவறாமல் அத்தனை விரல்களும் நர்த்தனம் புரியப் பழகுவது சிறிது கஷ்டமாகத் தெரிந்தாலும், நாளடைவில் அதுவும் சுலபமாகக் கைவந்து விட்டது. மூன்றாவதாக வயலின். அதனை இயக்குவது சுலபமாகத் தெரிந்தது. இறுதியில்தான் புல்லாங்குழல். அது வாயிலிருந்து வரும் காற்றின் அளவிலேயே கானம் ஒலித்தது.

இத்தனை வாத்தியக் கருவிகளையும் அப்பாவிடமிருந்து மாமா கற்பதை அவதானித்த அந்த இரண்டு சிட்டுக்களும் 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்ற முதுமொழிக்கமைய ஒவ்வொரு நாளும் இரவில் ஒரே பயிற்சியும் ஆலாபனையும்தான். வேலழகன் தான் கற்றுக்கொள்வதிலும் பார்க்க மனைவி பிரேமாவுக்குப் பயிற்றுவிக்கு முகமாக பூரணி, ஆரணி இருவரையும் பக்கத்தில் இருத்திப் பழக வாய்ப்பளித்தார்.

'தாரமும் குருவும் தலை எழுத்துப்படி' என்பது முதுமொழி. வேலழகனைப் பொறுத்தவரை தாரத்தையும் தந்து, சகல முன்னேற்றங் களுக்குக் குருவாய் அமைந்த குடும்பத்தின் வாரிசுகளான பூரணி, ஆரணி ஆகியோருக்கு எவ்வித சிரமமுமின்றிக் கற்றுத் தேற சகல ஒத்துழைப்பையும் செய்து கொடுத்தார்.

மிருதங்க வித்துவானாகப் பல்கலைக்கழகத்தில் ஆசானாகச் சேவையாற்றிய மூளாய் மகேந்திரன் அவர்களிடமிருந்து இரண்டு

ஹார்மோனியம், இரண்டு புல்லாங்குழல், இரண்டு மிருதங்கம், இரண்டு வயலின் ஆகியவற்றை அவரது ஆசீர்வாதத்துடன் விலைக்கு வாங்கினார். அவற்றில் மிருதங்கங்கள் இரண்டிற்கும் திரு. மகேந்திரன் காசு வாங்கவில்லை. அவை இரண்டும் தேவகுமாரின் பெண் மகள்காளன பூரணி, ஆரணி ஆகியோருக்கு அன்பளிப்பு என்று ஒரு சிறிய கடதாசியில் எழுதி ஒட்டிக்கொடுத்தார். சிறுமிகள் இருவரும் அன்னாரின் காலடியில் வீழ்ந்து வணங்கி அவற்றைப் பெற்று வீடு திரும்பினர்.

மொத்தமாக இரண்டு வருட இடையறாப் பயிற்சிகள் மூலம் சகல கருவிகளையும் இயக்கும் திறமைகளை இருவரும் பெற்றிருந்தனர். அவர்களின் அயலில் கோவில் கொண்டருளிய ஜெகஜோதி அம்பாள் ஆலயத்தில் முதல் அரங்கேற்றம் கண்டது மிருதங்கக் கச்சேரியே! தேவகுமார், வேலழகன் இருவருக்கும் குரு தட்சணையாகப் பட்டு வேட்டி, சால்வை, தாம்பூலம், பழங்கள், தட்சணை யாவும் வைத்து அரங்கேற்றம் ஆரம்பமானது. குழந்தைகளின் மிருதங்க இசைக்குத் தேவகுமார் புல்லாங்குழலும் வேலழகன் ஹார்மோனியமும் வாசித்தனர். சங்கீத ஆர்வலர்கள் மாத்திரமன்றிப் பொதுமக்களும் திரண்டு வந்து தங்கள் காதுகளுக்கு விருந்தளித்தனர். அது ஒரு நவராத்திரியின் காலம். சுழிபுரம் லோ. சுதாகரன் ஆசிரியர் வர்ணக் கோலத்தை ஆலயத்தின் கொடித் தம்பத்துக்கு முன்னால் வரைந்திருந்தார். வருகையாளர்கள் தமது கால்கள் அந்தக் கோலத்தில் படாதவாறு மிகுந்த பக்தியுடன் படம் பிடித்துச் சென்றனர். வருகையாளர் சகலரும் தங்கள் வீட்டுக் குழந்தைகளுக்கும் சங்கீதம் சம்பந்தமான வாத்திய- இசைக் கருவிகளைக் கையாளத்தக்கவர்களாக்கும் பயிற்சிக்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்ற ஆர்வ மேலீட்டுடன் வீடு சென்றனர்.

பாம்பாட்டி மகுடி வாசிக்க மயங்கி நிற்கும் நாகம் போல அயலில் உள்ள சிறுவர்கள் அனைவரும் தாங்களும் சகல இசைக் கருவிகளையும் இயக்கி வாசிக்க விருப்பம் தெரிவித்தனர். சகலரும் இலவசம் என்று கூறிவிட்டால் புனிதமான இசைக்கருவிகளைக் கையாள்வதில் சிரத்தை, அக்கறை, அவதானம் இருக்காது என்பதால், சகல பயிற்சிகளுக்கும் பிரவேசக் கட்டணம், பயிற்சிக் கட்டணம் என்று அறவிடப்படுமென விளம்பரப் பலகையில் எழுதப்பட்டிருந்தது. அப்போது தானே மாணவர்கள் ஒவ்வொரு கருவியையும் கையாளும் போது தமது அவதானத்தைச் செலுத்துவர்.

தென்னிலங்கையில் அசோக் ஒருநாள் தனது காரியாலய நண்பர்களின் 'get together' இல் உரையாற்றும் போது தமிழில் பேசினார். அதனை பீரீஸ் என்ற நண்பர் சிங்களத்தில் மொழி பெயர்த்தார்.

"இலங்கை என்ற சிறிய நாடு எங்கள் தாய் மண்ணாகும். இங்கே சிங்களவர், தமிழர், முஸ்லீம் என மூவகை இனங்களும் வாழ்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வதன் மூலம்தான் நம் நாட்டு இறைமையையும் வளத்தையும் பாதுகாக்க முடியும். நாம் இவ்வளவு சுதந்திரமாக வாழ்கிறோம் என்றால், எமது மூதாதையர், வழிகாட்டிகள் எமது நாட்டை அன்னியரிமிருந்து மீட்டுத் தனித்துவமான, இறைமையுள்ள நாடாக இந்த நாட்டின் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தி வருகின்றனர். இத்தாயின் குழந்தைகளாகிய நாங்கள் அனைவரும் எமது செயற்றிறன்களினாலும் புரிந்துணர்வுடனும் எமது நாட்டின் இறைமையைப் பேணுவோமாக.

உங்களுக்குத் தெரியுமா? எனது கிராமத்தில் பிறந்து மலையகத்தில் டாக்டராகக் கடமையாற்றிய ஒரு தமிழர்- பெயர் டாக்டர் தம்பையா அவர்கள். அவர் உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளை சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்து உதவியவர். தனது கிராமத்திலே சிங்கள மொழியைக் கற்பிக்கும் ஆசானாக வாழ்ந்து மறைந்தவர். அவரிடம் என்னைப் போன்ற பலர் அருகிருந்து சிங்கள மொழியைப் படிக்கிற பாக்கியம் பெற்றவர்கள்.

எனக்குப் பேச, எழுத, வாசிக்க முடியும். இருந்தும், மணித்தியாலக் கணக்கில் உரை நிகழ்த்துகிற அறிவு உடையவரல்ல. இன்னும் சில மாதங்களில் அந்த உன்னத நிலையையும் பிடித்து விடுவேன். இங்குள்ள முஸ்லீம் நண்பர்கள் மும்மொழிகளிலும் வல்லவர்களாக இருக்கின்றனர். அதேபோல சிங்களச் சகோதரர்கள் தமிழையும் தமிழ்ச் சகோதரர்கள் சிங்களத்தையும் விரைவில் கற்றுக்கொள்ள வேண்டும். ஆறுகள் பல இடங்களில் ஊற்றெடுத்தாலும் இறுதியில் எல்லாம் சமுத்திரத்தில் கலப்பது போல நாம் அனைவரும் இந்நாட்டு மன்னர் என்ற இறைமை உணர்வு எங்களுள் இருக்க வேண்டும்" என்றார்.

அவரது பேச்சு முடிவுற்றதும் அனைவரும் கரகோஷம் செய்து தமது மகிழ்வைத் தெரிவிக்கின்றனர்.

நாலாவது மகன் விநோத்குமாரும் ஐந்தாவது மகன் ஆனந்தகுமாரும் இடைக்கிடை மூத்த அண்ணன் தேவகுமாருடன் வேலைக்குப் போய் வருவதும் தங்கைக்காகக் கட்டப்பட்ட வீட்டின் வளவில்

தோட்டங்கள் செய்வதும் கணினிக் கல்விக்குரிய ரியூட்டறி ஒன்றினை ஆரம்பிப்பதுமாகத் தமது கவனத்தைச் செலுத்தினர். அவர்கள் வகுப்பெடுக்கும் போது தமது மாணவர்கள் முன்னிலையில்,

“அன்பான பிள்ளைகளே! நீங்கள் இந்தக் கம்பியூட்டர் அறிவைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு எவ்வளவோ தூரத்திலிருந்து சைக்கிள் மூலம் வந்து படிக்கிறீர்கள். உங்களுக்குப் படிக்கும் இந்தக் காலத்தில் நீங்கள் பெற்றாரை வருத்தாமல் நீங்களாகவே சுலபமாகச் சம்பாதிக்கிற பிள்ளைகளாக இருந்து உழைத்துப் படிப்புக் கட்டணத்தை நீங்களே செலுத்துகிற மனத் திண்மையைப் பெறவேண்டும்.

நாங்கள் அண்ணாவுடன் வேலைக்குச் சென்று உழைத்த காசில்தான் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியிலும் வட்டுக்கோட்டைத் தொழில்நுட்பக் கல்லூரியிலும் கணினி அறிவு மாத்திரமல்ல, மோட்டார் மெக்கானிசம் என்ற இயந்திரங்களைப் பழுது பார்க்கும் திறமையையும் கற்றுக்கொண்டோம். எங்களுக்கு கார், லொறி, டிராக்டர் ஆகிய இயந்திரங்களையும் பழுது பார்க்க முடியும்.”

ஒரு மாணவன்:- sir, நீங்கள் கற்றுக்கொண்ட அத்தனை திறமைகளையும் நாங்களும் கற்றுக்கொள்ள விரும்புகிறோம். நீங்கள் கூறியபடி வீட்டில் பெற்றாரைக் கஷ்டப்படுத்தாது நாங்களே ஏதோ ஒரு தொழில் செய்து சுயமாகச் சம்பாதித்துச் சகல தொழில்நுட்பங்களையும் இந்த இடத்திலேயே கற்றுக்கொள்ள விரும்புகிறோம். தங்களின் அறிவுரையால் எங்கள் அகக்கண்கள் திறந்துவிட்டன. இவ்வளவு நாட்களும் உண்ணும் உணவுக்கும் உடுக்கும் உடைக்கும் மாத்திரமன்றி, கணினிக் கல்வி பெறவும் பெற்றாரை வருத்திப் பணம் பறிக்கும் காரியத்தைச் செய்தோமே என்று மிகவும் வெட்கப்படுகிறோம்.

தந்தையாரை இழந்து, மூத்த அண்ணன் ஒருவரின் வழிகாட்டலின்படி நீங்கள் உங்களை உணர்ந்து இளமையில் வந்த வறுமையை உணர்ந்து படித்ததை நினைக்க நாங்கள் ஏதோ கொஞ்சம் புண்ணியம் செய்துதான் இங்கு படிக்க வந்திருக்கிறோம். எங்கள் அறிவுக் கண்களைத் திறந்துவிட்டீர்கள். இனிமேல் எந்த வேலை என்றாலும் கூச்சப்படாமல், வெட்கப்படாமல் நாமே போய்க் கேட்டுச் செய்து அந்த வருவாயில்தான் மேற்கொண்டு படிப்போம் என்ற மன உறுதியைத் தந்துவிட்டீர்கள். இந்த அறிவுரைகளை எந்தப் பல்கலைக்கழகத்திலும் பெறவே முடியாது...”

*இவ்வாறு கூறி முடித்ததும் அவரது கண்களில் நீர் வடிகிறது. குமார் சகோதரர்கள் தாம் கற்று முன்னேறியதுடன் நின்றுவிடாது, ஊரிலுள்ள இளைஞர்- யுவதிகளும் கற்று முன்னேற வழிகாட்டி நின்றனர்!*

*இவ்வாறு நாகலிங்கம்- பொன்னம்மா தம்பதிகளின் அனைத்துப் பிள்ளைளும் ஊரார் மெச்சும் வண்ணம் நன்றாக வாழ்கின்றனர். அவர்களுள் நந்தகுமாரும் அசோக்குமாரும் மூத்த அண்ணா தேவகுமார் பெயரில் மாதா மாதம் தமது சம்பளத்திலிருந்து ரூபா 10000 வீதம் தேவகுமாரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்கின்றனர். இதுகுறித்து ஒருநாள் அவர்கள் இருவரும் தொலைபேசி மூலம் உரையாடினார்கள்.*

*நந்தகுமார்:- அசோக்! நாங்கள் இரண்டு பேரும் ஓய்வு பெற்றவுடன் பென்ஷன் என்ற ஒரு வற்றாத செல்வம் மாதா மாதம் எமது கைக்கு வரும். எமது அண்ணா தனது சின்ன வயது தொடக்கம் வியர்வை சிந்தி, தான் ஒரு நிமிடமாவது ஓய்வெடுக்காமல் தமது உழைப்பில் எங்களை வளர்த்து, உணவு, உடை, படிப்பு யாவற்றையும் எந்தவிதமான குறையுமின்றி நிறைவேற்றிய புண்ணியச் சீமான்! அவர் உடல் தளர்ந்து தொழில் செய்ய முடியாமல் போய்விட்டால் அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் சீவியத்துக்கு நாங்கள் இப்போது அவரது கணக்குச் சேமிப்பில் இட்டு வைத்தால் இருபது முப்பது வருடத்தில் வட்டியுடன் ஒரு பெரிய தொகையாக வளர்ந்துவிடும். அத்தொகை மாதா மாதம் ரூபா 36000 வரும். அது எங்களுக்குக் கிடைக்கிற பென்ஷனைப் போலத்தான் கிடைக்கும். அவருக்குப்பின் அண்ணிக்கு வரும். அவர்கள் இருவரும் இல்லாக் காலம் அவர்களது வாரிசுகளுக்குத் தங்குதடையின்றிக் கிடைக்கும். நாங்கள் சம்பளம் எடுத்து மாதா மாதம் செலவோடு செலவாகப் போட்டுவைக்கும் பணம் மலையளவாக வளர்ந்து 30 வருடங்களில் சும்மா வீட்டில் ஈஸிசேரில் படுத்திருக்க வீடு தேடி வரும் பெருநிதியாகக் கிடைக்கும்.*

*அசோக்:- உண்மை. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று மூத்தோர் சும்மாவா சொல்லியிருக்கிறார்கள்?*

*இந்தக் காலோசிதமான அறிவுரைகள் அவர்கள் இருவரின் வாழ்க்கைத் துணைகளாகிய நூர்ஷஹானுக்கும் திலினிக்கும் தெரியும். அவர்களுக்கும் கைநிறைய வருவாய் வரும்போது கணவனின் சம்பளத்துக்கு எதிர்பார்ப்பது இல்லை. இன்னும் தங்களிடமுள்ள விலையுயர்ந்த புடைவைகள், பெறுமதியான தங்க ஆபரணங்களை*

*அண்ணி வள்ளிநாயகிக்குக் கொடுப்பதிலேயே கவனத்தைச் செலுத்துவர். கணவர்மார் மறந்தாலும் அவர்கள் நினைவூட்டுவர்!*

## *18*

*கண்டியில் வசிக்கும் முஸ்லீம் குடும்பமும் பத்தரமுல்லவில் வசிக்கும் சிங்களக் குடும்பமும் மீண்டும் யாழ்ப்பாணம் சென்று வர ஆசைப்பட்டன. ஆனாலும், யாழ். ஏ-9 பாதை மூடப்பட்டதால் திருகோணமலை சென்று யாழுக்குச் செல்வது சிரமம் என நினைத்து; அந்தப் பிரயாணத்தைத் தவிர்த்தனர்.*

*திருமணத் தொடர்பினால் நிறைவுபெற்று வாழும் நாகலிங்கம் குடும்ப அங்கத்தினர் சகலரும் மொழியால், கல்வியால், பொருளாதாரச் செழுமையால் நிறைவுபெற்று வாழ்கின்றனர்.*

*இந்நிலையில், அமரர் அம்மாச்சி தங்கமுத்துவின் பெயரில் ஒரு அநாதைச் சிறுவர்கள் பாடசாலை ஒன்றினைத் தொடக்க வேண்டுமென்று ஞானகுமாருக்கு ஒரு விருப்பம். இதனைத் தமையன் தேவகுமாருடனும் மாமன் இராதாகிருஷ்ணன் அவர்களுடனும் கதைத்தார். அதற்கு அவர்கள், "நல்ல இடவசதி முதலில் வேண்டும். பராமரிப்புக்கு ஆட்களும் நிறையப் பணமும் வேண்டும். அங்கு தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு நோய் நொடி வந்துவிட்டால் பராமரிப்பில் அத்தனை கவனஞ் செலுத்த வேண்டும். ஆண்கள் வேறு கட்டிடம், பெண்கள் கட்டிடம் என்று இருக்கும்போது கல்வி கற்குமிடம், இரவு தங்குமிடம் இவை யாவும் மிக மிகப் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அந்த நிலையம் சரிவர இயங்கினால்தான் அரசாங்கத்தில் பதிவு செய்ய முடியும். இது எல்லாம் பல உயிர்கள் சம்பந்தப்பட்ட விடயம் தானே" என்று முதலில் தயக்கம் காட்டினர்.*

*முதலில் ஒரு பாதுகாப்பான சூழலில் அமைந்த நிலம் வேண்டும். பிறகு அந்த நிலத்தில் பாதுகாப்பான கட்டிடம் அமைத்தல் வேண்டும். வளர்முக நாடுகளில் இப்படியான பொதுத் தொண்டினை அரசே ஏற்று நடத்துகிறது. இலங்கை போன்ற ஒரு ஏழை நாட்டில் தனி*

ஒருவர் இப்படியான தர்மக் காரியத்தைச் செய்வதாயின், அதனை நீண்ட நெடுங்காலத்துக்கு எந்தவிதக் குறைபாடுமின்றி, எந்தவித தளர்ச்சியுமின்றி வழிநடத்த வேண்டும். பல தர்ம நிருவாகங்களின் பங்களிப்புத் தொடர்ந்து கிடைக்க வேண்டும். இருந்தாற்போல் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்கிற காரியமல்ல இது!

தெல்லிப்பழையில் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அப்படியான ஒரு தர்ம காரியத்தைத் தொடக்கினார். அது இன்றுவரை எந்தவிதமான தளர்ச்சியுமின்றி நடைபெறுகிறது. உள்நாட்டு யுத்தத்தில் பெற்றாரை இழந்த பல அநாதைக் குழந்தைகளுக்கு அந்த அம்மா அடைக்கலம் கொடுத்தார். பல கொடைவள்ளல்கள் நிறைய வாரி வழங்கினர். வியாபாரிகள் பொருட்களாகக் கொண்டு வந்து இறக்கிச் சென்றனர். அந்த நிறுவனம் ஆதாயத்தோடு அண்டி இருந்ததால் வழிபடுவோர் சங்கம் மூலம் நாற்றிசைகளிலுமிருந்து பராமரிப்புச் செலவுகள் பேணப்பட்டன. அங்கிருந்து கற்று முடித்த பிள்ளைகள் தாங்கள் உழைப்பைத் தொடங்கியபின் தங்களைப் படிக்க வைத்து ஆளாக்கிய நிறுவனத்துக்குப் பண உதவி புரிந்து வருகிறார்கள். அதனால் பணப் பற்றாக்குறை என்ற சொல்லுக்கு இடமின்றி நிறுவனம் தொடர்கிறது.

'எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்பது வள்ளுவர் மொழி. ஆகவே, ஞானகுமார் தனது அமெரிக்கப் பேராசிரியரான திரு. ஜார்ஜ் தாம்சன் அவர்களுடன் கலந்து பேசினார். அவர் "எங்கள் நாட்டில் இயங்கும் சகல தர்மஸ்தாபனங்களும் கிறிஸ்தவ மத சேர்ச் நிறுவனம் ஊடாகவே செயற்படுகிறது. தங்கள் நாட்டிலும் கிறிஸ்தவ மத அடியொற்றிகள் தங்கிப் படிக்க வசதி செய்து தரப்படும். நானும் ஒரு கிறிஸ்தவன்தான். எனது சம்பளத்தில் ஒரு பகுதி சேர்ச் மூலம் இயங்கும் அற நிறுவனத்துக்கே போய்ச் சேருகிறது" என்று கூறினார்.

ஞானகுமார் "பொதுத் தொண்டிற்கு சாதியோ சமயமோ கிடையாது. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்' இதைத்தான் பாரதியாரும் கூறியிருக்கிறார். 'அன்ன சத்திரம் ஆயிரம்...' என்று தொடங்கி, 'ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்று தானே முடித்திருக்கிறார்? நாம் தொடங்க நினைக்கும் காரியத்தில் முன் வைத்த காலைப் பின் வைக்கக்கூடாது" என்று உறுதியாக இருந்தார்.

உள்ளூரில் சேர்ந்த பணத்துடன் தனது வருவாயின் ஒரு பகுதியையும்

*முதலீடாகச் சேர்த்துக் காட்டுப்புலத்தை அண்டிய அதாவது, பறாளாய் முருகன் கோவிலுக்கு அண்மையாக இருந்த நூறு பரப்பு வடலி வளவு முன்பு தபால் அமைச்சராக இருந்த செல்லையா குமாரசூரியரின் பெயரில் இருந்தது. ஞானகுமாரின் பொதுத் தொண்டினைப் பத்திரிகை வாயிலாகக் கேள்விப்பட்ட பாண்டுரங்கன் என்பவர் அந்த நிலத்தை சித்தப்பா குமாரசூரியர் தனது பெயருக்கு எழுதித் தந்ததாகவும் தான் அதை இவ்வளவு காலமும் போய்ப் பார்த்ததும் இல்லை என்றும் இப்படி ஒரு நற்செயலுக்கு அதாவது, அநாதைகளைப் பாதுகாக்கும் நிலையத்தை அமைக்க விஞ்ஞானி ஞானகுமார் முயற்சி எடுப்பதை முன்னிட்டு அந்த 100 பரப்பு வடலி வளவையும் தானே முன்வந்து நன்கொடை என்ற பெயரில் எழுதிக் கொடுத்துவிட்டார்.*

*அதே நேரத்தில் உடுவில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களும் பரம்பரைச் சொத்தாக இருந்த, பெரிய நிலப் பரப்பொன்றை கோப்பாயில் கல்வியியற் கல்லூரிக்கு நன்கொடையாக எழுதிக் கொடுத்த செய்தி யாழ். மாவட்டத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கியிருந்தது.*

*ஞானகுமார் தனது கையிலிருந்த காசைக் கொண்டு அந்த 100 பரப்பு நிலத்திலும் முன்புறம் ஒன்றைத் தவிர மற்றைய மூன்று புறங்களிலும் வளர்ந்து வரும் வடலிகளை அப்படியே வளரவிட்டு மற்றையவற்றைக் கிளறி அகற்றிவிடக் கட்டளையிட்டார். நில அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வந்து பார்த்து- கற்பகதருவை அழிக்க முடியாவிட்டாலும், ஒரு நல்ல தர்ம காரியத்துக்கு அந்த நிலம் பயன்பட இருக்கப்போவதாக அறிந்து சந்தோஷப்பட்டு அழிப்பதற்கு அனுமதியளித்தனர். வடலிகள் அகற்றப்பட்டுப் பெரிய கிணறு ஒன்று தோண்டப்பட்டது. சுற்றிவர நாற்புறமும் மதில்கள் கட்டப்பட்டு முன்பக்கத்துச் சுவரில் இரண்டு இடங்களில் கேற் போடப்பட்டது. பெரிய பெயர்ப்பலகை ஒன்று மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டிருந்தது.*

*"அம்மாச்சி தங்கமுத்து அநாதைகள் தங்குமிடம்"*
*"Grandmother Thangamuthu Orphanage"*
"අම්මාචි තංගමුත්තුගේ ළමා නිවාසය"

*என்று அந்தப் பெயர்ப்பலகை வழிப்போக்கர்களின் கவனத்தைக் கவர்ந்தது. உள்நாட்டு யுத்தத்தில் தந்தையை இழந்தவர்களும் வீதி விபத்துக்களில் பெற்றாரை இழந்தவர்களும் தங்களது பெயர், முகவரி, வயது ஆகிய விபரங்களுடன் தமது விண்ணப்பத்தை மேற்படி*

அநாதைகள் தங்குமிடம், ஐயானார் கோவிலடி, காட்டுப்புலம், சுழிபுரம் என்ற முகவரிக்கு அனுப்பத் தொடங்கினர்.

கிணற்று வேலை முடிந்து, தண்ணீர்த் தாங்கியும் (வாட்டர் ராங்) கட்டப்பட்டு, மோட்டர் இணைப்பும் பொருத்தப்பட்டபின் பல இடங்களில் 'பைப்' வசதிகள் செய்யப்பட்டன. அந்த நிலம் வயற்பரப்பை ஒட்டியிருந்ததால் கிணற்று நீர் குடிப்பதற்குரிய நன்னீராக வாய்த்து விட்டது. கிணற்றுக்கு மேலே இருந்து அடிக்கிணறு வரை ஒரு பெரிய ஏணி இரும்பினாற் செய்து, பிளாஸ்ரிக் குழலால் கவர் செய்யப்பட்டிருந்தது. காலப்போக்கில் கறள் பிடிக்காமல் இருப்பதற்குத்தான் இந்த முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் செய்யப்பட்டு இருந்தன.

அந்தப் பெரிய நிலத்தில் கட்டிடம் கட்ட 4 பரப்பு நிலத்தை ஒதுக்கிவிட்டு ஒருபுறம் சறுக்கு, ஊஞ்சல், வலைப்பந்து அடிப்பதற்கும் மறுபுறம் மரக்கறித் தோட்டம் செய்வதற்கும் முன்புறம் அழகிய பூந்தோட்டத்திற்கும் பகிரப்பட்டது. ஞானகுமார் தனது ஆசானாகிய திரு. ஜார்ஜ் தாம்சனுக்கு தனது அறநிலையத்திற்கு இலவசமாக 100 பரப்பு நிலம் கிடைத்தது பற்றி அறிவித்ததுடன், கிணறு, மதில், மோட்டர், கட்டிடத்துக்கான ஆயத்த வேலைகளுக்குத் தனது கையிலிருந்த காசைச் செலவழித்த விபரத்தையும் கூறினார். அதனைக் கேட்ட திரு. ஜார்ஜ் தாம்சன் என்ற பரோபகாரியின் காதுகள் குளிர்ந்தன.

"நல்லது ஞானம்! நானும் என்னால் இயன்ற பண உதவியை மாதா மாதம் செய்வேன். உமது முயற்சியை விட வேண்டாம். மனம் தளரவும் வேண்டாம். இப்படியான கருணை பொருந்திய பொதுச் சேவைக்கு நீர் உம்மை ஆட்படுத்தியிருப்பது எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது" என்றார்.

"I am very Proud of your social service work and humankind activities" என்று கூறினார்.

ஞானகுமாரின் தாய்மாமன் சிவலிங்கம் மாஸ்டர் சற்று வயது போய் உடல் தளர்ந்தாலும், வேலை விடயங்களில் வாலிபனாகவே செயற்பட்டார். மகன் சமரனும் தங்கள் ஒத்துழைப்பை மனமுவந்து வழங்கினார். ஞானகுமாரின் அத்தனை சகோதரங்களும் தங்களால் இயன்ற பண உதவியை வழங்கத் தவறவில்லை. அதேபோல அமெரிக்கப் பேராசிரியரும் விஞ்ஞானியுமாகிய திரு. ஜார்ஜ் தாம்சன்

அவர்கள் மாதா மாதம் 1000 டொலர் அனுப்பிக்கொண்டிருந்தார். சகல பண வரவுகளையும் திகதி தவறாமல் சமரன் தனது பதிவேட்டில் பதிந்து வைத்துக்கொண்டார். அதுபோல செலவுப் பதிவுகளும் பற்றுச் சீட்டுக்கள், இரசீதுகள் மூலம் பதியப்பட்டு வந்தது.

இந்த இடத்தில் வாசகர்களுக்கு ஒரு நற்செய்தி. நடப்பதற்குச் சற்றுச் சிரமப்படும் பூங்கோதை என்ற இளம் பெண் தனது ஒத்துழைப்பை அநாதைகள் இல்ல வளர்ச்சிக்கு வழங்குவதாக முன்வந்தார். அவர் பனிப்புலம் என்ற கிராமத்தில் வசிக்கும் கந்தையா வாத்தியாரின் இளைய மகளாவார். அவர் யாழ். பல்கலைக்கழக புவியியல்துறையில் பட்டம் பெற்றவராவார். அரசாங்க வேலைக்குப் போகாமல் இந்தப் பொதுத் தொண்டுக்குத் தன்னை அர்ப்பணித்துச் சேவை மனதுடன் வந்தவராவார். சிவலிங்கம் மாஸ்டருக்கு பூங்கோதை மீது மிகுந்த பற்றும் மகள் போன்ற பாசமும் உண்டாயிற்று.

சிலவேளைகளில் தூக்க முடியாத பாரங்களை இரண்டு கைகளாலும் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு பாதிக்கப்பட்ட காலினால் நெம்பி நடக்கையில் பார்த்துக் கண் கலங்குவார்.

“அம்மா பூங்கோதை! உங்கள் ஒத்துழைப்பும் ஆதரவும் எங்களுக்குப் போதும். உடலை வருத்துகிற வேலை ஒன்றுமே செய்ய வேண்டாம்” என்று தடுப்பார். தடுத்தாலும், பூங்கோதை கேட்க மாட்டாள்.

“விடுங்க சேர். நான் வீட்டில் இப்படிப் பல பல பாரங்களைச் சுமந்து பழகியிருக்கிறேன்” என்பாள். பூங்கோதையின் செயற்பாடுகளால் சமரனுக்கு அவள் மீது ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது. நாளடைவில் அது பிரிக்க முடியாத காதலாக உருவெடுத்தது. இதுபற்றிச் சிவலிங்கம் மாமா ஞானகுமாருடன் கதைத்தார். அதற்கு ஞானகுமார், “இந்த அநாதை விடுதிக் கட்டிடத்துக்கு முதல் நடக்கும் திருமணம் சமரன்- பூங்கோதை திருமணம்தான் மாமா” என்று நம்பிக்கையூட்டினார்.

பல பல புதிய கட்டிடங்களையும் ஒருசில பழைய வீடுகளையும் திருத்தியமைத்த அனுபவங்கொண்ட வேலழகனும் அடிக்கடி வந்து, தனது மைத்துனருக்கு ஒத்துழைப்பும் ஆலோசனையும் வழங்குவார்.

ஞானகுமாரின் நற்காரியத்தைக் கேள்விப்பட்ட வலி. மேற்கிலுள்ள பல சனசமூக நிலையங்கள் பண உதவி - சரீர உதவி, தளபாட உதவியெனத் தாமாகவே முன்வந்து பலவிதங்களில் பற்பல உதவிகளைச் செய்தனர். பெரிய கட்டிடம்- பள்ளியும் விடுதியும் ஒழுங்கமையக் கட்டப்பட்டது.

அதாவது, மழைக்காலத்தில் சீமெந்துப் பைகள் நனையாமல் இருப்பதற்கு 60அடி X 20 அடியில் ஒரு கட்டிடம் அமைக்கப்பட்டது. அங்கே சீமெந்து மாத்திரமல்ல நிலை, யன்னல், கதவுகள் ஆகியனவும் அடுக்கிவைக்கப்பட்டன. வருகையாளர்களின் வாகனங்களும் நிறுத்தி வைக்கப்பட்டன. பனம் சலாகைகள் சுற்றிவர அடைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன.

எமது கவனயீனமே திருடர்களை ஊக்குவிக்கிறது என்று சிவலிங்கம் மாஸ்டர் அடிக்கடி கூறுவார். கட்டிடத்தின் மேற்கூரை வேலை முடிந்தது. ஓடு போட முன்னர் முட்கம்பிகளைக் குறுக்கும் நெடுக்கும் பனைமரத்தின் மேலே ஆணி அடித்துப் பாதுகாப்புச் செய்யப்பட்டது. ஏனெனில், காலப்போக்கில் வயதுக்கு வந்த பெண் பிள்ளைகள் இரவில் தங்கியிருக்கும் இடத்திற்குத் திருடரோ அன்றி வேறு சபல புத்தி கொண்டவர்களோ உள்நுழையக்கூடாதென்பதில் அக்கறை, சிரத்தை காட்டப்பட்டது.

வெகு சீக்கிரமாகத் தங்குமிடமும் பயிலுமிடமும் கட்டி முடிக்கப் பட்டன. பார்ப்பவர்களுக்கு ஒரே அதிசயம்!

“என்னடா! நாகலிங்கத்தாற்றை பொடியன்களுக்கு நினைச்சபடி நினைச்சபடி உத்தியோகம். நினைச்சபடி நினைச்சபடி கல்யாணம்! நினைச்சபடி நினைச்சபடி காணி, பூமி, கட்டிடங்கள். இவர்கள் பிறப்பு இடத்தில் நாங்கள் உருண்டாலும் இந்த அதிட்டங்கள் கிடைக்காது”...

‘ஊக்கமும் முயற்சியும் தன்னம்பிக்கையும் ஓய்வெடுக்காத தொடர் ஆற்றலும் இருந்தால், எல்லோரும் முன்னேற முடியும்’ என்பது ஏன் அவர்களுக்குத் தெரியாமல் போனது? பொறாமைப்படுகிற அளவுக்குச் சிந்தித்துப் பார்க்க முடியவில்லையே! கட்டிடத் திறப்பு விழாவுக்கு எந்தப் பிரமுகர்களும் அழைக்கப்படவில்லை. இருந்தும், பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையின் அதிபராக விளங்கும் திருமதி சுலபாமதி கணேசமூர்த்தி அவர்களைப் பிரதம விருந்தினராகவும் கட்டிடத்தைத் திறந்து வைக்கும் அரிய பெரிய காரியத்தைச் செய்பவராகவும் அன்புடன் அழைத்தனர். ஏனெனில், அந்த அம்மையாருக்கு அத்தனை தகுதிகளும் ஒரு கைப்பாடான திறமை இருக்கிறது.

பள்ளி நிர்வாகம், மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றின்

திறமைகள், புதிய மாடிக் கட்டிடங்கள் இரண்டும் ஒரே நேரத்தில் கட்டப்படும் போது மாணவர்களின் படிப்பும் தடைப்படாது. தொழில் செய்தவர்களின் தொழில் தாமதப்படாமலும் அதற்கேற்ற முறைப்படி சகல இடங்களுக்கும் முகங்காட்டி தனது தாகம், பசி மறந்து கடமையாற்றி வெற்றி கண்டதை அந்த ஊர் மக்கள் மாத்திரமல்ல அயல் கிராமத்தவர், கல்வி இலாகா உயரதிகாரிகள் வரை அறிவார்கள். அந்த அம்மையார் பள்ளி வளாகத்துக்குள் கால் வைத்தால் மாலை வரை காற்றாடி போல் சுழன்றபடிதான் வேலை செய்வார். காலிற் சக்கரத்தைப் பூட்டியது போல நகர்ந்துகொண்டேயிருப்பார்!

அதேபோல சுழிபுரம் விக்டோறியா அதிபராக இருந்து ஓய்வு பெற்ற உயர்திரு. வரதராஜா ஸ்ரீகாந்தன் அவர்கள் கடமையாற்றிய காலத்தில் விக்டோறியா தாய் கட்டிடங்களாலும் கவினுறு மரங்களாலும் கல்வி வளர்ச்சியினாலும் வெளிநாட்டு வாழ் தமிழரின் பண உதவியினாலும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து மாணவர்களின் பெறுபேறுகளினால் புகழ் பெற்றாள். அதனால் அந்தப் பெரியாரையும் சிறந்த பேச்சாளராக செங்கம்பள வரவேற்பில் கலந்துகொள்ளச் செய்தனர்.

சுழிபுரக் கிராமத்தில் மாத்திரமல்ல சுற்றுவட்டாரக் கிராமங்களில் வாழ்கிற அறிஞர் பெருமக்களுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டன. யாருமே தேடுவாரற்று உப்பு மணலாக இருந்த அந்தக் காட்டுப்புலத்து நிலத்தைச் சீர்செய்து இன்று கண்களுக்கு விருந்தளிக்கும் கட்டிடமும் சுற்றிவரச் சோலை போன்று காட்சி தரும் பூமரங்களும் கனி தரும் மரங்களும் கற்பகதருக்களும் காண்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் அழகைக் காட்டி நிற்கின்றன.

அங்கே தினமும் காலை மாலை தேவாரப் பஜனைகளும் பகல் முழுவதும் படிப்பும் மாலையில் விளையாட்டுகளும் மூன்று நேரமும் சமையற்கூடத்தில் உணவு தயாரிப்பும் தோட்ட வேலைகளும் ஆடு வளர்ப்பும் பால் கறக்கும் காரியமும் தவறாது நடைபெறுகின்றன. இந்த அநாதைகள் விடுதி அமைந்ததன் பின்னால் அந்த இடத்தின் அயல் நிலங்கள் எல்லாம் பெறுமதியும் உச்சமும் தொட்டன. அங்குள்ள மாணவர்களில் ஒருசிலர் அங்கவீனர்களாக இருந்தனர். அவர்களுக்குச் சுகதேகிகள் உதவும் கரமாக விளங்கினர். இப்படியொரு தர்மகாரியமான நிலையம் தொடங்கப்பட்டு இருப்பதை அறிந்த மற்றைய மாவட்டச் சிறுவர்களும் வந்து சேரத் தொடங்கினர்.

சில அற நிறுவனங்கள் பண உதவிகளையும் வழங்கின. காரைநகரில் வாழ்ந்த திரு. இராசசேகரம் என்ற வைத்தியரின் இரண்டு மகள்மார் கை, கால் சூம்பிய பிள்ளைகளாக இருந்தனர். அவர்கள் இருவரையும் மேற்படி நிலையத்தில் சேர்த்தது மட்டுமன்றி- அவர்கள் பெயரில் இருந்த வங்கிப் பணத்தையும் வைத்திய கலாநிதி காட்டுப்புல அநாதை இல்லத்திற்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டார்.

இப்படியான நிறுவனம் எமது கிராமத்தில் இயங்குகிறது என்று கேள்விப்பட்ட பிரபல வர்த்தகர்களான துரையப்பா கடை, கேதீஸ் கடை, மயூரன் கடை, தவபாலன் கடை ஆகியன மாதாந்தம் அரிசி மூடை, சீனி மூடை, மா மூடை, பருப்பு மூடை இவற்றுடன் பலசரக்குச் சாமான்களாகிய மிளகாய், மல்லி, மிளகு, சீரகம், பெருஞ்சீரகம், கடுகு, வெந்தயம் இற்றுடன் எண்ணெயும் தந்து உதவுகிறோம் என முன்வந்தன. பொன்னாலையிலுள்ள கதிரவேலு கடைக்காரரும் நெல்லியான் ஆடியபாதம் கடைக்காரரும் பறாளாய் வீதி நல்லையா கடைக்காரரும் பண்டத்தரிப்பு அம்பாள் ஸ்ரோர்ஸ் கடைக்காரரும் தாமாகவே முன்வந்து இந்தத் தர்ம காரியத்திற்கு ஒத்துழைத்தனர்.

சகல வியாபாரிகளும் ஒத்துழைத்துக் கை கொடுக்கும் போது ஒருசிலர், “எங்களுக்குச் சாமான் நிறுக்கும் போது தராசு கீழே இறங்க முன் அவசரமாகக் கொட்டுகிற கஞ்சப் பிசினாறிகள் நன்கொடை கொடுத்து இன்கம் ரக்ஸிலிருந்து (Income Tax) தப்பிக்கத்தான் தந்திரம் செய்கிறாங்கள். யாவாரிகள் மனம் இப்பிடி இளகுது என்றால், அதற்குள்ளே ஒரு உள் சூத்திரம் இருக்கத் தானே செய்யும்?” என்று கூடிக் கூடிக் கதைத்தனர்.

உணவுப் பண்டங்களையும் அரிசி போன்ற தானியங்களையும் எலி முதலிய பிராணிகள் தீண்டாமல் அவற்றைப் போட்டு வைக்கப் பெட்டகம், அலுமாரி போன்றவற்றை “தங்கள் வீட்டில் சும்மா கிடக்குது” என்று கூறி அரிச்சந்திரன்- விஜயேந்திரா சகோதரர்கள் மேற்படி நிறுவனத்திற்கு அன்பளித்தனர். அவரைப் போலவே கிராமியப் பாடல்கள் மூலம் வானொலிப் புகழ் பெற்ற சிவசண்முகமூர்த்தி மாஸ்டரும் தங்கள் வீட்டிலிருந்த பெரிய பெட்டகத்தை நன்கொடையாகக் கொடுத்தார்.

தானியங்களைப் புடைப்பதற்காக சுளகுகளும் அரிக்கன்களும் சுழிபுரம் சந்தி காந்தி கடை அன்பளிப்பாகக் கொடுத்தது. சிலர் செய்யும் இந்த

நல்ல செயல்களைக் கேள்விப்பட்டு மற்றும் பலர் தங்களால் இயன்ற உதவிகளை மேற்படி அநாதை விடுதிக்கு உதவ முன்வந்தனர். யாழ். வண்ணார்பண்ணையில் இயங்கி வந்த 'மில்க்வைற்' என்ற சவர்க்காரத் தொழிற்சாலை சிறுவர்கள் தங்கள் உடுப்புக்களைக் கழுவுவதற்கு மாதத்தில் 4 டசின் கொடுத்து உதவியது.

மாவிட்டபுரத்தில் இயங்கிவந்த 'லிங்கம்ஸ் வாளி கம்பனியும்' சிறிய வாளிகள் 2 டசினும் பூவாளிகள் 4 டசினும் நன்கொடையாகக் கையளித்தது. 'பல துளி பெரு வெள்ளம்' என்பது போல அநாதைப் பிள்ளைகளின் புழக்கத்திற்கு அனைத்து உபகரணங்களும் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தன.

அந்த வளவில் வளர்ந்துவரும் காய்கறிகள் அநேகம் மரவள்ளி, முளைக்கீரை, கத்தரி, வெண்டி, பயிற்றங்கொடி, பாகற்கொடி, புடோல் கொடி, கரட், பீற்றூட், அவரை புதுமண் பிரட்டி எறியுது. புதுப்புது மரக்கறிகள் என்று தங்கள் கைகளால் பறிக்கப்படும் மரக்கறிகளுக்குப் பாடலே பாட ஆரம்பித்துவிட்டனர். கறி முருங்கையோ அப்படிப் பூத்துக் காய்க்கத் தொடங்கிவிட்டது.

முருங்கையிலையை வாழைப் பொத்தியுடன் கலந்து வறை செய்தால் அதிலும், நல்லெண்ணெயில் அதனை மெல்லிய நெருப்பில் வறுத்தால், அதற்கு இணையாக எந்தக் காய்கறியையும் ஒப்பிட முடியாது. அங்குள்ள தென்னை மரங்களுக்குக் கடற்கரைச் சாதாளை எனப்படும் பசளையும் வண்டில்களில் இறக்குவித்துத் தாழ்ப்பித்தனர். பசளை தாழ்க்கப்பட்ட பின் தேங்காய்களும் செவ்விளநீர் மரங்களும் ஒரு குலையில் 20 என்ற எண்ணிக்கையில் காய்க்கத் தொடங்கின. முன்பு சத்துக் குறைவினால் குரும்பட்டியாகவே நிலத்தில் உதிர்ந்துவிடும். இப்போது அரும்பு கட்டிய அத்தனை பாளைகளும் இறுக்கமாக இருந்து வளரத் தொடங்கின. காடுகளில் வாழ்ந்த மரநாய்கள் தென்னை மரத்தில் ஏறிக் குரும்பைகளுக்குத் தீங்கு விளைவிக்காத வகையில் தென்னைகளுக்குக் கறுப்பு நிறத்தால் பாம்பு போன்ற உருவங்கள் கீறப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. அந்த வளவினுள் இரண்டு விளாத்தி மரங்களும் இரண்டு நாவல் மரங்களும் ஏற்கனவே இருந்தன. அவை மனிதக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கிய பின் காய்க்கத் தொடங்கின. மனிதக் குரல்களும் சங்கீத ஓசையும் கேட்டால், காய்க்காத மரங்கள் எல்லாம் காய்க்கத் தொடங்குமாம். இது முன்னோர்கள் அனுபவத்தில் கண்ட உண்மையாகும்.

# 19

நல்லப்பு என்ற பெயருள்ள ஒரு தொழிலாளி தானாகவே அவ்விடத்திற்கு வந்து, தான் ஒரு தனிக்கட்டை என்றும் பெற்றாரை இழந்தபின் பாட்டியுடன் வாழ்ந்ததாகவும் அவரும் மறைய இப்படி ஒரு நிலையம் ஆரம்பித்து நடைபெறுகிறது என்று கேள்விப்பட்டு வந்ததாகவும் கூறினார். அவர் நேரே வேலழகன், சமரன் இவர்களுடன் கதைத்து- தனக்கு கமவேலை, தோட்ட வேலை, கால்நடை வளர்ப்பு இவற்றுடன் ஆட்டோ, வான் முதலிய வாகனங்களை ஓட்டவும் திருத்தவும் பயிற்சி உண்டென்றும் கூறி, தனக்குச் சம்பளம் எதுவும் வேண்டாம் என்றும் உணவும் உடையும் தந்தால் போதும் என்றும் கூறினார்.

"தேடிய பூண்டு காலுக்குள் வந்தது" என்பார்கள். அதுபோல சகலகலா வல்லவன் ஆகிய நல்லப்பு தேடி வந்ததைப் பற்றி ஞானகுமாரிடம் கூறினார்கள்.

"இந்த நல்லப்புவை நாங்கள் இருகரமும் கூப்பி வரவேற்று அன்பு செலுத்த வேண்டும். அவரை நாங்கள் ஒருபோதும் மனம் கோணும்படி சொல்லாலோ செயலாலோ காயப்படுத்தக்கூடாது" என்று கூறினார்கள்.

அப்படி அவர்கள் கதைத்துக்கொண்டிருக்கும் நேரம் நல்லப்புவும் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார்.

"வணக்கம் ஐயா!" என்று ஞானகுமாருக்கு வணக்கம் செலுத்திய பின், தனது தோளில் இருந்த சால்வையை எடுத்துக் கமக்கட்டுக்குள் வைத்தார்.

அதைக் கண்ணுற்ற ஞானகுமார், "நல்லப்பு! நீங்கள் அப்படி ஒன்றும் செய்யக்கூடாது. ஆண்டவன் படைப்பில் நாங்கள் அனைவரும் சமம். நீங்களாகவே சேவை செய்ய வேண்டும் என்று தேடி வந்தபடியால், நாங்கள் அல்லவா உங்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும்! உங்கள் மனதில் சேவை செய்ய வேண்டும் என்ற ஆவலை உங்களுக்கு ஊட்டி வளர்த்த உங்கள் பாட்டியை நாங்கள் மனதார வணங்குகிறோம். உங்கள் திறமையினால் ஆடு, கோழி வளர்ப்பின் வருவாயில் ஒரு ஆட்டோ

வாங்குவோம். இப்போதைக்கு உங்கள் பைசிக்கிளை பாவியுங்கள்'' என்று கூறி, அவரது கைக்குள் பத்தாயிரம் ரூபாவை ஆயிரம் ரூபா நோட்டுகளாகக் கொடுத்தார் ஞானகுமார்.

இதுவரை காலமும் பச்சை நிற நோட்டுகளைக் கண்ணால் காணாத நல்லப்பு, ''ஐயா! நான் சில வீடுகளில் நல்ல பேட்டுக் கோழிகளைப் பார்த்திருக்கிறேன். அவற்றை வாங்கட்டுமா?'' என்று கேட்டார்.

''இந்தக் காசு உங்களுடைய கைச் செலவுக்குத் தந்தது. நீங்கள் ஆடோ, கோழியோ வாங்குவதென்றால் வேலழகனுடன் சென்று வாங்கி வாருங்கள்'' என்று அன்பு ததும்பக் கூறினார் ஞானகுமார்.

சமரன் தன்னிடமிருந்த 4 கட்டைக் காற்சட்டைகள், 4 ரீசேட்டுகள், 2 துவாய்கள், 2 பெட்சீட்டுகள், 2 சாரங்கள், 1 வேட்டி சால்வை, 2 நீளக்கைச் சேட்டுகள் இவற்றை நல்லப்புவுக்குக் கொடுத்தார். நல்லப்பு இடைக்கிடை பீடி மாத்திரம் புகைப்பார். மற்ற எந்தவிதமான கெட்ட பழக்கவழக்கங்களும் கிடையாது. இனிய குரலில் காத்தவராயன் கூத்துப் பாடல்கள், அரிச்சந்திரன் நாடகப் பாடல்கள், பவளக்கொடி, சத்தியவான்- சாவித்திரி போன்ற நாட்டுக்கூத்துப் பாடல்கள் பாடுவார். யாவும் அவருக்கு மனப்பாடம்.

சுற்றாடல்களிலுள்ள பனை மரங்களிலிருந்து அதன் உரிமையாளர்களின் அனுமதியுடன் நுங்கு இறக்குவித்துச் சகல பிள்ளைகளும் நுங்கு குடித்து மகிழ்ந்தனர். அதன் கோம்பைகளைச் சிறு சிறு துண்டுகளாக அரிந்து தாங்கள் வளர்க்கும் ஆடுகளுக்குத் தீனியாகக் கொடுத்தனர். ஆடுகளைப் பகலில் அவிழ்த்துவிட்டால், புல் தரையில் புல் மேய்ந்த பின் மதியம் தண்ணீர் குடிக்க உள்ளே வர அனுமதி கிடையாது. ஏனெனில், அநேக பூக்கன்றுகளும் நாட்டப்பட்டிருப்பதே காரணம்!

உள்ளே பூட்டி வெளிப்புறத்தில் தண்ணீர் பெறக்கூடியதாக ஒரு 'பைப்' இணைக்கப்பட்டிருந்தது. அந்த பைப்பில் வழிப்போக்கர்களும் தாகசாந்தி செய்து கொள்ள முடியும். விடுதி மாணவர்களுக்குச் சமைக்கப்படும் உணவின் மரக்கறித் தோல்கள், பிழிந்த தேங்காய்ப்பூ, வடித்த கஞ்சி இவற்றுடன் வாசனைக்குக் கொஞ்சம் புண்ணாக்கும் கரைத்து வைத்தால் அந்த வாயில்லாச் சீவன்கள் வயிறாறக் குடித்துவிட்டு மர நிழல்களில் படுத்து இரை மீட்கத் தொடங்கிவிடும்.

விடுதி மாணவர்களுக்குத் தாங்கள் வளர்க்கும் ஆடுகள் மறிக் குட்டி- பெண் குட்டி போடுவதுதான் பிடிக்கும். அப்படிப் போட்டால்,

*பரம்பரை பரம்பரையாகப் பால் கறக்க முடியும். கிடாய்- ஆண் என்றால் யாழ்ப்பாணத்து இறைச்சிக் கடைக்காரர் கிடாய் ஒன்றுக்கு ரூபா 50,000 வீதம் விலை பேசித் தங்கள் வாகனத்தில் ஏற்றிச் செல்வார்கள்.*

*கிடாய் ஆடுகள் வாகனத்தில் ஏற்றப்படும் வேளைகளில், 'ம்மா.... ம்மா...' என்று கத்தும். அந்த ஓசை கேட்டதும் விடுதி மாணவர்கள் கண்ணீர் வடிப்பர். தாயின் வயிற்றிலிருந்து பிறந்த நாளிலிருந்து 2, 3 மாதங்களாகத் தங்கள் கைகளில் தூக்கித் திரிந்து வளர்த்துவந்த குட்டிகளை- விலைக்கு வாங்கிக்கொண்டு போகும் இறைச்சிக் கடைக் காரர் தனது வியாபாரத்துக்காகக் கொலை தானே செய்யப்போகிறார் என்று நினைத்து அழுவார்கள். அதனால்தான் அவர்கள் மறி ஆட்டுக் குட்டிகள்தான் கூடுதலாகப் பிறக்க வேண்டும் என்று தெய்வங்களை வேண்டுவார்கள்.*

*தினமும் ஆடுகளை வெளியே விடவும் மாலையில் அவற்றைப் பட்டியில் அடைக்கவும் நல்லப்பு என்ற வேலைக்காரர் ஒருவரை நிர்வாகம் நியமித்திருந்தது. மறி ஆடுகளில் குட்டியை ஊட்ட விட்டபின் அவற்றைக் கட்டி வைத்துப் பால் கறப்பது எல்லாம் விடுதி மாணர்வகளே! மறி ஆடுகள் பருவம் அடைந்ததும் அவற்றுக்குச் சினை ஊட்டப்படும் வேலைகளை நல்லப்பு மாத்திரம் மறைமுகமாகச் செய்து முடிப்பார். குட்டி ஈனும் வேளைகளில் குட்டியுடன் வெளியேறும் இளங்கொடி எனப்படும் நச்சுக்கொடியைப் பத்திரப்படுத்தி வெளியே தூரத்திலுள்ள ஆலமரத்தில் கட்டிவிடுவார்கள். குட்டிகளின் காலிலுள்ள குளம்பு நறுக்குதல் மற்றும் குட்டி போட்ட தாய் ஆட்டுக்கு முள் முருக்கம் குழை போடுதல் போன்ற வேலைகளையும் நல்லப்பு தான் செய்வார். அவர் ஆட்டு மந்தை வளர்ப்பில் கைதேர்ந்த கெட்டிக்காரர். கொடிக்கள்ளியை முறித்து அவற்றை நெருப்புத் தணலில் வாட்டிச் சிறிது வேப்பெண்ணெயையும் கலந்து கரண்டி மூலம் குட்டிகளுக்கு ஊட்டிவிடுவார். குட்டி ஈன்ற தாய் ஆட்டுக்கு 2 நாட்களுக்குப் பச்சை அரிசியில் கஞ்சி காய்ச்சி ஆறவிட்டுக் கொடுப்பார். ஆடுகளுக்குச் சிலவேளைகளில் இரை ஏறல் எனப்படும் முன்னடைப்பன், பின்னடைப்பன் நோய் வந்துவிட்டால், வெற்றிலைக்குள் 2, 3 மிளகைப் பொடி பண்ணி வாய்க்குள் வைத்து அவற்றை மென்று விழுங்கும் வரை தாயாட்டின் வாயைத் தனது கைகளால் பொத்தி வைத்துக்கொள்வார். ஆட்டுக்குத் தவிடு- நல்ல பச்சை அரிசித் தவிடு மூடைக் கணக்காக வாங்கிப் புண்ணாக்குக் கொஞ்சம் ஊறவைத்துத் தவிட்டுடன் கலந்து வைத்தால், நன்றாகப் பால் கறக்கும். ஆலங்குழை,*

பலாக்குழை இவற்றை இலை குத்தும் குத்தூசி மூலம் குத்தி வந்து இரண்டாகக் கிழித்து உண்ணக் கொடுப்பார். மரவள்ளிக் கிளையின் துளியின் பால் ஆட்டின் தொண்டையில் சிக்கினால், அது உயிரிழக்கும் ஆபத்து வந்துவிடுமாதலால் அந்த விடயத்திலும் நல்லப்பு கண்ணும் கருத்துமாக இருப்பார்.

குரக்கன் அறுவடைக் காலத்தில் சந்தையில் பிடி பிடியாகக் கட்டிக் குரக்கன் ஒட்டு விற்பார்கள். அவற்றை நல்லப்பு வாங்கி வந்து, அரிவாளில் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஆடுகளுக்கு உண்ணக் கொடுப்பார். கழைப்புல் பிடுங்கும் காலத்தில் புல்லுக்கட்டு வாங்கி வந்து அதன் வேரை அறுத்து, அதற்குள் நெல்லின் புல் இருக்கிறதா எனப் பார்த்து (நெல்லின் புல் அடியில் சிவப்பாக இருக்கும்) அது ஆட்டுக்கு ஆகாது என்பதால் அவற்றைக் கழிவு வேர்களுடன் நீக்கிவிட்டுத்தான் உண்ணக் கொடுப்பார். ஆடு, மாடு வளர்ப்பதென்றால் அதுவே பெரிய நுட்பம்தான்! ஆட்டுப்பால் ஆயுள் வளர்க்கும் என்பார்கள். ஆட்டுப்பாலில் காலை, மாலை தேநீர் குடிப்பதனால் விடுதி மாணவர்கள் இருமல், தடிமன், சளி வருத்தங்கள் இன்றிச் சுகதேகிகளாகப் படித்து வருகின்றனர்.

அதுபோல கோழி வளர்ப்பிலும் பிள்ளைகள் ஆர்வம் காட்டுகின்றனர். கோழிகள் அனைத்தும் கூட்டில் அடைத்து, தீவனம் கொடுத்து நன்றாகப் பராமரிக்கப்பட்டன. இவற்றையும் நல்லப்புவே பராமரித்து வந்தார். கோழிகள் இடும் முட்டைகள் பிள்ளைகளுக்கே கொடுக்கப்படுகின்றன. அவற்றைச் சந்தைப்படுத்துவதில்லை. ஆனால், சேவல்கள் வளர்த்துச் சந்தைப்படுத்தும் பணம் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்குப் பயன்பட்டது. இருந்தபோதும், நாளுக்கு நாள் குறிப்பிட்ட தொகைக்கு மேல் மின்கட்டணம் அதிகரித்து வந்தது. மின்சாரப் பொருட்களின் பாவனை அதிகரித்தமையே இதற்குக் காரணம் ஆகும். இதனைக் குறைப்பதற்கு நல்லப்பு ஒரு ஆலோசனையை முன்வைத்தார். அதாவது, கொக்குவில் கார்த்திகேயன் மாஸ்டரின் வீட்டில் பத்திரப்படுத்தி வைத்திருந்த அம்மி- குளவி, ஆட்டுக்கல், திரிகை, கல்லுரல்- உலக்கை, பாக்குவெட்டி, குத்தூசி, சத்தகங்கள், மண்வெட்டி, கோடரி, சாக்குத் தைக்கும் ஊசி, பிக்கான், அலவாங்கு, புத்துவெட்டி அனைத்தையும் அநாதைகள் விடுதிக்கு எடுத்து வருவதற்குரிய ஏற்பாடுகள் செய்தார். விடுதியில் காய்த்து விழும் பாக்குகளை பாக்குவெட்டி மூலம் உரித்துக் காயவைத்துச் சந்தைப்படுத்தினார்.

விடுதிப் பிள்ளைகளுக்குக் கல்வியுடன் கைத்தொழிலும் பழக்குகிற ஆசான்கள் மூலம் பனையோலைப் பன்னவேலை அதாவது பெட்டி, நீற்றுப்பெட்டி, இறுக்கட்டி, வண்ண மூடல் பெட்டி, கொட்டைப்பெட்டி, முடிச்சுப்பை, சுளகு, தடுக்கு, பாய், கடகம், கழிவு அடைவியன் ஓலையில் செய்யப்படும் திருகணை, உறி, உமல் ஆகிய கைப்பணிப் பொருட்கள் செய்யப் பழக்கி அவற்றைச் சந்தைப்படுத்தி மாதாந்தம் ரூபா 3,000 இற்கும் மேலே வருவாய் ஈட்டக்கூடிய வாய்ப்பையும் உண்டாக்கிக் கொடுத்தனர்.

அந்த வளவில் கிடைத்த பனை ஓலைச் சார்வுடன் தனியார் வீடுகளில் உள்ள பனைகளில் குருத்தோலை அதாவது, சார்வு வாங்கி ஆளுக்கொரு சத்தகம், ஓலை, வார உதவும் தகடு யாவும் செய்வித்து ஒவ்வொருவர் கையிலும் ஒப்படைக்கப்பட்டன. 'கைத்தொழில் ஒன்று கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்ற ஆன்றோர் வாக்குப்படி ஒவ்வொரு விடுதி மாணவரும் தத்தமது திறமையைக் காட்ட பின்னல் பெட்டி, மூன்று கண் பெட்டி, பிராமணப் பெட்டி என்று இழைத்து பனை ஓலைச் சார்வைப் பணமாக மாற்றினர்.

அதிகம் பிராமணப் பெட்டி என்று சொல்லப்படும் பெட்டிகளை ஒவ்வொரு கோவில்களிலும் கேதார கௌரி விரத காலத்தில் விரதம் அனுட்டிக்கும் தாய்க்குலத்தவருக்குக் காப்பு நூலுடன் 21 அரியதரம் உள்ளிட்ட பிரசாதப் பொருட்கள் வைத்துக் கொடுப்பதற்கு 1 பெட்டி ரூபா நூறு வீதம் வருடத்தில் ஒரு ஆலயத்திற்கு 100 பெட்டிகள் வரை விற்று ரூபா 10000 வரை சேர்க்கத் தொடங்கினர். படிப்பும் படிப்பாம் படி. இரவு நேரம் பன்ன வேலை. ஒரு பொழுதும் வீண் பொழுது ஆகாமல் பொழுதெல்லாம் உழைப்பு ஒன்றையே நோக்கமாகக் கொண்டு படித்து வருகிறார்கள். ஆண் பிள்ளைகள் தாங்கள் அநாதை என்ற சொல்லுக்கு இடமளியாது வளவிலுள்ள மரக்கறித் தோட்டப் பராமரிப்பு, நீர் இறைத்துப் பாத்தி கட்டுவதில் கவனஞ்செலுத்தினர்.

கடையில் விற்கப்படும் கோழிச்சாயப் பவுடரை வாங்கி வந்து முதலில் ஓலையின் ஈர்க்கு, அடைவியன் இவற்றைச் சத்தகத்தால் வார்ந்து நீக்கிவிட்டு அவற்றை ஒரு சுற்று மடிப்பாகக் கட்டித் தண்ணீருக்குள் ஊறவிடுவர். ஒரு பெரிய பாத்திரத்துள் (மண் பானை அல்லது அலுமினியப் பானை) தண்ணீருடன் கல் உப்பும் சேர்த்து அந்தத் தண்ணீருடன் சாயப் பவுடரைக் கலந்து கொதிக்கவிட்டு, ஊறவைத்த ஓலைக் கட்டை எடுத்து அதற்குள் இட்டு ஒரு தடியின் உதவியுடன் கிளறுவார்கள்.

*கட்டுகள் அவிழ்ந்து ஓலைகள் யாவும் நிறச்சாயம் பிடிக்கும். அவற்றை நிழலில் உலர வைத்துத் தமது பன்னவேலைப் பூக்களுக்குப் பயன்படுத்துவர். சிவப்பு, பச்சை, நீலம் ஆகிய வர்ணங்களை அடுத்தடுத்து மூன்று நாட்களுக்குக் காய்ச்சுவார்கள். விடுதி மாணவர்கள் சாயோலை காய்ச்சி விற்கிறார்கள் என்று கேள்விப்பட்டு அவ்வூரிலுள்ள பன்ன வேலைப் பெண்களும் வந்து அவற்றை விலைக்கு வாங்கிப் போக ஆரம்பித்தார்கள். அதுவும் விடுதி மாணவர்களுக்கு ஒரு பண வருவாயைக் கொடுத்தது.*

*அவர்களுள் வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த சிவக்கொழுந்து என்ற மாணவியே கணக்குகள் எல்லாவற்றையும் பதிந்து வரவு-செலவு பார்த்துக்கொள்ளுவார். சார்வோலைகள், கடகத்துக் குஞ்சுப் பெட்டிக்கு மட்டை கட்ட நார், சாயப்பவுடர், உப்பு, சத்தகம், வார்கட்டை உதாரணமாக ஒவ்வொரு 6 மாதத்துக்கும் செலவு ரூபா 500 என்றால், வரவு ரூபா 5000 என்று வரும்போது மனிதக் கூலி ரூபா 4500ஐ தங்கள் கணக்கில் பதிவார்கள்.*

*மாதாந்தக் கூட்டத்தில் வரவு- செலவுக் கணக்கு வாசிக்கும் போது கொப்பிகள் யாவும் சரி பார்க்கப்பட்டுப் பதிவில் இருக்கும். மரக்கறித் தோட்டத்தைப் பராமரிக்கும் ஆண் பிள்ளைகள் என்றால் என்ன, பனை ஓலைக் கைத்தொழிலைச் செய்யும் பெண் பிள்ளைகள் என்றால் என்ன, தம்மை வைத்துப் பராமரித்து உணவு, உடை தந்து கல்வியறிவூட்டும் நிலையத்திற்கு விசுவாசமாகவும் அதன் பொருளாதார வளர்ச்சியில் மிகுந்த ஊக்கமாகவும் இருந்தனர். அந்த வளவில் இவர்கள் கொட்டை போட்டு வளர்ந்த ஒரு எலுமிச்சையும் ஒரு தோடை மரமும் இலை தெரியாமல் காய்க்கத் தொடங்கின. அந்த மரங்கள் நிற்குமிடத்துக்கு முதலில் உக்கிய குப்பைகள் தாழ்க்கப்பட்டதே காரணம்.*

*இரண்டு மரங்களும் 12 மாதமும் தொடராகக் காய்க்கத் தொடங்கின. எலுமிச்சம் பழம் ஒன்று ரூபா 50 வீதம் நாளொன்றுக்கு (50 x 100) ரூபா 5,000 வருவாய் வந்துகொண்டிருந்தது. தோடம்பழங்கள் விடுதி மாணவர்களுக்கே ஆளுக்கு ஒவ்வொன்றாகக் கொடுக்கப்பட்டன. அதன் கொட்டைகளை சாம்பல் பூசி வேறு வேறு சாடிகளில் போட்டு வைத்துச் சிறு சிறு கன்றுகளை வளர்க்கத் தொடங்கினர்.*

*அவர்களது முயற்சிக்கு நிலப்பரப்புத்தான் போதாமல் இருந்தது. அதனால் ரின்கள் ஏதாவது கிடைத்தால் அவற்றைச் சேகரித்து அதில் எலுமிச்சங் கன்று, தோடங்கன்று, மாதுளங்கன்று, பாக்குப்*

*புதைத்துக் கமுகங் கன்று, நாவல் கொட்டைகளைப் புதைத்து வைத்து நாவல் கன்று, விழுகிற செத்தல் தேங்காய்களை நிலத்தில் கிடங்கு செய்து முளைக்கப் போட்டு வைத்து- அவை குருத்து வைத்து 4, 5 இலைகள் முளைத்தவுடன் ரூபா 300 வீதம் வாரத்தின் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமைகளில் தங்களின் ஆட்டோவில் (திடீரென யாருக்காவது சுகயீனம் வந்தால், வைத்தியசாலைத் தேவைக்கும் கடை, சந்தை தேவைக்கும் வாங்கிய ஆட்டோதான் அது. பெறுமதி ரூபா 400,000) ஏற்றிச் சென்று விற்றனர்.*

*நல்லப்புவின் ஆலோசனைப்படிதான் இந்த ஆட்டோ வாங்கப்பட்டது. தான் செய்கை பண்ணி வளர்த்த கன்றுகளை விற்பனை செய்த பணத்தை வரவுப் பக்கத்தில் எழுதிக்கொண்ட நல்லப்பு, தனது ஆடு வளர்ப்புப் பெரிய வருவாயைத் தந்ததாகவும் அதன் வருவாயில்தான் ஆட்டோ ஒன்று வாங்கப்பட்டு நிலையத்துக்கு நிரந்தரமான உதவியாக இருக்கிறது என்றும் வருடாந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டார். 'அநாதைகளுக்கு உதவுவது ஆண்டவனுக்கே சமர்ப்பணம்' என்று தான் நல்லப்பு வாழ்கிறார். வீடு வாசலோ, மனைவி மக்களோ கிடையாத நல்லப்பு தனது நித்திரை நேரம் போக மற்றைய நேரம் முழுவதும் ஆடு வளர்ப்பு, தோட்ட வேலை, இரவில் பன்னவேலை என்று சதா நேரமும் விடுதியின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தி வந்தார்.*

*அவர் இப்படியே காலம் முழுவதும் உற்சாகமாக உழைக்க முடியுமா? வயோதிபம், இயலாமை என்ற நிலைகளைச் சந்தித்துத் தானே ஆகவேண்டும்? அதனால் நிர்வாகம் அவரது பெயரில் ஒரு சிறு தொகைப் பணத்தை இருப்பில் ஒதுக்கி வைத்திருக்கிறது. தனது பிற்காலத்துக்கோ தள்ளாமை வரும் போதோ தேவைப்படும் என்று ஒரு சதத்தையாவது அவர் பதுக்கி வைக்கவில்லை. இப்படி விசுவாசியான ஒரு சீவன் எங்கே வந்து கிடைக்கப்போகிறது? தற்போது 40 வயதை எட்டியிருக்கும் நல்லப்பு இன்னும் 20 வருடங்கள்தான் ஓடியாடி வேலைகளைச் செய்ய முடியும்! இவர் இல்லாத காலம் இவ்வளவு வேலைகளையும் யார் இப்படி விசுவாசமான மனதுடன் செய்யப்போகிறார்கள் என்று நிர்வாகத்துக்கு ஒரு கவலை வந்துவிட்டது.*

*இதுபற்றி அவரிடம் ஒருநாள் கலந்து பேசினார்கள். "நல்லப்பு! நீங்கள் சுகதேகியாக இருக்கும் போதே இப்ப நீங்கள் செய்கிற இவ்வளவு வேலைகளையும் பொறுப்புணர்ச்சியோடு செய்யக்கூடிய ஒரு ஆளை நீங்கள் தயார்ப்படுத்த வேண்டும்" என்று கூறினார்கள்.*

அதற்கு அவர், “எனக்கும் அந்த இடத்துக்கு ஒரு கெட்டிக்காரனைக் கொண்டு வரவேண்டும் என்பது ஆவல்தான். அதற்கு இங்கே வளர்கிற ஒரு அநாதைப் பையனைத்தான் தெரிவு செய்ய வேண்டு மென நினைத்திருக்கிறேன். ஏனென்றால், வெளியில் இருந்து வருபவன் தனது சகோதரர்கள், உறவுகள் என்ற பந்த பாசங்களுடன் வருவான். வந்தால், அவனுக்கு இந்தப் பொதுப் பணத்தில் ஆசை உண்டாகிவிடும். அது இயற்கைதான்.

ஆகவே, இங்கேயே வளரும் பிள்ளைகளில் ஒருவரை இப்பணி யில் ஈடுபடுத்தத் தயார்ப்படுத்துவதே சிறந்தது. இப்பிள்ளைகளுள் பாலச்சந்திரன் என்ற பதினைந்து வயதுப் பையன், ஒருநாள் நான் களைத்துப் போய்த் தாழ்வாரத்தில் படுத்திருப்பதைக் கண்டு பதறி யடித்து ஓடிவந்து விசிறியால் விசிறி, தண்ணீர் பருக்கி, வியர்வையைத் துடைத்து விட்டார்.

இரக்கமான பிள்ளை அவர். ‘நல்லப்பு... நல்லப்பு...’ என்று கூப்பிட்டு, ‘ஏதும் தேவையென்றால் என்னைக் கூப்பிடுங்க. நானும் உங்களைப் போல ஆட்டோ ஓட்டப் பழகினால், உங்களுக்கு உடம்பு முடியாத நாட்களில் நானும் கூட வர முடியும் தானே!’ என்று சொல்லியிருந்தார்.

அதற்கு நான், ‘தம்பீ! உங்கடை படிப்புக் கெட்டுவிடும்’ என்று கூற, ‘ஞாயிறிலே மாத்திரம் தானே சந்தை வியாபாரத்துக்கு வெளியே போகிறம். நான் படித்துப் பெரியவனாக வளர்ந்தாலும், என்னை வளர்த்து ஆளாக்கிய இந்த நிலையத்துக்குத்தான் சேவை செய்வேனே தவிர, சுயநலமாக இந்த இடத்தை விட்டு வேறு எங்கேயும் போக மாட்டேன் நல்லப்பு! இது சத்தியம்!’ என்று கூறியிருக்கிறார்.

அவர் நன்றாக நீச்சல் அடிக்கவும் பழகியிருக்கிறார். அத்துடன், இளநீர் தேவைப்படும் நேரத்தில் தென்னை மரமேறி செவ்விளநீர் பறித்துத் தருவார்.

அத்துடன், ‘நல்லப்பு, எதற்கும் தேவைப்படும். 20 அடி உயரத்தில் ஒரு பெரிய ஏணியும் 12 அடி உயரத்தில் ஒரு சிறிய ஏணியும் நல்ல வைரமான பனை மரத்தில் செய்வியுங்கள். அது எதற்கும் உதவும்.

அன்றொருநாள் ஆட்டுக்குட்டி ஒன்று ஓடிவந்து கிணற்றுக் கட்டில் ஏறி நின்றது. தற்செயலாகத் தவறி விழுந்தால் என்ன ஆகியிருக்கும்? எதற்கும் முன் எச்சரிக்கையாகக் கிணற்றுக்கு ஒரு நெற் மூடி அவசியம் போட வேண்டும்’ என்று கூறினார்.

மற்ற மாணவர்கள் யோசிக்காத முன்னோடி யோசனையை அவர் கூறியதிலிருந்து அவர் இந்த நிர்வாகத்தில்- இதன் வளர்ச்சியில் எவ்வளவு கரிசனை- அக்கறையோடு இருக்கிறார் என்பதனைக் கண்டுகொண்டேன். அந்தப் பிள்ளையைப் பார்க்கும் போது, என்னையே நான் பார்க்கிற ஒரு அன்பு ஏற்படுகிறது" என்றார்.

நல்லப்புவின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் உன்னிப்பாகக் கவனித்து வளர்ந்த பாலச்சந்திரன், தனது ஒவ்வொரு வேலைகளையும் 'செய்வன திருந்தச் செய்ய வேண்டும்' என்ற இலட்சியத்தில் உறுதியாக இருந்தான்.

பருமரமாக விளங்குவது அந்த அநாதைச் சிறுவர்கள் பராமரிப்பு நிலையம். பருமரத்தைச் சுற்றிய பல்லியும் பாழ் போகாது என்பது ஒரு பழமொழி. அநாதைச் சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்குச் சேவை செய்வதற்குக் கொடுத்து வைத்துப் பிறக்க வேண்டும் என்று அங்கே வளரும் குழந்தைகள், சிறுவர்கள் மனதில் நன்கு நல்லறிவை வளர்க்கும் முகமாகச் சிறுவன் பாலச்சந்திரனின் ஒவ்வொரு நடவடிக்கையும் இருக்கும்.

ஒருநாள் நல்ல மழை பெய்தது. அந்த மழை நீரானது அவர்களது விடுதியின் முன்பாக வெள்ளம் போல் தேங்கி நின்றது. அதிக நேரம் தேங்கினால் அங்கு சேறாகி நடக்க முடியாமல் இருக்குமென்பதால், பாலச்சந்திரன் ஒரு மண்வெட்டி எடுத்து வந்து அந்த வெள்ளத்தை வழித்து வாய்க்கால் வழி ஓடவிட்டுச் சரி செய்து வைத்தார்.

எந்த இடத்தில் எந்தக் குறைபாடு தென்படுகிறதோ அதனைக் கண்ட மாத்திரத்திலேயே சரி செய்தால்தான் அவரது மனம் நிம்மதிப்படும். 'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை' என்பது பழமொழி. இந்தப் பழமொழியையும் 'தன்னுயிர் போல மன்னுயிரையும் மதி' என்ற பழமொழியையும் விடுதிச் சுவரில் எழுதி வைத்திருந்தார்.

அந்தக் கட்டிடத்தின் அயலில் ஒரு பெரிய வேம்பு நிற்கிறது. அதன் சருகுகள் மேற்கூரை மேல் விழுந்து கரையோரம் மழை நீர் வழிந்தோடப் பூட்டியிருக்கிற பீலிகளை அடைத்துக் கிடந்தன. அவற்றையும் மாதம் ஒருமுறை ஏணியின் உதவி கொண்டு மேலே ஏறிக் கூட்டித் துப்புரவு செய்வார். சருகுகளைத் தான் மேலே எடுத்துச் சென்ற உரப்பைக்குள் போட்டு எடுத்து வந்து தேவைப்படும் மரங்களுக்குப் பசளையாக வெட்டித் தாழ்ப்பார். அவர் வாயால் எந்த வேலையையும் மற்றவர்களுக்கு ஏவிச் செய்விக்கிற வழக்கத்தை வைத்திருக்கவில்லை.

அந்த வேப்பமரம் மாத்திரமல்ல அதன் பக்கத்திலுள்ள மா மரத்திலும் குருவிச்சை எனப்படும் ஒட்டுண்ணி படர்ந்து மரங்களின் சத்தை உறுஞ்சிக்கொண்டிருந்தது. அந்தப் பெரிய ஏணியை மரத்திலே சாத்தி அதில் தான் ஏறிக்கொண்டு, கைக்கு எட்டிய கொப்புகளை கத்தியாலும் எட்டாத கொப்புகளை மெஷின் வாளாலும் அறுத்தெடுத்து ஆடுகளுக்கு இரையாகப் போடுவார்.

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்' என்பது ஆன்றோர் வாக்கு. அந்த அநாதைச் சிறுவர்கள் விடுதியில் வருடா வருடம் செயற்றிறனாளிகளைக் கௌரவிப்பார்கள். இந்தச் செயற்றிறன் விருது வருடா வருடம் பாலச்சந்திரனுக்கே கிடைக்கிறது.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசிய நல்லப்பு, "பிள்ளைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் பாலச்சந்திரனின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி இந்த நிலையத்திற்கு மனமுவந்து சேவை செய்ய முன்வர வேண்டும். இப்படியான ஒரு நிலையம் அமைக்கப்படாதிருந்தால், நீங்கள் இப்போ எந்தத் தெருவிலோ கையில் பிச்சைப் பாத்திரமேந்துகிற அநாதைகளாக அழுக்கு உடையும், தூங்க இடமின்றித் தெருவோர சாக்கடை அயலில் உடம்பெல்லாம் சொறி, சிரங்கு நோய் பிடித்துப் பார்ப்போர் காறி உமிழும் ஒரு அவல வாழ்வு வாழ்ந்து இறந்து போகும் நிலையை எய்தியிருப்பீர்கள்.

அநாதைகளாகிய எங்களை அன்புடன் அரவணைத்து, அன்னமிட்டுப் பராமரித்துப் பாதுகாக்கும் இந்த நிலையத்தை நாம் அனைவரும் பேணிப் பாதுகாக்க வேண்டும். நன்றி உணர்வுடன் வளர வேண்டும். மனதிலே சேவை உணர்வானது மற்றவர்கள் சொல்லாமலே தானாக வரவேண்டும். அறியாமலா ஔவைப் பிராட்டியார், 'ஏவா மக்கள் மூவா மருந்து' என்று கூறியருளியிருக்கிறார்?

சுத்தமான உடைகள், சுத்தமான உணவுகள், சுத்தமான உறைவிடம் இவ்வளவும் எமக்குக் கிடைக்கிறது என்றால், கருணை உள்ளம் படைத்த பெரியார்கள் சிலரால் ஆக்குவிக்கப்பட்ட இந்த நிலையம் தான் அதற்குக் காரணம். இந்நிலையம் என்றென்றும் மென்மேலும் வளர்ந்து அநாதைகளுக்குச் சேவை செய்ய வேண்டும். அதற்கு உங்களால் இயன்ற அனைத்து ஒத்துழைப்புகளையும் நீங்கள் செய்ய வேண்டுமென உங்கள் எல்லோரையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்" என்றார்.

உரையைச் செவிமடுத்த இரக்க சிந்தையுள்ள மாணவர்கள் கண்ணீர் விட்டபடி ஓடி வந்து நல்லப்புவைக் கட்டித் தழுவி அவரது காலடியைத் தொட்டு, "எங்கள் அறிவுக் கண்களைத் திறந்த அண்ணலே!" என்று கதறி அழுதார்கள். இதைக் கண்ட வருண பகவானும் இரங்கி மழையாகப் பெய்தார்.

## 20

திருவடிநிலை தீர்த்தக் கரையிலிருந்து அரை மைல் தூரத்தில்தான் இந்தக் காட்டுப்புலம் அநாதைச் சிறுவர்களின் இல்லம் அமைந்திருக்கிறது. இது காட்டுப்புலம் ஐயனார் கோவிலுக்கும் வாகை வைரவர் கோவிலுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில்தான் உள்ளது. அங்குள்ள கிணற்று நீர் நன்னீராக வந்து வாய்த்தது அதிசயத்திலும் அதிசயமே! நிலமானது உப்புத்தன்மை வாய்ந்ததாக இருந்ததில் வாழை மரங்களைத் தவிர மற்றைய வான் பயிர்கள் எல்லாம் மிகச் செழிப்பாக வளர்ந்தன. செய்பயிர்களில் தென்னை மரங்களுக்கு உப்பு மண் உவப்பாக இருக்கிறது.

அழகுக்காக வைக்கப்பட்ட பூமரங்கள் யாவும் நிலத்தில் வைக்காமல் பசளை மண் கொண்ட சீமெந்துச் சாடிகளில் வைக்கப்பட்டன. மரங்களை அரியும் கிடங்கு வைத்திருப்பவர்களிடம் கேட்டு வாங்கி வந்த மரத்தூசுகளை இடித்துப் பவுடராக்கி அவற்றையும் போட்டும் நல்ல செழுமையான பூக்களை மலரச் செய்தார். தென்னை மரங்களுக்குக் கடற்கரைச் சாதாளை தாழ்ப்பிப்பதும் பூங்கன்றுகளுக்கு இயற்கை உரம் போட்டு அழகிய பூக்களைப் பூக்க வைப்பதும் நல்லப்புவுக்குக் கைவந்த கலையாக இருந்தது.

மழைக் காலத்தில் ஏற்கனவே தான் கட்டி வைத்திருந்த மழை நீரைச் சேகரிக்கும் பாரிய தொட்டியிலிருந்து பூங்கன்றுகளுக்கு நீர் தெளித்து விடுவார். பார்ப்பவர்களுக்கு ஒரே ஆச்சரியம்!

"எப்படி உப்புக் காற்று வீசும் கடற்கரைக்குக் கிட்ட உள்ள காட்டுப்புல அநாதைகள் இல்லத்தில் பூஞ்சட்டிகள் இப்படி மதாளித்துப் பூத்துச் சொரிகின்றன?" என்று. சிலர் நேரில் வந்து

நல்லப்புவிடம் பூமரப் பராமரிப்புப் பற்றி ஆலோசனை கேட்கத் தவறமாட்டார்கள். "உங்கடை முறைப்படி செய்தாலும் எங்கடை பூச்சாடிகள் செழுமையாக இருப்பதில்லையே" என்று கவலையுடன் கூறுவார்கள்.

அவர் மற்றவர்களிடம் கூறாத இரகசியம் ஒன்று இருக்கிறது. அதாவது, வேப்பம் கொட்டைகளை நன்றாகக் காயவிட்டு அதனை உரலிலிட்டு மாவாக இடித்து பூஞ்சட்டிகளுக்குத் தூவுவார். அதனால் எந்தவிதக் கிருமித் தாக்கமும் பூங்கன்றுகளுக்கு எற்படாது. வெள்ளை நிறப் பூஞ்சணம் கண்டால், சீமைக் கிளுவை இலைகளைப் பறித்து அவற்றை உரலில் இட்டுத் துவைத்து அதன் சாற்றைப் பூமரங்களுக்குத் தெளிப்பார். இந்தச் செயல்முறைகளை அவர் யாருக்கும் தெரிவிப்பதில்லை. பாலச்சந்திரனுக்கு மாத்திரம்தான் தெரியும்.

'பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்' என்பார்கள். நேருஜி அவர்கள் தான் வளர்த்த ரோஜா செடிகளுடன்தான் காலைப்பொழுதில் கதைப்பாராம். அதைப்போல தானும் பூமரங்களுடன் கதைப்பதும் தளிர்களை ஒடித்து ஒரு சிறிய கண்ணாடிப் பாத்திரத்தில் வைத்து அதனைக் காற்றுப் புகாவண்ணம் இறுக்கமான மூடியால் மூடி அதன் மேற்புறத்தில் தண்ணீர் தெளித்து, வேரோட வைத்து விடுவாராம். அப்படி வேரோடி வளர்ந்த கன்றுகள் புதிய சாடிகளில் ஊன்றப்பட்டுப் பேணி வளர்க்கப்படும்.

பல நிறங்களில் அழகுடன் வளரும் ரோஜா செடிகள், செவ்வரத்தை, கரடி முல்லை, அடுக்குச் செவ்வரத்தை, வெள்ளை, மஞ்சள், ஒரேஞ், ஊதா வண்ண ஒற்றைச் செவ்வரத்தையெனப் பலவித மலர்களுடன் நந்தியாவட்டை, நித்தியகல்யாணி, கனகாம்பரம் ஆகிய மலர் வகைகளை நல்லப்புவின் மலர்த் தோட்டத்தில் காணலாம். மல்லிகை, பவளமல்லிகை ஆகியவை பெரிய கிடங்கு வெட்டப்பட்டுப் போதிய பசளைகள் தாழ்க்கப்பட்டு நிலத்தில் ஜாடியுடன் புதைக்கப்பட்டன. உப்பு மணல் பிரதேசத்தில் நல்லப்பு எப்படி மல்லிகைப் பந்தரைப் படர வைத்தார் என்று பார்ப்போர் அதிசயப்பட்டனர்.

அதேபோல இரண்டு வருடங்களில் காய்க்கிற செவ்விளநீர், சூரியகாந்தி, மாலைதீவு ஆயிரங்காய்ச்சி ஆகிய பலவித தென்னங்கன்றுகளைத் திருநெல்வேலி கிருஷிப் பயிற்சிக் கல்லூரியில்

வாங்கி வந்து, அதற்கேற்ற பசளைகளையும் இட்டு நாட்டி வளர்த்தார். அவற்றைவிட வேலியின் நாற்புறமும் கருக்குப் பீர்க்கங்கொடி, பசன்புறூட் கொடி, வெள்ளரிக்கொடி, தர்பூசணிக்கொடி, மஞ்சள் பூ பெரும் பூசணிக்கொடி இவற்றுடன் கறிமுருங்கை, சண்டி, முசுட்டை, குறிஞ்சா ஆகிய மரங்களையும் கொடிகளையும் உற்பத்தி செய்து அங்கு படிக்கும் மாணவர்களுக்கு வாரம் ஒருமுறை 'வறை' எனப்படும் இலைக் கறியை உண்ண வசதி செய்து கொடுத்தார்.

ஆட்டு வளர்ப்பால் வந்த வருவாயில் ஆட்டோ வாங்கியது போல பொருட்களைச் சந்தைப்படுத்த ஒரு தட்டி வானும் வாங்க வேண்டும். கைவசம் இன்னும் கொஞ்சம் காசு சேர வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தார். அதன்படி செயலிலும் செய்து காட்டினார்.

காலப்போக்கில் காசும் சேர்த்து வானுக்குள்ளே இருபக்கமும் வாங்கு போன்ற இருக்கை பொருத்தப்பட்டு, மேற்புறத்துக்கு மழையோ, வெயிலோ தாக்காத வண்ணம் மேற்புறம் மூடு வளைவும் பொருத்தப்பட்டது. வைரமான இரும்புக் கம்பிகளின் மேல் தடித்த மெழுகு சீலை போன்ற ஒரு பாதுகாப்புக் கூரை செய்யப்பட்டது. இருபுறமும் நெற் அடிக்கப்பட்டு ஏறி இறங்க இரு படிகள் கொண்ட பாதங்களும் பூட்டப்பட்டன.

ஒருநாள் இந்த அநாதைச் சிறுவர்கள் விடுதியிலிருந்து படிப்பதற்காகப் பாடசாலை செல்லும் மாணவன் ஒருவனின் புத்தகப் பைக்குள் இன்னொரு மாணவனின் கொம்பாஸ் பெட்டியும் 20 ரூபா காசும் சக மாணவன் ஒருவன் வைத்துவிட்டான். தனது கொம்பாஸ் பெட்டியைக் காணாத மாணவன் ஆசிரியரிடம் முறைப்பாடு செய்தான். ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் புத்தகப் பைகளையும் பரிசோதித்த போது, விடுதியிலிருந்து அங்கு படிக்க வந்திருக்கும் பரமேஸ்வரன் என்ற மாணவனின் புத்தகப் பைக்குள் இருந்து அதனைக் கண்டெடுத்தார்.

அதனை வெளியே எடுத்த ஆசிரியர் பரமேஸ்வரனை அதட்டவில்லை. ஏனென்றால், அநாதை விடுதி மாணவர்கள் உத்தமர்கள். ஆசிரியர் தங்கள் வகுப்பறையிலுள்ள கண்காணிப்புக் கமரா மூலம் உன்னிப்பாகக் கவனித்தார். அசோகன் என்ற ஒரு பணக்கார வீட்டு மாணவனே இந்த இழிசெயலைச் செய்தமையை கமரா காட்டியது. வகுப்பாசிரியர் ஆனந்தன் அவர்கள் அசோகனை மாத்திரம் மறித்து வைத்துவிட்டு, "நீர் பாவம், பரமேஸ்வரனைக் குற்றவாளியாகச் சாட்டுவது எவ்வளவு பாவமான செயல் என்று

உமக்குத் தெரியாதா? இனிமேல் இப்படியான இழிசெயல்களை மனதாலும் நினைக்கக்கூடாது. நீர் தொடர்ந்தும் இப்பள்ளியில் படிக்க வேண்டும் என்பதற்காகவே உம்மை மாத்திரம் தடுத்து வைத்திருந்து இதைக் காண்பித்தேன். இனிமேல் இந்த மாதிரியான நீதிக்கு மாறான செயல்களை மனதாலும் நினைக்கக்கூடாது" என்று புத்திமதி கூறி அனுப்பிவைத்தார். அசோகன் தன் மனதுக்குள், "இந்த கமரா இல்லாவிட்டால் நானும் சுத்தமானவனே" என்று கூறிக்கொண்டான்.

இந்த அநாதைச் சிறுவர்கள் விடுதி கட்டி மாணவர்கள் ஒழுக்கசீலர்காளக வாழ்ந்து வருகையில், அவர்கள் அனைவரும் நல்லப்புவின் 40வது பிறந்தநாளைக் கொண்டாடத் தீர்மானித்தனர்.

கிராம மக்களையும் அழைத்துப் பகல் உபசார விழா, இரவு கலை நிகழ்ச்சி என நடத்திக் காட்டினர். சமரன், பாலச்சந்திரன், பூங்கோதை ஆகியோரின் வழிகாட்டல் இன்றியமையாததாய் அமைந்தது. தாங்கள் நல்லப்பு மீது வைத்திருக்கும் நன்றி மறவாமையைக் காட்ட, மன்னன் அரிச்சந்திரனைத் தேடி மந்திரி சத்தியகீர்த்தி என்பவர் சுடுகாடு வரை வந்ததையும் அரிச்சந்திரன் சாகும் வரை ஒரு பொய் தன்னும் சொல்லாமல் வாழ்ந்ததையும் அதற்காகச் சுடலை காக்கும் தொழிலை மேற்கொண்டதையும் அனைத்து மக்களும் இதுவரை அறிந்திராத விபரமாகக் காட்டப்பட்டன.

பாலச்சந்திரன் இந்த விடுதிக்கு வந்து சேர்வதற்கு முன்னர் ஒரு சிவராத்திரி விரத நாளில் காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலடியில் இந்த சம்பூர்ண அரிச்சந்திரா நாடகத்தைப் பார்த்திருக்கிறார். அவர் பருத்தித்துறை- மாதனை மகாலிங்கம் குழுவினருடன் தொடர்புகொண்டு கதைத்த பொழுது அவர்கள், "ஒரு நல்ல நோக்கத்தோடு அநாதைகள் இல்லம் சுழிபுரத்தில் இயங்குவது எமக்குக் கேட்கும் பொழுதே ஆனந்தமாக இருக்கிறது. வேறு இடங்கள் என்றால் நாங்கள் சகல கலைஞர்களுடைய சம்பளம், வாகனப் பிரயாணச் செலவுகள் யாவும் வாங்கித்தான் செயலில் இறங்குவோம். ஆனால், இது ஒரு நல்ல சேவை நோக்கத்துடன் இயங்கும் நிலையமாக இருப்பதனால் எங்கள் வாகனத்திலேயே எம்மை ஏற்றி, திரும்பவும் இறக்கும் வேலையையும் மேற்கொள்வதால் எமக்கு எவ்விதக் காசும் தரவேண்டாம். ஆனால், சீன் மற்றும் பக்க வாத்தியம் இவற்றை நீங்களே ஒழுங்கு செய்து- எமது இரவு உணவையும் நீங்களே தந்துதவ வேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர்.

அதன்படி தொல்புரம் வீரசிங்கம் என்பவரிடம் சீனும் மூளாய் மகேந்திரம் குழுவினரின் பக்கவாத்தியமும் கிடைத்தன. குறிப்பிட்ட சிவராத்திரி தினத்தன்று நல்லப்புவின் 40வது பிறந்ததின விழாவை யொட்டி சம்பூர்ண அரிச்சந்திரா என்ற நாடகம் சிறப்புற நடத்திக் காண்பிக்கப்பட்டது. ஒவ்வொரு உருக்கமான காட்சிகளும் மக்கள் மனதைத் தொட்டன.

முனிவர் விசுவாமித்திரரின் மண் ஆளும் ஆவல், "அரண்மனை வாழ்வை முனிவருக்குக் கொடுத்துவிட்டு அழுக்குத் துணியுடன் வெளியேறும் மன்னன், அரசி சந்திரமதி குழந்தை லோகிதாசனை எரிப்பதற்காக ஓடி வந்த காட்டுத்தீ இவை யாவற்றையும் கடந்து, மனைவியையும் மகனையும் ஒரு அந்தணனுக்கு விற்றதையும் அதன் பின்னர் சுக்கிரனின் கூலி கொடப்பதற்காகத் தன்னைத் தானெ விலை பேசி வீரவாகு என்ற சுடலை காப்பவருக்கு விலைப்பட்டதையும் பார்த்த சகல பார்வையாளருக்கும் துக்கம் தாங்க முடியவில்லை. அதில் ஓரிடத்தில் மன்னன் அரிச்சந்திரனைத் தேடி நன்றி மறவாத மந்திரி சத்தியகீர்த்தி, "அண்ணலைத் தேடி அலைகிறேனே! அல்லும் பகலும் அன்னம் தண்ணி இல்லாமல் அண்ணலைத் தேடி அலைகிறேனே!" என்று பாடவும் அங்கு சுடலை காக்கும் ஊழியனாக அழுக்கு உடையும் கையில் பிணத்தைப் புரட்டிவிடும் கோலும் தாங்கி தலையில் ஒரு கறுப்புத் துணியும் கட்டித் தோற்றமளிக்கும் மன்னனை அடையாளம் காண முடியாமல் இருக்கும் மந்திரியின் தேடலைத் தாங்க முடியாத மன்னன், "அப்பனே! சத்தியகீர்த்தி! அரிச்சந்திரன் நானே கண்டாய்! ஒப்பிலா உன்னைப் போல உலகினில் யாரும் உண்டோ?" என்று கட்டிப் பிடித்து அழ, பார்வையாளர் அத்தனை பேரின் கண்களும் கண்ணீரால் நனைந்தன. அதிலிருந்து அவர்கள் விடுபட வெகுநேரம் பிடித்தது.

பாம்பு தீண்டி இறந்த தனது மகனை எரியூட்டுவதற்காகச் சந்திரமதி சுடலைக்குச் சென்று, அங்கு எரிந்த குறைக்கொள்ளிகளைப் பொறுக்கி அந்தச் சிதையில் மகனின் உடலை வைத்துத் தீ மூட்டினார். அதனைக் கண்ணுற்ற அரிச்சந்திரன் ஓடிவந்து, சிதையைக் காலால் உதைத்து, "எனக்குத் தரவேண்டிய காப்பணம், முழத்துண்டு, வாய்க்கரிசி என்பனவற்றைத் தராமல் பிணத்தை எரிக்க விடமாட்டேன்" என்றான்.

அப்பொழுது சந்திரமதி தான் அநாதை என்று கூற, "அடியே கள்ளி! பொய் சொல்லாதே! உன்னுடைய கழுத்திலே மாங்கல்யம் இருக்கிறதே!" என்றான் அரிச்சந்திரன். அந்தச் சொல்லைக் கேட்ட

*சந்திரமதி துடித்துப் பதைத்து, தனது கணவன் அரிச்சந்திரனைத் தவிர வேறு எவரின் கண்களுக்கும் தெரியாத தனது மாங்கல்யம் அந்தச் சுடலை காப்போன் கண்களுக்குப் பட்டதே என்று கூறி அழுதாள்.*

*அதனைக் கேட்ட அரிச்சந்திரன், சந்திரமதியே தனது மனைவி என்று தெரிந்துகொண்டான். (பிறக்கும் பொழுது சந்திரமதியுடன் கூடப் பிறந்ததே இந்த மாங்கல்யம். அது அவளுக்குக் கணவனாக வரவேண்டியவனின் கண்களுக்கு மாத்திரமே தெரியும் என்று ஒரு அசரீரி கூறியது.)*

*அரிச்சந்திரனின் வேண்டுகோளை நிறைவேற்ற சந்திரமதி தனது எசமானனாகிய பிராமணன் வீட்டுக்குச் செல்கிறார். வழியில் யாரோ திருடர்களால் அரண்மனையிலிருந்து எடுத்துவரப்பட்ட அரசனின் குழந்தையின் கழுத்திலிருந்த நகையைத் திருடி அதனைக் கொன்று வழியில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். அந்தக் குழந்தையைத் தனது குழந்தை என்று எடுத்து வைத்து அழும் போது அவளை அரச காவலாளிகள் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டனர்.*

*அரசனின் கட்டளைப்படி சுடலையில் அரிச்சந்திரனே சந்திரமதியை வாளால் வெட்டுப்படியான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அரிச்சந்திரன் சந்திரமதியை வெட்டுவதற்காக ஓங்கிய வாள் அவளுடைய கழுத்தில் மாலையாக விழுந்தது. சிவபெருமான் உமாதேவியார் சகிதம் இடப வாகனத்தில் காட்சியளித்து, "ஒருநாளும் பொய் சொல்லாத உனக்கு உன் இராட்சியமும் உன் குழந்தையும் கொல்லப்பட்ட அரசனின் குழந்தையும் எல்லாம் பழையபடி கிடைப்பதாகுக" என்று கூறியருளினார்.*

*அவ்விடத்திற்கு வந்த விசுவாமித்திர முனிவர், "அன்று ஒருநாள் தேவசபையிலே பூலோகத்தில் யாராவது பொய் சொல்லாதவன் இருக்கிறானா என்ற கேள்வி எழுந்த பொழுது, நான் ஒரு மானிடனைக் கொண்டு பொய் சொல்லுவிக்கப் பண்ணுகிறேன் என்று விடுத்த சவாலின் பிரதிபலிப்பே இத்தனை சோகங்களையும் ஏற்படுத்தியது.. முன்போலவே நீ உன் அரசைப் பெற்று உன் தேசத்தில் வாழ்வாயாக" என்று அரிச்சந்திரனிடம் கூறினார் விசுவாமித்திரர். (திரை விழுந்து மீண்டும் திரை நீக்கப்பட்டதும் அரிச்சந்திர மன்னன், சந்திரமதி, குழந்தை லோகிதாசன், மந்திரி சத்தியகீர்த்தி ஆகியோர் அரண்மனை உடுப்புக்களுடன் காணப்பட்டனர். பக்கவாத்தியக்காரர் அனைவரும் மங்களப் பேரிகை முழங்கினர்.)*

“பார்த்தால், இப்படியான அறிவுரை கூறும் நாடகம் எல்லோ பார்க்க வேணும்” என்று கூறி ஒவ்வொரு கலைஞரையும் கை கூப்பி வணங்கி, அவர்களுக்கு விடை கொடுத்தனர் விடுதி மாணவர்கள். இறுதியில் அத்தனை கலைஞர்களையும் தமது வாகனத்தில் ஏற்றி, “வேண்டாம் வேண்டாம்” என்று அவர்கள் கூறிய போதும், ரூபா பத்தாயிரத்தை மகாலிங்கம் அவர்களின் கைகளுக்குள் வைத்து பருத்தித்துறை மாதனைக் கிராமத்தில் அவர்களைக் கொண்டு சென்று விட்டனர்.

இதனைத் தொடர்ந்து பல ஆலயங்களில் இரவு நிகழ்ச்சிக்கு சின்னமேளம் என்று சொல்லப்படும் நடன மாதர்களை அழைக்காமல் இதுபோன்ற நாடகங்களை அழைத்து, பக்தர்களின் மனதில் மறுமலர்ச்சி உணர்வை உண்டாக்கினர்.

இந்த அநாதைகள் விடுதியில் ஒரு இரண்டு பரப்பு நிலத்தைத் தனிமைப்படுத்தி நான்கு அடி ஆழத்தில் உப்பு மணலைத் தோண்டி எடுத்துவிட்டு வரத்து வெள்ளம் உள்ளே வராமல் சுற்றிவரக் கீழே நான்கு அடி உயரத்தில் சீமெந்து பூசிச் செம்பாட்டு மண்ணை லொறிகளில் இறக்குவித்தார் நல்லப்பு. “இது என்ன பயிர் செய்வதற்குத் தயார்ப்படுத்துகிறீர்கள்?“ என கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டவர்களுக்கு, “இரண்டு முந்திரிகை மரங்களும் பல நிற ரோஜா செடிகளும் வளர்க்கப்போகிறேன்” என்று பதில் கொடுத்தார் நல்லப்பு.

கிடாய் ஆடுகள் விற்ற இலட்சம் ரூபா பணம் கையிருப்பிலே இருந்தது. மாரி காலத்திற்கு முன்னர் சகல வேலைகளும் துரிதகதியில் நடைபெற்றன. 3 அடி ஆழத்திற் செம்பாட்டு மண் போட்ட பின்னர் ஒரு அடி ஆழத்திற்கு மாட்டெருவும் உக்கிய வேப்பம் சருகும் கலந்து போடப்பட்டன. திருநெல்வேலி கிருஷிக பாடசாலையில் இரண்டு சிவப்புப் பழம் காய்க்கும் கொடி முந்திரிகைச் செடிகளையும் ரோஜா செடிகளையும் வாங்கி வந்து நிலத்தில் நாட்டினார். இரண்டு கரையோரமும் முந்திரிகைக் கொடிகள் படர்வதற்கு கொழுகொம்பும் நாட்டி மேலே பச்சை நிற நெற்றுகளும் பந்தராக்கி வைத்தார். பாலச்சந்திரன் மாத்திரம் நல்லப்பு தனது வேலைகளில் தோல்வி காண மாட்டார் என்று நம்பினார். தொடர்ந்தும் அவர் நல்லப்புவுக்கு ஊக்கம் கொடுத்தார்.

அங்கு தங்கிப் படிக்கும் மாணவர்களுக்குக் கோவில் அன்னதானச் சாப்பாடு என்றால் மிகவும் பிடிக்கும்.

பக்கத்திலுள்ள வாகை வைரவர், காட்டுப்புல ஐயனார், பறாளாய் முருகன், பறாளாய் பிள்ளையார், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆகிய ஆலய அன்னதான நிகழ்ச்சிகளுக்கு மாணவர்களை இரண்டு, மூன்று தடவைகளில் ஏற்றி இறக்க இந்த வாகனம் பெரிதும் உதவியது. பெற்றோல் செலவை மரக்கறி விற்பனவுப் பணம் ஈடுசெய்கிறது. அன்னதானம் நடத்தும் அன்னதானச் சபையினருக்கு மனங்குளிர அரிசி மூடைகள், தேங்காய்கள், மரக்கறிகள், விறகுகள் முதலியவற்றை முதல்நாள் சாயந்தரம் கொண்டுபோய்க் கொடுக்கத் தவறமாட்டார் நல்லப்பு. நல்ல தண்ணீரைத் தங்கள் கிணற்றிலிருந்து பெரும் பீப்பாய்கள் மூலம் நிரப்பி அங்கு கொண்டுபோய் அவர்களுக்குக் கையளிக்கத் தவறமாட்டார்.

“நல்லப்பு அண்ணையைப் போல நல்ல மனிதர்கள் வாழ்கிறபடியால் தான் இந்தப் பூலோகம் செழிக்க மழை பெய்கிறது” என்று அன்னதானச் சபையினர் வாழ்த்துவார்கள்.

கமத்தொழில் என்றால் என்ன? கைத்தொழில் என்றால் என்ன? என்று செய்து பழக்கப்பட்டு அந்தத் துறையில் நன்கு பயிற்றப்பட்டிருத்தல் வேண்டும். நல்லப்புக்குப் பூமரங்கள், சாதாரண மரங்கள் வளர்ப்பது மாத்திரமன்றி வாகனத் திருத்த வேலைகளிலும் பரீட்சயம் உண்டு.

சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஆட்டோ, கார், வான் ஆகியவற்றின் இயந்திரங்களில் ஏதும் பழுது வந்துவிட்டால் அவற்றை உடனடியாகப் பார்த்துத் திருத்தும் ‘கொறடு’ முதலிய ஆயுதங்கள் பாவித்து- கிறீஸ் பூசி முன்பிருந்தது போலத் திருத்திச் செய்துவிடுவார். அந்த வேலை நேரங்களில் மாத்திரம் அந்தக் கரிநிறச் சாரத்தை உடுத்திக்கொண்டு வேலை பார்ப்பார். ‘றிப்பயர் செலவு’ மிச்சம்.

சைக்கிளின் சிறிய பாகங்களை ஒரு வேசினுள் மண்ணெண்ணெய் ஊற்றி அதனுள் போட்டு ‘பிறஸ்’களின் உதவியுடன் கழுவி கறள் நீக்கிவிடுவார். பின்னர் அவற்றை ஒரு பழைய பருத்தித் துணியினால் நன்றாகத் துடைத்து முன்பிருந்தது போலவே பூட்டி விடுவார். ‘கண் கண்டால் கை செய்யும்’ என்பதற்கிணங்க ஒருசில நாட்கள் சைக்கிள் திருத்தும் கடை வாசலிலும் கார் கறாஜ் வாசலிலும் செலவழித்த நேரங்கள் இப்போது நல்லப்புவுக்கு சொந்த வாகனங்களைப் பராமரிக்க ‘தன் கையே தனக்குதவி’ என்று செயற்படுகிறது.

நல்லப்பு செய்வதைப் பார்த்திருக்கும் பாலச்சந்திரனும் அப்படியே செய்யக் கற்றுக்கொண்டார். வாகனத்தைச் செலுத்திக்கொண்டு

போகும் வழியில் அது ஏதாவது கோளாறு ஏற்பட்டு நின்றுவிட்டால், அதனை அந்தக் கணமே சரி செய்துகொண்டு பிரயாணத்தைத் தொடர்கிற திறமை ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டியது அவசியம் என்றும் அதற்குரிய ஆயுதங்கள் உடன் இருக்க வேண்டும் என்பதும் அவரது நினைவில் எப்போதும் இருக்கும்.

நல்லப்பு 'காட்டுப்புலம் அநாதைச் சிறுவர்கள் பராமரிப்பு நிலையம்' என்ற ஸ்தாபனத்திற்கு ஒரு பராமரிப்புத் தாயாக விளங்கினார். நாகலிங்கத்தாற்றை அத்தனை பிள்ளைகளின் நல்லுணர்வை அவர்கள் செயற்படுத்த, அதனை இயங்க வைக்கும் உயிர்த்துடிப்பைத் தினமும் வழங்கி வருகிறார். தான் இல்லாக் காலமும் தனது அடியொற்றித் தொடர் சேவையைச் செய்யப் பாலச்சந்திரன் என்ற கடமை வீரனையும் தயார்ப்படுத்தி ஊக்குவிக்கிறார்.

அவர் பாலச்சந்திரனோடு கதைக்கும் போது கூறுவார்: "பாலு, நாங்கள் வாழும் காலம் கொஞ்சம்தான். ஆனால், இந்த அநாதைகள் இல்லமோ காலா காலங்களுக்கும் அழியாமல் சேவை செய்ய வேணுமென்றால், என்ரை வழியொட்டி நீங்கள் வாய்த்தது போல உங்களுக்குப் பிறகு இந்த நிலையத்தின் வளர்ச்சியில் அக்கறை எடுக்கும் ஒரு பிள்ளையை நீங்களே உருவாக்க வேண்டும். அந்தப் பிள்ளைக்கு நீச்சல், வாகனம் ஓட்டல், வாகனத் திருத்த வேலைகள் இவற்றுடன் சுயநலமற்ற சிந்தையும் வேணுமய்யா. அப்படி ஒரு சேவை மனம் படைத்தவரை ஆளாக்குதல் உங்கள் கடமையையா!"

தங்களை முழுநேர ஊழியர்களாக அர்ப்பணித்துக் கொண்ட சமரனும் பாலச்சந்திரனும் பூங்கோதையும், தங்களைப் போன்ற சேவை மனப்பான்மையுள்ள வாரிசுகளைத் தயாராக்க வேண்டுமென்ற ஆவலில் இருந்தனர்.

ஏற்கனவே தாங்களாகவே முன்வந்து சமையல் வேலையில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட விஜயலட்சுமியும் தவபாக்கியமும் கணவனை இழந்தவர்கள். இருவருக்கும் பிள்ளைகள் இல்லை. அதனால் அவர்கள் தங்கள் இறுதி மூச்சு உள்ளவரை மேற்படி நிலையத்திற்காகவே பாடுபடுவோம் என்ற மன உறுதியுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

## 21

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஈழநாடு, உதயன் முதலான பத்திரிகைகளின் நிருபர்கள் இந்த அநாதைகள் விடுதிக்கு வந்து, விடுதியின் நடைமுறைகளையும் சுத்தம் சுகாதார நெறிகளையும் பார்த்து, "காட்டுப்புலத்தில் ஒரு காருண்ய நிலையம்" என்ற தலைப்பில் புகைப்படங்கள் சகிதம் கட்டுரையைப் பிரசுரித்திருந்தன. அச் செய்தியைப் படித்த மக்கள் அங்கு சென்று சுற்றிப் பார்த்ததுடன், தங்கள் கருத்துக்களை அங்குள்ள பார்வையாளர் குறிப்பேட்டில் பதிவு செய்தனர். அத்தோடு, விடுதியைப் பார்வையிட்ட தனவந்தர்கள் பண உதவியும் செய்தனர்.

அதே கிராமத்தில் ஒரு முற்போக்குக் கொள்கையால் ஒருவர் இற்றைக்கு 32 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருக்கிறார். தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் வாழ்ந்த சத்தியமனை வீட்டில் திருத்த வேலைகளைப் பொறுப்பெடுத்தார் வேலழகன். இந்த இலங்கை மணித்திருநாட்டில் தமிழ், சிங்களம், முஸ்லீம் ஆகிய மூன்று இனங்களும் ஒரு தாய் பிள்ளைகள் போல எந்த நாளும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பார் அவர். நமக்குள் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் முன்னால் தாழ்ந்து விடுவோம் என்றும் நமது பலமே எதிரியைத் தோற்கடிக்க முடியும் என்ற கொள்கையுடன் வாழ்ந்தவர்.

இந்த நாட்டிலே தீண்டாமை என்ற கொடிய நோய் தமிழ் மக்களை ஆட்டிவைப்பதனால் ஆலயப் பிரவேசம், தேநீர்க்கடை உரிமைப் போராட்டம் ஆகிய போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியும் தானும் ஒருவராகக் கலந்துகொண்டு பல தடியடிகளை உடம்பிலே தாங்கியவரென்றும் அந்தத் தடியடியால் எலும்புகள் நொருக்கப்பட்டமையால் பாதி வயதிலேயே மறைந்தவரென்றும் தேவகுமார் மூலமாக கேள்விப்பட்டிருக்கிறார் வேலழகன். அவர் சைக்கிளில் போகும் போது வேலழகன் சிறுவயதில் பார்த்தும் இருக்கிறார். அவரோடு பேசிப் பழக வேண்டுமென்ற ஆவலிருந்தும் வாய்ப்புகள் கைகூடவில்லை.

தேவகுமார், சிறுவயதில் பெற்றாரை இழந்து அம்மம்மா, இளைய சகோதரர்கள் ஆறுபேர், வீட்டில் வறுமை, அதனால் வேலைக்குப் போக வேண்டும் என்ற கட்டாயம். இதனால்தான் தனது குடும்பத்தில் இரண்டு தம்பிமாரின் திருமணங்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள முடிந்தது. படித்திருந்தால் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கொள்கையில் சகோதரர்களை நன்கு படிக்க வைத்தார்.

"மணியத்தார் வீட்டுக் காற்றுப் பட்டதோ?" என்று நண்பர்கள் வினவுவார்கள்.

"நல்லது, எதுவாக இருந்தாலும் அதை நான் துணிவாக ஏற்றுக் கொள்வேன்" என்று துணிகரமாகப் பதில் கூறுவார் தேவகுமார்.

அண்மையில் கே. ஏ. சுப்பிரமணியத்தார் வாழ்ந்த சத்தியமனை இல்லத்தின் ஒரு பக்கத்தில் அன்னாரது நினைவாக ஒரு நூலகம் கட்டப்பட இருப்பதனை வேலழகன் மூலமாகத் தேவகுமார் கேள்விப்பட்டிருந்தார். "அந்தப் பெரியவரை நினைவு கூருவதற்கு இது நல்ல சந்தர்ப்பம். நாங்கள் எங்களால் ஆன எல்லா உதவிகளையும் நூலக இயக்குனரான திருமதி சத்தியமலர் இரவீந்திரன் அவர்களுக்கு செய்ய வேண்டும்" என அப்போதே வேலழகனிடம் தேவகுமார் சொல்லியிருந்தார். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் நூலகக் கட்டடம் நிறைவை எட்டித் திறப்பு விழாக் கண்டது. அந்தத் திறப்பு விழாவுக்கு ஊர் மக்கள் மாத்திரமல்ல, நாட்டிலுள்ள அறிஞர் பெருமக்கள் யாவரும் வருகை தந்திருந்தனர். தேவகுமார் குடும்பத்துடன் அசோக்குமார், சரத்முத்தட்டுவேகம, டாக்டர் திலினி பிரேமலால் குமாரசிறி போயிருந்தனர்.

அந்த வீடு ஒரு கையொழுங்கையில் அமைந்திருந்தாலும், நூலக நுழைவாயில் பெரிய முகப்பில் 'வருக வருக' என்ற வாசக பனருடன் காட்சியளித்தது. வழியில் தென்னங்குருத்துத் தோரணங்களும் பூமாலைகளும் கட்டப்பட்டிருந்தன.

உள்ளே அரிவாளும் சம்மட்டியும் சின்னம், பூரண கும்பம், குத்துவிளக்குகள், பன்னீர்ச் செம்பு, வாழை இலையில் அரிசியைப் பரப்பிப் பூரண கும்பத்தை வைத்து, அதில் மாவிலை, முடித்தேங்காய் வைத்து, அதன் மேல் ஒரு பூவும் வைக்கப்பட்டது. இவற்றுடன் சிறப்பாக வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, விபூதி, சந்தனம், குங்குமம் முதலானவையும் வைக்கப்பட்டன.

ஊதுபத்தியின் நறுமணம் சுற்றாடலை வாசனைமயமாக்கி இருந்தது. அழகிய சிறுமிகள் இரு மருங்கும் நின்று வருவோருக்குப் பன்னீர் தெளித்துக் கையில் கற்கண்டும் ஒரு நிகழ்ச்சி நிரல் அறிவித்தல் கடதாசியையும் கையளித்தனர். மேடையில் அநேக புதுமுகங்கள் இருந்தன.

தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தாரின் புகைப்படம் மாலை போடப்பட்டிருந்தது. அதனைவிட அன்னாரது வெண்கலச்சிலையும் இந்திய விற்பன்னரின் கைவண்ணத்தில் தத்ரூபமாகக் காட்சியளித்தது. அந்தக் கட்டிடத்தின் கீழ்த்தளத்தில்தான் திறப்புவிழா நடைபெற்றது. வருகையாளர்கள் மேல் தளத்தையும் படிக்கட்டு வழியே சென்று பார்வையிட்டுத் திரும்பினர்.

நிகழ்ச்சி நிரலில், தோழரின் பழைய நண்பரும் இன்றுவரை வாழ்ந்துகொண்டிருக்கும் புகழ்பெற்ற கவிஞரும் ஓய்வுபெற்ற பேராசிரியருமான சிவசேகரம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். திறந்து வைத்து 5 நிமிடங்கள் கழித்துத்தான் நல்லப்பு உள்ளே நுழைந்தார். அந்தக் கட்டிடம் முழுவதும் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. கட்டிடத்தைக் கடந்து வெளிப்புறத்திலும் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு தனது உரையில் தோழருக்கும் தனக்கும் ஏற்பட்ட அறிமுகத்தைக் கூறி, தான் மாணவனாக இருந்த காலத்திலேயே தோழர் அவர்கள் தனது தொண்டூழியச் சேவையில் இறங்கிவிட்டாரென்றும் கூறி, அவரது அஞ்சா நெஞ்சுரத்தையும் மரணம் வந்த போதும் கூட 'விடை பெறுகிறேன்' என்ற மன வலிமையையும் எடுத்துரைத்தார். கேள்விப்பட்டுக் கேள்விப்பட்டு ஆண்களும் பெண்களும் பள்ளி மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களுமாக அந்த வளவே நிரம்பி வழிந்தது.

வருகையாளர்களுக்கு அவரவர்கள் விருப்பத்திற்கு அமைவாகக் குளிர்பானம், தேநீர், வெறும் தண்ணீர், சிற்றுண்டிகள் என்பன வழங்கப்பட்டன. மதியம் 1.00-2.00 மணி வரை மதிய போசனம் வழங்கப்பட்டது. வடை, பாயாசம், வாழைப்பழம் என்பனவும் பகிரப்பட்டன. கட்டிடத்துள் மின் விசிறிகள் இணைக்கப்பட்டிருந்ததால் பார்வையாளர்கள் களைப்பின்றி உரைகளைச் செவிமடுத்தனர்.

சிங்கள மொழியில் உரையாற்றிய சரத்முத்தட்டுவேகமவின் பேச்சை மும்மொழி வல்லுநர் டாக்டர் திலினி பிரேமலால் குமாரசிறி மொழி

பெயர்த்துத் தமிழில் கூறினார். அதேபோல கண்டியிலிருந்தும் மட்டக்களப்பிலிருந்தும் முஸ்லீம் அறிஞர்கள் வந்திருந்தனர். அவர்கள் தமது உரையில், மறைந்த தோழர் பங்குபற்றிய ஊர்வலங்களில் தாங்களும் மாணவர்களாகக் கலந்துகொண்ட அந்த உருக்கமான நிகழ்ச்சியைக் கேட்போர் கண் முன் கொண்டு வந்து நிறுத்தினர்.

கன்சூர் என்ற முஸ்லீம் தோழர், தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் உடல் நொருக்கப்பட்டிருந்த 1969ம் ஆண்டில், தான் அவருக்குப் பணிவிடை செய்யும் பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டேன் என்று கூறினார். அவரே இப்போது முடி யாவும் நரைத்துக் கிழவனாகக் காட்சியளித்தார். இலங்கை புதிய சனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

ஏற்கனவே கட்சியின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட துடிப்பான வாலிபராக விளங்கி வரும் திருமலையைச் சேர்ந்த மயூரன் என்பவர் தான் கட்டாயம் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலினால் வந்திருப்பதாகக் கூறி, இந்தத் தோழர் வாழ்ந்த காலத்தில் நான் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவனாகத்தான் இருந்திருக்கிறேன் என்று கூறி, அன்னாரைப் பின்பற்றி இதய சுத்தியுடனும் மனித நேயத்துடனும் வாழ நாம் அனைவரும் சுயநலம் விடுத்துப் பொதுநலம் காப்போமெனக் கூறினார்.

அடுத்ததாகச் சுழிபுரம் குகபூஷணி இராமலிங்கம் என்ற இலங்கை வங்கி ஓய்வு பெற்ற பெண்மணியும் இலக்கணச் சுத்தமாகக் கவிதைகளில் அதிநுணுக்க இலக்கண வரம்புகளையுடைய கலிப்பா, கட்டளைக் கலித்துறை ஆகியவற்றை இயற்றக்கூடிய திறமை படைத்த அந்தப் பெண்மணி அழகு தமிழில் உரையாற்றினார்.

“இந்தப் பெரியவர் சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் போராட்டங்கள், ஊர்வலங்களில் தடியடிபட்டு நோயாளியாகி மறைந்தவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஒருநாளாவது அவரைக் கண்டு பழகுகிற வாய்ப்புக் கிட்டவில்லை என்று கவலைப்படுகிறேன். அவரது துணைவியார் தனது வேலைக்காக சுழிபுரம் டாக்டர் தம்பையா அவர்களிடம் சிங்களம் படிக்க வந்தபோது, சந்தித்து இருக்கிறேன். அவர்தான் வேலை பார்த்துக் குடும்பத்தை, குழந்தைகளைப் பாதுகாத்த ஒரு பொறுப்புணர்வுள்ள மனைவியாக, தாயாக வாழ்ந்திருக்கிறார்.

*அவரது மூத்த மகன் சிறைப்பட்டிருந்த வேளையில் எனது சகோதரி துளசி என்பவர் இந்தத் தாயாரை எங்கள் இல்லத்திற்கு அழைத்து வந்து உணவளித்து உபசரித்தார். அவர் வேலை பார்த்த இடமும் ஒரு வாய்ப்பாகிப் போய்விட்டது. ஏற்கனவே எங்கள் மூத்த அக்காவின் நெருங்கிய நண்பியாகவும் இருந்திருக்கிறார். எங்கள் மூத்த அத்தானின் மாணவியாக மெய்கண்டானில் படித்திருக்கிறாரென அறிகிறேன்.*

*தனது கணவனின் பொது வாழ்வுக்கு எந்தவித இடையூறுமின்றி அவருடைய அடியொற்றி வாழ்ந்த இந்த அக்காவின் சார்பாக இங்கு நான் உரை நிகழ்த்த அழைக்கப்பட்டேன். ஆலயப் பிரவேசம், தேநீர்க்கடைப் பிரவேசம் என்ற செயல்கள் ஒடுக்கப்பட்ட மக்களைத்தான் தாக்கியது. மேட்டுக்குடி மக்களுக்கு அப்படியொரு போராட்டமே தேவைப்படவில்லை.*

*அந்தப் போராட்டங்களைத் தனி ஒருவரால் செய்ய முடியாது. ஒரு முற்போக்கு அணி தலைமை தாங்கினால் தானே போராட்டத்தை முன்னெடுக்க முடியும். இதனால் தலைமை தாங்குபவர் எதிரிகளின் தாக்குதலுக்கும் முகங்கொடுத்து ஆக வேண்டுமல்லவா! அதற்குரிய துணிச்சலும் நெஞ்சுரமும் ஒருசிலருக்குத்தான் வரமாக வந்து வாய்த்திருக்கிறது. அந்தவகையில், மறைந்த பெரியவர் மணியம் தோழர் அவர்கள் நெஞ்சுரம் வாய்ந்த தியாகியாகக் கருதப்படுகிறார். அதனாற்தான் அவர் மறைந்து 32 ஆண்டுகள் கழிந்தும் மக்கள் மனதில் வாழ்கிறார்" என்று கூறிவிட்டார்.*

*குகாவின் அறிமுக அறிஞர்கள் சமுகமளித்திருந்தனர். அவர்களுள் கவிஞர் அழ. பகீரதனும் ஒருவர். அவரைத் தொடர்ந்து கவிஞரும் உரையாற்றினார். அவரது உரையில், "தோழர் அவர்கள் தான் வாழ்ந்த காலத்தில் ஒரு குறிப்பிட்ட முக்கியமான சம்பவங்களில் கலந்துகொண்டு தனது தேகம் பாதிக்கப்படுமளவிற்கு ஊர்வலங்கள், போராட்டங்களில் தலைமை தாங்கி உடல்நிலை பாதிக்கப்பட்டார். அந்தக் காலத்தில் நான் மிகச் சிறுவனாக இருந்ததால், மற்றவர்கள் கூறிய விபரத்தையே நான் இங்கு குறிப்பிடுகின்றேன். மனிதனாகப் பிறந்த ஒருவன் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுப்பதற்கும் தலைமை தாங்கி பொலிஸ் தடியடிகளைத் தாங்குவதற்கும் அதற்கொரு பெரிய மனத்திடம் இருக்க வேண்டும். அப்படி ஒரு செயலை மனதால் நினைத்துப் பார்க்கவே பெரிய திகிலாக இருக்கிறது. ஆகவே, அவர் நாம் வாழும் காலத்தில் நமது*

மண்ணில் வாழ்ந்தவர் என்ற பெருமையை மாத்திரம் உணர்கிறேன்'' என்றார்.

அவரை அடுத்து மறைந்த தோழரின் தோழமைக்குரிய தோழர் சட்டத்தரணி சோ. தேவராசா தனது உரையில், ''அண்மையில் ஒரு சிறிய விபத்துக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அந்த வலியையும் நோவையும் என்னால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. வெளிக்காயம் ஆறினாலும், உள்நோவு இன்றுவரை தொடருவதாக உணர்கிறேன். மறைந்த தோழர் மணியத்தாரின் இறுதி நிகழ்விலும் இரங்கலுரை சொல்கிற வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. அவரைப் போன்ற நெஞ்சுறுதியும் மனத்திடமும் எல்லோருக்கும் வாய்க்காது. சிலர் இதற்கெனப் பிறப்பெடுக்கிறார்கள் போலும். கடதாசித் தாள்களை ஒன்றோடொன்று இணைக்கக் குண்டூசி பாவிக்கும் போது அது குத்தி விரலில் இரத்தம் வரும்போது அந்த வலியையே தாங்க முடியாமல் தவிக்கிறேன். அவர் எப்படி இந்தப் பாரிய காயங்களை, பொலிஸாரிடம் அடிவாங்கி எலும்பு நொருங்குதலைத் தாங்கினாரோ தெரியவில்லை. அந்தக்காலம், நான் திருநெல்வேலிப் பாடசாலையில் விடுதி மாணவனாக இருந்த காலமென நினைக்கிறேன். அவர் நாங்கள் பிறந்த கிராமத்திலும் கொஞ்சக் காலமேனும் வாழ்ந்தாரெனப் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். நான் இன்றுவரை கொள்கைப் பிடிப்புடன் வாழ்கிறேனென்றால், அந்தச் செயலானது தோழர் காட்டிய வழியாகும்' என்று தனது உரையை முடித்தார்.

தேவகுமாரின் மகள்மார் பூரணி, ஆரணி இருவரும்

*'சத்தியமே இலட்சியமாய்க் கொள்ளடா,*  
*தலை நிமிர்ந்து உனை உணர்ந்து செல்லடா,*  
*எத்தனையோ மேடு பள்ளம் வழியிலே- உன்னை*  
*இடற வைத்துத் தள்ளப்பார்க்கும் குழியிலே,*  
*அத்தனையும் தாங்கிக் காலை முன் வையடா- நீ*  
*அஞ்சாமல் கடமையிலே கண் வையடா!*

என்ற பாடலை தமது இனிய குரலில் பாடினார்கள்.

காட்டுப்புலம் அம்மாச்சி தங்கமுத்து அநாதைச் சிறுவர்களின் இல்லம் சார்பில் இரண்டு சிறுமிகள் நடன உடையுடன் வந்து, 'சங்கே முழங்கு வெற்றிச் சங்கே முழங்கு... சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு...' என்ற பாடலுக்கும் பாரதியாரின், 'விடுதலை! விடுதலை!! பறையருக்கும் இங்கு தீய புலையருக்கும் விடுதலை! மறவருக்கும்

குறவருக்கும் விடுதலை!' என்ற பாடலுக்கும் தமது சிறிய கை விரல்களை அசைத்து அபிநயம் பிடித்து நடனமாடிச் சபையோரின் கரகோஷங்களைப் பெற்றார்கள்.

அந்த இடத்திலேயே சகலருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. ஒரு தட்டிலே வாழை இலையை வட்டமாக வெட்டி அதில் சோறு, கீரை, பருப்பு, கிழங்கு, குழம்பு, வெள்ளைக்கறி, கரட் சம்பல், பப்படம் என்பன பகிரப்பட்டன. சாப்பிட்டு முடிந்ததும் கை அலம்ப ஒரு வேசினும் கெண்டி போன்ற ஒரு பாத்திரமும் கையிலெடுத்தபடி ஒரு பெண்மணி வந்துகொண்டிருந்தார். அவரைத் தொடர்ந்து கையின் ஈரத்தைத் துடைக்க 'ரிஸ்யூ' பேப்பரையும் அதை வாங்க ஒரு பையுமாக இன்னொரு பெண்மணி வந்தார். அவர்களின் பின்னால் பாயாச ரம்ளர்களுடன் இன்னொருவர் வந்தார். குடித்து முடித்தபின் வெற்று டம்ளர்களை வாங்க இன்னொருவர் வந்தார்.

உண்ட களைப்புத் தொண்டருக்கும் உண்டு என்றொரு வாக்கியம் உண்டல்லவா! அதன்படி வயோதிபர்கள் கீழே இறங்கி வெளியே போடப்பட்டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்தனர். இளைஞர்கள் படியேறி மேல் தட்டுக்குச் சென்று காற்று வாங்கினார்கள். கீழ்த்தட்டு, 'மணியம் வாசிக்கும் கூடம்' என்று எழுதப்பட்டிருந்தது. மேலே, 'சத்தியராசன் கேட்போர் கூடம்' என்று எழுதப்பட்டிருந்தது.

தோழரின் மூத்த மகனாகிய மீரான் மாஸ்ற்ரர் என்று நண்பர்களால் அழைக்கப்படும் சத்தியராசனின் நினைவாக மேல்தட்டு அமைக்கப்பட்டிருந்தது. இளைஞர்கள், யுவதிகள் தங்கள் பட்டிமன்றம், வழக்காடு மன்றம், பேச்சுப் போட்டி முதலியவற்றை அங்கே நடத்தலாம். அதற்குரிய முன்னறிவித்தலை மேற்படி நூலக நிர்வாகசபையின் கவனத்திற்குக் கொண்டு வந்து அனுமதி பெற வேண்டும். ஏனெனில், ஒரே நாளில் ஒன்றிற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு உத்தரவு கேட்கப்பட்டால் அவர்களது திகதிகளை மாற்றியோ அல்லது வேறு மாற்று வழிகளைக் கையாள்வதற்கோ முடியுமல்லவா! இதற்கென ஒன்பது பேரைக் கொண்ட ரஷ்ட்டி *(Trust)* அதாவது, நிர்ணயசபை ஒன்றினை நிலைய இயக்குநரான திருமதி சத்தியமலர் இரவீந்திரன் அவர்கள் நியமித்திருந்தார். அவர்கள் ஒன்பது பேரும் இந்த நிலையத்தைச் சுற்றி வாழ்பவர்கள் ஆவர். ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்கள், புத்திஜீவிகள் ஆகியோரும் அவர்களுள் அடங்குவர். சில இளைஞர்கள் தாமாகவே முன்வந்து தமது பெயரைப் பதிந்துகொண்டனர்.

அவர்கள் எல்லோரும் ஒருமுகமாக ஒரு தீர்மானத்துக்கு வந்தனர். அதாவது, வாசக அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தமது பங்காக அனுமதி அடையாள அட்டையும் சேர்வு இடாப்பு அங்கத்துவ நிதியாகக் குடும்ப வருவாய்க்கு அமைய ரூபா 50 தொடக்கம் ரூபா 5000 வரை அந்நிதி நிர்ணயிக்கப்படல் வேண்டும் என்பதும் கூறப்பட்டது. அதனை ஆக்கவும் கட்டுக்கோப்பாக வைத்திருக்கவும் திருமதி சத்தியமலர் அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டார்.

எவ்வளவு நாள் கட்டிடத் தொழிலாளர்களுடன் வழிகாட்டியாக நின்று சண்டை பிடித்தும் அவர்கள் களைப்புற்ற நேரத்தில் தேநீர் தயாரித்துக் கொடுத்தும் வெயில் கொடுமை தாங்க முடியவில்லை என்று சொன்னபோது, ஐஸ்கிறீம் வாங்கிக் கொடுத்தும் ஆதரித்து இருக்கிறார். இவை யாவும் உங்களை இங்கு வேலைக்கு அனுப்பிய 'என்ஜினியரைப்' பொறுத்த விடயம் என்று கூறியிருக்க மாட்டார். ஒருசில நாட்களில், "அன்ரீ! எங்களுக்குப் பிரியாணி வாங்கித் தாங்க' என்று கேட்டால், சிரித்த முகத்துடன் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிறார். இந்த நற்குண- நற்செயல்களை என்ஜினியர் திரு. ராஜாவும் அறிவார். மேல் கூரை கோப்பிச ஆசாரி திரு. விநோதரனும் மின் தொழில்நுட்ப வல்லுநர் திரு. விஜயகுமாரும் அறிவார்கள்.. அவர்கள் மேற்படி கட்டிட நிர்வாக பரிபாலனசபையின் அங்கத்தவர்களே!

எத்தனையோ அறிஞர் பெருமக்கள் தமது சொந்தச் சேமிப்பான நூல்களை மேற்படி 'மணியம் வாசிப்போர் கூடத்திற்கு' அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். அவர்களுள் தமிழ்நாடு தமிழறிஞர் பெ.சு.மணி அவர்கள், சவுத் விஷன் புக்ஸ் நிறுவன ஆசிரியர் பாலாஜி அவர்கள், இலக்கிய வட்டாரத் தோழர் இராதாகிருஷ்ணன் அவர்களுடன் இலங்கையின் பிரபல எழுத்தாளர் நீர்வை பொன்னையன், பேராசிரியர் கைலாசபதி, என். கே. இரகுநாதன், தோழர் சந்திரா நவரத்தினம் போன்றவர்களின் சேகரிப்பான நூல்களும் வந்து சேர்ந்தன. அவை யாவும் அகர வரிசைப்படி செய்யாமல் அன்பளிப்புச் செய்த அன்பர்களின் பெயரில் இவை யாவும் இன்னாரின் அன்பளிப்பு என்ற 'லேபல்' ஒட்டப்பட்டுத் தனித்தனியாக அலுமாரித் தட்டுகளில் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.

ஒருவரும் ஒரு புத்தகத்தையாவது நிலையத்தை விட்டு வெளியே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என்ற நிபந்தனை

திட்டவட்டமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. காலப்போக்கில் கடதாசிகள் பழுதுபட்டுப் போகாமல் லாம்பிச்சை வேர், பூச்சி உருண்டை (நப்தலீன்) துணியில் முடிந்து கட்டி வைக்கப்பட்டன. இறாக்கைகள் யாவும் 'வானிஸ்' அடிக்கப்பட்டுப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன.

ஏற்கனவே சத்தியமனை இல்லத்தில் திருமதி மணியத்தின் தேவார திருவாசகப் புத்தகங்களுள் யாழ்ப்பாண ஆலயங்களின் வரலாற்று நூல்களும் இடம்பெற்றன. சைவ சமய அன்பர்கள் அவற்றை எடுத்து வாசிக்கலாம். மறைந்த தோழர் மணியத்தாரின் சேகரிப்பான பல நூல்களை அவரின் தோழர்கள் ஏற்கனவே எடுத்துச் சென்று விட்டனர். அவற்றை இன்றுவரை தரவேயில்லை. மணியத்தாரின் இந்திய, ரஷ்ய, சீன, கியூப, ஆபிரிக்க, வியட்நாம், கம்போடியா, கொரிய, மலேசியா ஆகிய நாட்டு விடுதலை பற்றிய பல நூல்கள் அவற்றுள் அடங்கும்.

விரிவுரையாளரும் அன்னாரது மருமகனுமாகிய திரு. இரவீந்திரன் அவர்களது BA, MPhil, PhD வரை கற்ற இலங்கை இந்தியப் புத்தகங்கள் அவரது மனைவியார் விமானம் மூலம் 2011ம் ஆண்டு நாட்டுக்குக் கொண்டு வந்த புத்தகங்களுடன் அவர்களது குழந்தைகள் படித்த இந்திய, அமெரிக்க நாட்டு விஞ்ஞான ரீதியான ஆங்கில மொழிப் புத்தகங்களும் சில பிறமொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்ட புத்தகங்களும் அடங்கும். மேற்படி விரிவுரையாளர் இரவீந்திரன் அடிப்படையில் ஒரு விஞ்ஞான ஆசிரியர் ஆவார். பௌதீகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் நூல்களும் அவற்றுள் அடங்கும்.

அவற்றை விட திருமதி மணியம் அவர்கள் சிங்கப்பூரில் வசித்த 1998-2011 வரையிலான காலத்தில் அங்கு கவிமாலை, கவிச்சோலை என்ற அமைப்புகளூடாக வெளியீடு கண்ட 'கூடி வாழ்த்தும் குயில்கள்' என்ற நூலுடன் கவிச்சோலை அமைப்பின் வெளியீட்டு நூல்களும் உள்ளடங்கும்.

அவற்றைவிட வொல்காவிலிருந்து கங்கை வரை என்ற நூல் தொடக்கம் பகத்சிங் என்ற விடுதலை வீரனின் வரலாறு, ரஷ்யப் புரட்சி, சீனப் புரட்சி, ஆபிரிக்கப் புரட்சி, பிரான்ஸ், செக்கோசிலவாக்கியா, கொரியா, வியட்நாம், கம்போடியா ஆகிய நாட்டு விடுதலையை விபரிக்கும் நூல்களும் அடங்கும்.

திரு. ந. இரவீந்திரன் அவர்களால் எழுதப்பட்ட "பாரதியின் மெய்ஞ்ஞானம்" தொடக்கம் மார்க்ஸிஸக் கண்ணோட்டத்தில் அமைந்த சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் என்ற பல நூல்களும் அடங்கும். தோழர் சி. கா. செந்தில்வேல் எழுதிய தோழர் மணியம் என்ற நூலுடன் வட்டுக்கோட்டையிலிருந்து முல்லைத்தீவு வரை என்ற நூலும் அடங்கும். கவிஞர் இ. முருகையன் எழுதிய கவிதை நூல்களையும் அவரது மகனான திங்கள் அனுப்பிவைத்திருந்தார். கட்சியின் இலக்கியச் சஞ்சிகையான தாயகம் நூல்களும் அல்வாய் பரணிதரன் அவர்களால் வெளியீடு கண்ட ஜீவநதி என்ற சஞ்சிகையும் தோழர் அழ. பகீரதன் அவர்களின் எங்கள் முற்றம் காலாண்டு சஞ்சிகையையும் அங்கு காணலாம். முஸ்லீம் அறிஞர்களான பேராசிரியர் நுஃமான் தொடக்கம் வஹாப்டீன், சிராஜ் மசூர் வரையான நூல்கள், தெளிவத்தை யோசப் தொடக்கம் தெணியான் வரையிலான எழுத்தாளர்களின் படைப்புகளையும் காணலாம்.

"ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன" என்பது ஆன்றோர் மொழி. அந்தவகையில், சுழிபுரம் கிராமத்தில் இந்த நூலகம் அமைக்கப்பட்டிருப்பது அக்கிராமம் செய்த புண்ணியம் என்றுதான் கூறவேண்டும். காட்டுப்புலம் அநாதைச் சிறுவர்கள் விடுதி மாணவர்களும் இந்த நூலகத்திற்குச் சென்று படித்துப் பயன்பெறுவர்.

ஒவ்வொரு நல்ல மனிதர்களின் நினைவாக இத்தகைய நூலகங்கள் கட்டுவது, அநாதைச் சிறுவர்கள் விடுதி கட்டுவது, நாட்டுக்குப் பயன்கொடுக்கும் மரக்கன்றுகள் நாட்டுவது என்பன வரவேற்கத்தக்க விடயம். இத்தகைய நல்ல காரியங்களைத் தொடர்ந்தும் செய்த வண்ணம் இருக்கின்றனர் நாகலிங்கம் குடும்பத்து வாரிசுகள்!

திரு. நா. தேவகுமார் அவர்கள் தனது சகோதரங்கள் அனைவரும் தாம் பிறந்த இலங்கை நாட்டிற்கு விசுவாசிகளாகவும், மனித நேயமுள்ளவர்களாக அம்மாச்சி தங்கமுத்து வளர்த்த பெருமைக்குள்ளவராக மிளிர்கிறார். அவரது அன்றாட வாழ்வின் நடைமுறைகள் யாவும் மனிதகுல மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டதே மூல காரணமாகும். அவர் என்றென்றும் மனிதர்களின் மனதில் வாழ்ந்துகொண்டே இருப்பார்!

✿✿✿



## வள்ளியம்மை சுப்பிரமணியம்

எண்பது அகவை கடந்து வாழ்ந்து வரும் வள்ளியம்மை சுப்பிரமணியம் தனது வாழ்வின் அனுபவங்களிலிருந்தும் தேறி 21ம் நூற்றாண்டின் இளைய தலை முறையினர் எப்படி பண் பட்டு வாழவேண்டும் என்ற தனது எதிர்பார்ப்புக்களை எழுத்துகளாக வடித்து 'கற்க கசடற' எனும் இந்த குறு நாவலைத் தந்திருக்கின்றார்.

இளமையில் பாலபண்டிதர் தேர்வில் தேறி வீரகேசரி, கலைமதி போன்ற பத்திரிகைகளில் சிறுகதைகள் எழுதி வந்த இவர் இல்லறவாழ்வில் அடியெடுத்ததன் பின் நெசவு ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்தவில்லை எனிலும் முதுமை யில் சிங்கப்பூரில் தனது மகனுடன் வசித்துவந்த காலத்தில் கவிதைகள் பல யாத்து அந்நாட்டில் விருதுகளைப் பெற்றுச் சிறந்திருக்கின்றார். நவீன தொழில்நுட்ப கருவிகளையும் பயன்படுத்தி நேரடியாக கணனி எழுத்துருவில் ஆக்கங் களை பதியும் ஆற்றல் பெற்றவர்.

நோயுற்ற போதும் தனது எழுத்து எனும் இயக்கத்தை விடாது அபரிமிதமான ஞாபக சக்தியினால் எம்மை வியப்பிலாழ்த்தும் தோழர் வள்ளியம்மை சுப்பிரமணியம் மேலும் நூற்றாண்டு கண்டு வாழ்ந்திட வாழ்த்துகளை உதிர்க்கும் இத்தருணம் அவரது இந்த அனுபவங்களை இளைய தலைமுறை கற்றுணர்ந்து தெளிவு பெற வேண்டும் என்பது எமது ஆவல்.

அழ. பகீரதன்

சத்தியமனை வெளியீடு

ஜே.எஸ். பிறின்ரேஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு